உ

முருகன் துணை

மதுரை எம். பாலுசாமிநாயுடு அவர்களியற்றிய

# முருகன் திருமணம் புரிந்த

# வள்ளி அம்மானை.

இஃது

ஷையார் கனிஷ்ட சகோதரன்

எம். பாலகிருஷ்ண நாயுடு,

அவர்கள் விருப்பத்தின்படி

மதுரை வித்துவான்

த. குப்புசாமி நாயுடு,

அவர்களால்

பார்வையிடப்பெற்று

மதுரை

விவேகானந்தா பிரஸில் பதிப்பிக்கப்பெற்றது.

ரிஜிஸ்டர் காப்பிரைட்] 1932. [விலை ரூ. 0—௪—0

15 MAR 1932



பாலசுப்பிரமணியன்.

உ

முருகன் துணை.

# முருகன் திருமணம் புரிந்த

# வள்ளி அம்மானை.

வெண்பா.

விநாயகர் துதி.

வள்ளியி னம்மானை மாநிலத்தோர் கொண்டாடிப்
புள்ளிமயிற் சேயைப் புகழவே—தெள்ளுதமிழ்
சீர்கோட்டு வேதமுனி செப்புமுயர் பாரதந்தீட்
டோர்கோட்டு வாரணத்தை யுன்னு.

அம்மானை.

ஆதியா யெங்கும் அணுவுக்கணு வாகியொளிர்
சோதியாய் ஞானச் சுடராய்த் தனிமுதலாய்
அப்பிருக்குஞ் செஞ்சடிலத் தண்ணல் திருமகவாய்
எப்பொருட்கும் மிக்க இறையா மெனவிலங்கி
வேலை வளைந்திருக்கும் மேதினியு ளோரிபற்றும்
வேலை களில்வேறு விக்கினமெல் லாமகற்றும்
ஒருகோ டிருசெவியும் மும்மதநால் வாயிஞெடு
அருகோடி நீமுன்வந் தைங்கரனே யான்சிறியேன்
கந்தரும் வள்ளியருங் காந்தருவ மாமணத்தைப்
பைந்தமிழம் மானையதாய்ப் பாடவர மேயருள்வாய்.

முருகக்கடவுள் துதி.

கந்தா குமரா கடம்பாமந் தாகினியாள்
மைந்தா விசாகாநல் வானவர்சே னுபதியே
பிரணவத்தி னுட்பொருளைப் பிஞ்ஞகற்குப் பேசுஞ்
சரஹணப வாமுருகா சண்முகச டாக்கரனே
அம்மானே தான்பயின்ற அம்மானை நீமணந்த
அம்மானை பாடவெனக் கன்பாக வாக்கருள்வாய்.

சரஸ்வதி துதி.

விண்ணுகந்த நான்முகவன் விள்ளுமணி நாவகத்தும்
தண்ணுகந்த பத்மா சனத்தும் மறையிடத்தும்
ஏதமற வேகற் றிருப்போர் திருவுளத்தும்
நீதமுற வெப்போதும் நீங்காத பாரதியாம்
சரஸ்வதியே வள்ளிகந்தன் றன்னைச்சே ரம்மானைக்
கிருசரணஞ் சூட்டியெனக் கின்பமுடன் வாக்கருள்வாய்.

மகாவிஷ்ணு துதி.

எழுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

ஒருசக டுதைத்தும் புள்ளின்வாய் கிழித்தும்
உம்பலின் வெண்மருப் பொசித்தும்
எருதினை யடர்த்துங் காட்டழ லுண்டும்
இசைவலோன் முனிவில்வந் துற்ற
மருதிடை தவழ்ந்தும் பூதனை யுயிரை
மாய்த்துமோர் பாந்தள்மேல் நடிக்குந்
திருமகள் தலைவ னிரண்டுபூங் கமலச்
சேவடி யுளத்தினிற் சேர்ப்பாம்.

சிவபெருமான் துதி.

கங்கைவார் சடையும் அம்புலிப் பிறையுங்
கடுவில கியதிரு மிடறும்

அங்கைமான் மழுவும் அரவபூ டணமும்
அத்தியு மிதழிமா லிகையும்
மங்கையோர் பாலும் வயங்கிய சிவனே
வள்ளியைக் குகன்பெறுங் காதை
சங்கைநே ராதம் மானையாய்ப் பாடத்
தமியனுக் கருள்புரி குவையே.

பராசத்தி துதி.

எண்சீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

ஆதிபரம் பரையாகிச் சத்துச் சித்தோ
டானந்த மயமாகி யகண்ட மாகிச்
சோதிநிறை வடிவாகி மூலோங் காரச்
சுழிமுனையின் கொழுந்தாகித் தோற்ற மான
வோதியபூ தாதிநிறை புவன மாகி
யுற்றசரா சரப்பொருளி னுண்மை யாகிச்
சாதிகுலம் பிறப்பிறப்பு மூப்பொன் றில்லாச்
சத்திதுணைத் தாட்கமலந் தலைமேற் கொள்வாம்.

ஆக்கியோன் பெயர்.

பூமாதுக் கோர்திலதம் பொன்மா துறைபீடம்
பாமாதுக் காதீனம் பாவாணர் போற்றிமகிழ்
மாமணக்குந் தென்மதுர மாநகரி லேவளரும்
பூமணக்கும் பொற்பாதப் பூவைமீ னாட்சிபதம்
ஒப்பிலா தேபணியும் உண்மைதவத் தோரெவரும்
செப்புங் கவுரிகுலஞ் சேர்பால கோத்திரத்தில்
வந்துதித்த ஞானமணி மன்னவர்கொண் டாடியநற்
சிந்தா மணியாய்த் திகழுஞ் சிகாமணியாம்
மங்காத் தவயோகம் மாறா தியற்றுமின்ப
பங்காரு சாமியெனப் பார்புகழப் பேர்படைத்து

வேதவே தாந்தமுணர் விற்பனர்கள் தான்மகிழ
நாதநா தாந்தன் நளினமலர்த் தாள்போற்றி
சின்மயதே சோமயன்றன் தீக்ஷை தனையடைந்து
நன்மையருள் தேசிகராம் நாதனவ ரீன்றெடுத்த
சீரிலங்கும் முத்யாலு செய்தவத்தால் வந்துதித்தே
காரிலங்கும் மேனியுறுங் கண்ணன் திருமருகன்
பூங்கமழும் வேலரடி போற்றி முடிவணங்கிப்
பாங்குட னேவளரும் பாலுசா மிக்கவிஞன்.

அவையடக்கம்.

தென்பரங் குன்றில்வளர் தேசிகனு மந்நாளில்
அன்னையாம் வள்ளிமண மாடல்புரி யுங்காதை
தன்னையம் மானையெனச் சாற்ற மிகத்துணிதல்
மின்மினியுஞ் சோதிநிகர் மேவியே காட்டலொக்கும்
வானமை கண்டு மயில்மகிழ்ந்து நின்றாடக்
கானமதில் வான்கோழி கண்டுநின் றாடலொப்பாம்
மாரிதழை யிற்றுங்கி வைத்ததரு பின்பதனை
வீரியமாய்த் தான்சொரிந்த விந்தையது போலாகும்
பூவாலே நாறுமணம் போன்ற கதைபோல
பாவாணர் முன்னே பகருமிவ் வம்மானை
சிற்பமுணர்ந் தோரமைத்த தேசுபெரு மாளிகைநேர்
அற்பக் கறையா னமைத்தசிறு வீடதொக்கும்.

## நாட்டுச் சிறப்பு.

மேகந் திரண்டெழுந்து வேலைப் புனலருந்தி
மாகந் தனிற்பிறந்தே மாதமும் மாரிபெய்யும்
அலைமோதும் வாரிதிசூழ் அம்மைபூ மாதுதனம்
மலையருவி தேனொழுகி வந்துவயு லிற்பெருகும்

வண்டு துவைத்த மலர்கிழிந்து சாரோடி
மண்டுவயல் தேங்கி வளர்க்குஞ்செந் நெற்பயிரை
கன்னல் கதலி கலந்தமது சேரோடி
பன்னந் தளிர்த்தோங்கப் பாயுமஞ்ச ளிஞ்சிகட்கும்
மாவின் கனியுருகி மாதளைச்சா ரோடிணங்கி
பூவின் மணங்கமழும் பொய்கையிடத் தேநிறையும்
புலியும் பசுவும் பொருந்தி யொருதுறையிற்
சலியாமல் நீருண்டு தான்வாழுங் கானகத்தில்
பூனை யெலியும் பொருந்த வுறவாடும்
யானையும் சிங்கமுடன் அன்பாய் விளையாடும்
அரசுபலா தேக்கு அகில்மகிழுங் கொய்யாவும்
புரசுகந்த குங்குமநற் புன்னைமரச் சோலைகளும்
பாதிரி செண்பகமும் பந்திபந்தி யாயிருக்கச்
சாதிமல்லி தேனுகுக்குந் தண்கந்த நந்தனமும்
துத்தாரி யின்னிசைசேர் தும்பியினம் பன்மலரைச்
சுத்திமது வுண்டு சுரதகீ தம்பாடும்
மண்ணரம்பை தாளுட மாவின் குயிற்பாட
விண்ணரம்பை யர்நடிக்க வெட்கிடுவா ரந்தரத்தில்
மாமைசேர் சங்கொலிக்கும் மாமலரின் வாவியதில்
ஆமைகள் தானுலவி அன்பாய்க் குடியிருக்கும்
மிஞ்சிவரும் வெள்ளமதிற் கொஞ்சுஞ் சினவாளை
மஞ்சுசென் றேகிழித்து மாரியுடன் மண்ணிறங்கும்
தேங்காயை வானரங்கள் சென்று கொளவுழவர்
தாங்கிச்சங் கிட்டெறியத் தண்ணிளநீர் கொண்டெறியும்
சங்கினங் கக்குந் தரள மொளிவீசத்
தங்கியடை காக்குமன்னந் தன்னண்ட மாமெனவே
சீதம் வளர்வனசந் தேரியுதிர் முத்தொளியால்
சீதனுதி யாநாட் செழித்தலரும் அல்லிமலர்

இக்குமுற் றிக்கணுச்சற் றேவிட் டுதிர்தரளம்
கொக்குண்டு கக்குங் குளிர்மலர்ச் சோலைதனில்
ஆயர்முல் லைநிலத்தி லன்பாய்க் குழலூத
நேயக் குறிஞ்சிநிலம் நின்றமயில் கண்டுயிலும்
மருத நிலத்திலுயர் வண்டினம்றீங் காரமிட
குருதிவா யன்னங் குறித்துறங்கும் நெய்தநிலம்
வேலை செயிக்கும் விழிமடவா ராடியநீர்
வேலை தனிற்பெருகி மீனுற்றந் தான்மாற்றும்
முருகவிர் பூமாலை மொய்குழலார் செவ்விதழை
அருங்கிள்ளை கண்டுகனி யாமெனக் கவ்விவிடும்
பத்தி யெதுகுலத்துப் பாவைமார் நித்தியமும்
மத்தாற் றயிர்கடைதல் மாகடல்போ லார்த்தமரும்
காடைகவு தாரி கடும்போர் செயவிடுத்து
மேடை மிசைச்சிறுவர் மிக்கமகிழ் வார்திரளாய்
வீரக் கழல்புனைந்த வேந்தர்க ளாடுகளை
சாரயுத்தத் தேவிடுத்துத் தன்னங்கம் விம்மிடுவார்
பத்மமலர் கைத்தலஞ்சேர் பானதொரு கற்பகம்போல்
வித்வஜனர் தங்களையும் வேண்டியமு தூட்டிடுவார்
மனுநெறியும் சாஸ்திரமும் மாறும லவ்வழியே
அனுதினமுந் தன்மா சனமடைந்தோ ரந்நாட்டில்
வில்வாள் கரத்தேந்தும் வேந்தர் கிளைதழைக்க
சொல்மறைத் தேவிரித்துச் சொற்புலவர் தான்றழைக்க
உழவர் குலந்தழைக்க உண்ணமுத மேசெழிக்க
விழவுந் திருநாள் விளங்கியுயர்ந் தெஞ்ஞான்றும்
கன்றைநினைத் தேங்கிவருங் காரெருமை சிந்திடும்பால்
ஒன்ருய் வயல்பெருகி யோங்கவளர்க் கும்பயிரை
தீம்புனல்க ளோடிமிகச் சேர வயல்தோறும்
ஆம்பலரா கம்பாடி யாடவர்க ளேறுழுது

பரம்படித்து வித்துகளைப் பண்பாய் விதைத்திடவே
உரம்பிடித்து நெற்பயிர்க ளோங்கிவள ரக்கண்டு
நற்கமல மாமுகத்தார் நாற்றுநடும் போதினிலே
பொற்கரம் பூண்டவளை பூரித் தொளிமுழக்கும்
கொவ்வைக் கனியிதழார் கூடிக் களைபரிக்கச்
செவ்வையாய் நீதிநெறி தேர்ந்தாரைப் போலாக
அற்புதஞ்சேர் மஞ்சணிற மாகவளர்ந் தேமுதிர்ந்து
கற்புடையார் நாணுதலைக் கண்டு கதிர்சாயக்
கூனிரும்பாற் கொய்துவைக் கோல்நீக்கி நெற்களையும்
தேனிரால் கூட்டலெனச் சேர்ப்பார் களஞ்சியத்தில்
செப்பமுடி கூடாத சீர்பெற் றிலங்குமிக
ஒப்புவமை யென்பதிலா தோங்கும் மகாநாடு
உம்ப ருலகமிதற் கோர்வா றிணையுரைக்கா
நம்பிமக ராஜன் நகரச் சிறப்புரைப்பாம்.

## நகரச் சிறப்பு.

ஆவலுறச் சூழும் அணிவயிரக் கோட்டையினைக்
காவலுறச் சூழகழி கட்செவிநந் நாடடையும்
வாசுகியைக் கஞ்ச மலர்க்கொடியென் றுனையினம்
தேசுபே ரோடையிடஞ் சென்றுகவர்ந் தேயயரும்
கோட்டைச் சுவரண்ட கோளத்தின் மேற்படரும்
நாட்டை விளக்கும் ரவிமதியந் தான்விலகும்
வச்சிரத்தி னலழுத்தி வைத்தபது மைத்திருத்தி
பச்சைச் சுவரேத்திப் பண்பொளிரு கோபுரமும்
தங்கக்கால் நாட்டித் தனிப்பவள மேபரப்பி
எங்குமுளோர் வந்திருக்க வேற்றமணி மண்டபமும்

முத்துமணி மாடங்கள் முன்னணிபொன் மாளிகையும்
பத்தி யுலவும் பளிங்குமணிச் சாவடியும்
செம்பொன் மணிக்குமுடஞ் சேருமுத் துச்சரமும்
ஐம்பொன் மணித்தூண்க ளார்சித்ரச் சாலைகளும்
மானினத்தைப் பார்வையினுல் வாட்டுமக ளீராட
மேனிலா மேடை விளங்கும் மரகதத்தால்
செம்பொன் னணிமாடஞ் சேருங் கொடிபறந்து
அம்பரத்திற் செங்கதிர்க்கு அன்பாய் விசிறியிடும்
அரிவைநுதல் கண்டுவெட்கி யங்கங் குறைமதியைத்
தெரிந்துவிழி நீர்க்காந்தஞ் சிந்தலொப் பாயுருகும்
சந்திரகாந் தம்பெருகுந் தண்புனலை வான்புரவி
வந்திரங்கி யுண்டு மகிழ்ந்துதா கந்தணியும்
பச்சைமே டைக்கிரணப் பண்பொளிரப் புல்லெனவே
இச்சையாய் வான்பசுக்க ளேகவ்வித் தான்வியக்கும்
கலவிதனில் மின்னுர் கழற்றி யெறிந்தபணி
இலகுமணிச் சோதி யிரவைப் பகலாக்கும்
ஊடல்செய் காந்த ஞெளியப் பளிக்கறையில்
ஆடுநிழ லைக்கணவ ராமென்று கும்பிடுவார்
அலவன் கலையை யவிழ்ந்த கலையெனவே
கலவிமட வாரெழுந்து கையாற் றடவிடுவார்
சந்திரனைச் சாளரத்திற் ருன்கண்ட மாமயிலார்
இந்துநிகர் சேடிமுக மென்றங் கருகழைப்பார்
அணிந்த களபச்சாந் தள்ளித் தெருவிறைக்கத்
துணிந்து நடப்பவரைச் சோர வழுக்கிவிடும்.
மேடையா டல்புரியும் மெல்லியர்கள் தன்நுதலும்
சாடையால் ராகுமதி தன்னையறி யாதயர்வான்
மணிதிகழ் மேடைமிசை மங்கை நடமாடல்
அணியார்விண் மங்கைக் கரியநடை காட்டலொக்கும்

செந்தூரப் பொட்டணியுஞ் சேயிழையார் நாடோறும்
பந்தடிக்கும் மேடை பரிமளிக்கும் நாற்றிசையும்
திரிமூர்த்தி கூடத் திரிமூர்த்தி யாகிடவே
அரிய தவமியற்றும் அன்பரோர் பாலிருப்பார்
வேதமுணர் வேதியரும் வில்வேந்தர் வாழ்தெருவும்
நீத வணிகர் நிறைந்துவளர் வீதிகளும்
வித்தைப் பயிராக்கும் வேளாளர் வாழ்தெருவும்
நத்திப் பலகுடிகள் நாடிவளர் வீதிகளும்
பதுமைகள் பற்பலவாம் பார்ப்போர் மனங்கவர்ந்து
விதுவவனைப் போன்று விளங்குகடை வீதிகளும்
மாலைதரு மின்னார் மாலை தனிலேயிம்
மாலைகொள் வீரென்ன வாலிபரம் மாலைகொள்வார்
மன்னர்வாழ் வீதியெங்கும் மாணிக்கத் தோரணங்கள்
கன்னல்முத் தாற்பந்தல் கண்கவர்ந் தேயிலகும்
வில்வீரர் வாள்வீரர் மேவிவாழ் மாடங்களும்
மல்வீரர் யுத்தம் வகுக்கும்போர்க் கூடங்களும்
யானைகட்டி நிற்கும் அழகான சாலைகளும்
சேனைகுதி ரைத்திரள் சேர்ந்திருக்கும் பந்திகளும்
பாகசாலை யெங்கும் பரிமளிக்கும் நன்னமுதம்
யாகசாலை வேதமுண ரந்தணர்கோட் டம்முழங்கும்
நாட்டியசங் கீதம்பல் நாகசுர மும்முழங்கப்
பாட்டியல் கற்றுணரப் பாலர் பயின்றிடுவார்
சிங்கேறு போல்வீரர் செம்பரியின் மீதேறி
தங்கள் பரிநடத்தத் தண்ணீர்சே ராய்நுரையாம்
தேசரசர் மைந்தர் செலுத்தும் பரித்தேர்கள்
தேசமைந்த மாநதியைச் செந்நீராய்ச் சேராக்கும்
கல்விக் களஞ்சியத்திற் கல்விநிதி சேர்த்துயரும்
நல்வசனத் தூயர் நவில்வார் பிரசங்கம்

இந்நகற்கு மற்றொ ரிணைநகருண் டோவெனவே
சந்திரா தித்தர்விழி தானிமைக்கா மற்றிரிவார்
அரசுநிதி யாபரணம் யானைதே ரும்புரவி
முரசுதவ மெப்பொருளும் மேவுமெனத் தன்னிடத்தே
அளகா புரியும் அமரேசன் தன்பதியும்
வளமான திற்றனக்கு மாண்பல்ல வென்றுயர்ந்து
எந்நகரு மிந்நகருக் கேற்கா தெனவிலகும்
நந்நகரம் மேபாடி பொன்நகர மாமிதனைக்
கன்னல்வில் வாங்கிக் கணைவிடுக்கும் மன்மதவேள்
தன்னழகை வென்றுஜெயத் தாரணியும் வேடர்குலன்.

## நம்பிராஜன் அரசியல்பு.

ராஜாதி ராஜருக்கும் ராஜன்நம்பி ராஜனவன்
தேசாதி பர்பணியச் செங்கோல் செலுத்திவரச்
சத்தி யருள்குமரன் சண்முகச டாட்சரனும்
வெத்திவே லாயுதனை வேண்டி மனதிலெண்ணி
தருமமெக் காலந் தவறுமற் றன்பொறுமை
கிருபை பராக்கிரமங் கீர்த்தியுதா ரத்துவமும்
உத்தம குணங்க ளுரித்தாக வேயடைந்தோன்
வித்தகப் பல்லுயிர்க்கு மேயன்பிற் றுய்போன்றோன்
நன்மை தவம்போலும் நற்கதிக்குப் பிள்ளையென
வன்மைசெய் நோய்களுக்கு மாமருந்தி னைப்போலும்
நுட்பம தாகி நுவல்கேள்வி தன்னையுமே
திட்பமுடன் கேட்பவர்கள் சீரறிவு போன்றிருப்பன்
தரித்திரர்க்க நேக தனங்கொடுத் தாதரிப்பன்
அரிவையர் தன்மனமும் அன்னப்பட் சிக்குணமும்
மிருகங்க ளின்நெஞ்சும் வெள்ளம் மிகுநீரும்
ஒருமனப் போக்காக வோங்கி நிலைநிறுத்தி

மங்கையர்க ளுக்குள் வடிவழகி னிற்சிறந்த
நங்கையெனு மோகினியை நாடி மணம்புரிந்து
பயிர்களைக் காக்குமொரு பண்பான வேலியைப்போல்
ஒயிலாகத் தானும் உலகந் தனைப்பேணி
ஞாலத் துளமாந்தர் நன்மை யெனப்போற்றச்
சீலமுடன் செங்கோல் செலுத்தும் முறைப்படியே
சோதிமணி ரத்தினங்கள் தோன்ற மகு டம்புனைந்து
நீதியுள்ள மன்னவனும் நீணிலத்தோர் கொண்டாட
தந்திரமா யுத்தி சமய மறிந்துரைக்கும்
மந்திரிமார் தங்களுடன் மாசேனை கள்சூழ
வில்வித்தை யிற்றேர்ந்த வீராதி வீரமுள்ள
வில்லியர்கள் சூழ்ந்திருக்கும் வேந்தன் கொலுமுகத்தில்
கட்டியங்க ளெச்சரிக்கக் கன்னியர்க ளாடிநிற்க
வட்ட மயில்விசிறி வண்ணவெண் சாமரையும்
சங்கீதந் தேர்ந்து சரசசல் லாபமுள்ள
திங்க டனைப்பழித்த சேயிழைமார் வீசிநிற்க
தேவாதி தேவனெங்கள் செந்தூர்வாழ் கந்தனையும்
பாவாண ரெந்நாளும் பாடிப் புகழ்ந்தேற்ற
செப்பமுடி கூடாத சித்திரங்க ளைப்படைத்து
ஒப்புவமை யில்லா துயர்ந்தசபா மண்டபத்தில்
வச்சிரமா ணிக்கம் வகுத்தசிங் காசனத்தில்
பச்சைமுத் துச்சரங்கள் பண்பா யொளிவீச
முரசுதப் பட்டை முழங்கவே சல்லரியும்
திரமுடைய கொம்பும் ஜெயபேரி கையதிர
தினசரி சோதிடர்கள் செய்கை பலனுரைக்க
மனமகிழ்ச்சி யாய்நம்பி மண்டலத்தை யாண்டிருந்தான்.

நம்பிராஜன் புத்திரபாக்கியமடைதல்.

இப்படியா கத்தா னிருந்தர சாளையிலே
செப்பு நிகர்தனத்தாள் செல்விநங்கை மோகினியும்
மன்னன் றனைக்கூடி மக்களை யேநாடி
அன்னமுடன் சொன்னமிக வள்ளியே தானமிட்டு
முருகவேள் தன்பதத்தை மொய்குழலும் மன்னவனும்
இருதயத்து ளேதா னியல்பாய்ப் பணிந்திடவே
வேலன் கிருபையினுல் வேந்தனுக்கு மைந்தருமே
சீலதுங்க னென்றுஞ் செயவீர சிங்கனென்றும் [றும்
சங்கனென்றும் புங்கனென்றுஞ் சாதுரிய ரெங்கனென்
செங்கனென்றும் பொங்கனென்றுஞ் செல்வ ரெழுபேர்
போதவெழு ரத்தினத்தைப்போலாகத்தானுதித்து [கள்
சீதனைப் போலச் செழிப்பாகத் தான்வளர்ந்து
சகலா கமங்கள் தனுவேதங் கற்றறிந்து
அகமகிழ்வாய்ப் பால ரடவிதனி லேபுகுந்து
வேட்டைக ளாடி விளையாடி வீட்டில்வர
நாட்டையாள் மன்னவனும் நங்கையாம் மோகினியும்
புத்திரர்க ளாடலதாற் பூரித் தகமகிழ்ந்து
இத்தரையில் நம்மைப்போ லேந்தலு மில்லையெனப்
பெருமையாய் வேடுவர்க்குப் பேணி விருந்துசெய்து
திருமருகன் தன்னருளாற் சீராக வாழ்ந்திருந்தார்.

நங்கைமோகினி பெண்குழந்தை யில்லையேன விசனித்தல்.

சுந்தரத் தாதியர்கள் சூழ்ந்தருகில் நின்றிடவே
சந்திரனைப் போன்றநுதல் தானிலங்கும் மோகினியும்
தூங்குமஞ்ச மீதிற் சொகுசாகத் தானிருந்து
காங்கேயன் றன்மீது கன்னியர்கள் பாடிடவும்
பூச்செண்டம் மானுர் பொருந்துசது ரங்கமுடன்
பாச்சிகைச் சொக்கட்டான் பண்பாகத் தானுடி

சிந்தை களிகூர்ந்து தேன்மொழி யாளிருக்கப்
புந்திதனி லோர்நினைவப் போது பிறந்ததுவே
உல்லாச மாய்மார்பி லுற்றணைத்து முத்தமிட
நல்லதோர் பெண்சேய் நமக்குக்கிட் டாததென்ன
காரணமோ வென்று கருத்திலுற் றுள்கவலை
நாரணன் றன்மருகன் நண்பர்க் கருள்முருகன்
குலதெய்வ மாயிருக்கக் கொண்டாடி யிப்பொழுது
நலதன் பதிக்கு நவிலவே வேண்டுமென்று.

நங்கை மனதை ராஜனறிந்து நல்லறம் புரிதல்.

தாதியர்க ளையனுப்பித் தன்கணவ னையழைத்து
சோதிமணி ரத்தினங்கள் சூட்டுமுடி மன்னவரே
எண்ணமிக நாளா யெனக்குண் டதைச்சொலவோ?
பெண்ணொன் றிதுவரையிற் பெற்றுவளர்க் காததினால்
விசனமிகத் தோன்றுதென வேந்தன் முகம்நோக்கி
ரசமணி போற்கலங்கி நங்கையப் போதுரைத்தாள்
நம்பிமன்ன னீதறிந்து நாடியே வேலனுக்குச்
செம்பொன்னு லாபரணஞ் செய்துமே தான்சூட்டி
தேருந் தினந்திருநாள் சீராக வேநடத்தி
சேரும் பணிகளிலே செப்பவொண் ணுதபடி
பத்தியாய்ப் போற்றிப் பரதேசி சங்கமர்க்கு
நித்தியம் புத்தமுதம் நிண்ணயமாய்த் தான்வழங்கி
முப்பத் திரண்டறங்கள் முன்முடித்து மங்களமாய்ச்
செப்பமுடன் மந்திரிமார் சேனைகளுஞ் சூழ்ந்துவர.

இராஜன் சப்தகன்னியர்களுக்குப் பூசை செய்தல்.

வெள்ளிமலைச் சார்பில் விளங்கேழு கன்னியர்க்கு
உள்ளபடி பூசை யுவந்துசெய வேநினைந்து

பதிங்கலப் பச்சரிசி பாற்பொங்கல் தானுமிட்டு
அதிரசமுந் தேன்குழலும் அப்பளமும் முப்பழமும்
மாங்கனிவா ழைக்கனியும் வண்ணப் பலாச்சுளையும்
தேங்காயு டைத்துவைத்துச் சின்னச்சம் பாவரிசி
அன்னஞ் சமைத்து அழகமலே போற்குவித்து
பொன்போற் பருப்பமைத்துப் புத்துருக்குநெய்வார்த்து
காய்கறிக ளிற்பலவாங் கன்னற்பா யாசமுடன்
வாய்ந்தபா னக்கம் வடைபருப்பு நீர்மோரும்
சம்பிரம மாய்த்தூபந் தான்தீப மிட்டதின்பின்
நம்பியும் நங்கையுமாய் நாடிப் பணிந்திடவே.

சப்தகன்னியர்கள் ராஜனுக்கு வாக்குரைத்தல்.

நங்கையர்க ளப்போது ராஜனெதி ரேழ்பேரும்
பொங்க முடன்வரவே பூபதியுந் தான்மகிழ்ந்து
மன்னவனுந் தேவியரும் வந்தித் தடிபணிந்து
தன்கை யிரண்டுந் தலேமேல தாய்க்கூப்பி
அம்மணியே தாயே அதிபவுசு தானிருந்தும்
செம்மணியைப்போன்ற செல்வியொரு பெண்குழந்தை
எங்களுக் கில்லாததினு லேக்கம் மிகவடைந்து
உங்களைக் கோரி யுற்றதவ மேபுரிந்தோம்
என்றந்த மன்ன னெடுத்துரைக்க வப்போது
நின்றேழு கன்னியர்கள் நிண்ணயம தாயறிந்து
மன்னனே உன்மனைவி மாநங்கை மோகினிக்கு
கன்னியெனும் பெண்குழந்தை கர்ப்பமில் லாததினுல்
கானகத்திற் சின்னுட் கழிந்த பிறகாக
மானினமும் பெண்ணேர் வகையாகத் தானீன்று
தூரமதிற் போட்டுவிடுந் துய்யமுடி மன்னனேயந்
நேரமதில் நீயேகி நிச்சயம தாயெடுத்து

போற்றி வளர்ப்பாயப் பூவையா லுன்றனுக்கு
நாற்றிசைப்பே ரோங்கும் நடவுங்க ளென்றுசொல்லி
மங்கையர்க ளாங்கு மறையவூ ரேகியிறை
செங்கோல் தனைச்செலுத்திச் சீராக வாழ்ந்திருந்தான்.

விஷ்ணு கண்ணுவரிஷியால் சாபம் பெறல்.

தேடக் கருடன்மேற் சென்றுலவி யேயாதி
சேடன்மீ திற்றுயிலுஞ் செங்கண் நெடுந்திருமால்
வைகுந்தந் தன்னில் வளருலக மாதுடனே
சொகுசாக வீற்றிருந்து சொக்கட்டா ணுடுகையில்
இந்தாரு மீரிரிக்கா லின்றெடுமுன் காயெனவே
சந்தோஷ மாய்ப்பேசித் தானிருக்கும் வேளையிலே
கையிலே தண்டேந்திக் கண் ணுவ மாமுனியும்
வைபவம தாய்வருக வாவென் றழையாதால்
கோபமிகக்கொண்டே கொடுந்தணல்போற்கண்சிவந்து
சாபங் கொடுத்தார்காண் சன்யாசி யாய்ப்பிறக்க
மல்லுயர்ந்த லெட்சுமியை மானுய்ப் பிறக்கவென்று
சொல்லி நடந்தார் துரிதமாய்த் தன்பதிக்கு.

விஷ்ணு சிவமுனியாயுதித்துத் தவஞ் செய்தல்.

வனவாசி யாகியதோர் மாமுனிவன் சொற்படியே
வனச மலர்ப்பாதன் வையகத்தி லேமிகவும்
சாலைகளுஞ் சோலைகளுந் தாமரைப்பூ வாவிகளும்
மாலை தனக்கிசைந்த வண்ணமலர்ச் சாதிகளும்
பந்தி நெகிழ்ந்தே பரிமளிக்கத் தென்றலது
கந்த மதைக்கவரும் கள்வனைப் போலாக
அள்ளியே நாலுதிக்கும் அன்புடனே தான்வீசும்
வெள்ளிமலைச் சாரலிலே வேலன் மனக்குறையை

அகற்றிடத் தானினைத்தங் காதிநா ராயணரும்
சகலா கமந்தெரிந்த சன்யாசி யாயுதித்து
சிவமுனிவ ரென்னத் திருநாம மேயடைந்து
பவக்கடலி லேயழுந்தாப் பாண்டரங்க னைக்கோரி
கட்டப்பஞ் சேந்திரியக் கட்செவித னைப்பிடித்துப்
பெட்டகத்த டைத்துப் பிரியந் தனையகற்றி
சித்தந் திருத்திச் சிவன்பாதத் திற்செலுத்தப்
பத்தி யதன்வழியே பார்த்து நிலைநிறுத்தி
போற்றித் தவத்திற் பொருந்தும்வா சிப்படியே
சாற்றமுடி யாநற் றவம்புரியுங் காலையினில்.

லெட்சுமி மானாகச் சிவமுனிமுன் வருதல்.

ஆயிரங்கண் ணிந்திரனு ரங்கமதைப் போலாக
ஆயிரம் புள்ளிகளும் அங்கமெல் லாந்துலங்க
நீண்டவிரு காதுகளும் நீல விழியழகும்
தீண்டாம லோங்குந் திறமுடைய கொம்புகளும்
சிறுத்த தலையதுவும் செங்கீரைத் தண்டழகாய்
விருத்தக் குளம்புகளும் மேனியது பொன்மயமாய்
செந்தா மரைமலர்வாழ் தேவிமகா லெட்சுமியும்
சுந்தரப் பெண்மானாய்த் தோன்றியே கானகத்தில்
தவமே புரிந்திடுநற் சன்யாசி யாகியதோர்
சிவமுனிவன் முனிருக்குஞ் சிங்காரச் சோலையின்முன்
பச்சென்ற புல்லைப் பரித்துண்டு நாலுதிக்கும்
அச்சமிலா தோடிகுதித் தாங்கு விளையாட.

மானைச்சேர்ந்து சிவமுனி மதலையைப் பெற்றது.

கண்டுமே மாமுனியுங் காமுகனைப் போல்மயங்கி
மண்டலத்தி லிம்மான்போல் மானை நாம் பார்த்ததில்லை
என்றே மயங்கி யிருந்ததவம் விட்டெழுந்து
நின்றதொரு மானின் நினைவதனைத் தானறிந்து

மலைச்சார்பிற் றென்றலது வந்துமிக வேமோத
கலைமான்சொ ரூபமுடன் கன்னிமான் றன்னுடைய
அரவபடத் தைப்பழித்த அல்குல் வரசிலையை
உரமாகத் தான்முகந்தே ஓர்மனம தாய்மருவ
கந்தனைக் கோரிக் கடுகவர மேயடைந்த
சுந்தர வல்லி துதித்துமே கொண்டாடி
மானின்றன் கெர்ப்பமதில் வந்தங் குதித்தனளே
ஞானமுனி யின்பிண்டம் ராத்திரித்தங் காததினால்
மங்களமாய் வெள்ளி மலையிலோர் சார்பதனிற்
பொங்குசுனை யைக்கடந்து பூமரச் சோலையிலே
வேடக் குமரிகளும் வேண்டிவள் ளிக்கிழங்கை
தேடி யெடுத்த திரமான பள்ளமதில்
தங்க மதையுருக்கித் தான்கவிழ்த்த வாறதுபோற்
பொங்கமுடன்பெண்மகவைப்பொன் மானுமீன்றதுவே
ஈன்றதோர் மானும் இருசாம மானதின்பின்
தோன்றுமக வைப்பார்த்துத் தொட்டுச்சி மோராமல்
தன்னினமீ தல்லவென்று தாவிக் குதித்தோட
முன்போற் றவத்தில் முனிவனுந் தானிருந்தான்
குவ்வாகூ வென்றே குழந்தையுந் தானழுது
பவ்வியமாய்த் தானந்தப் பள்ள மதிலிருக்க

கிழங்கெடுக்கவந்த வேடுவர்கள் குழந்தையைக் காணுதல்.

குறம்.

தினதெந்தின தினதெந்தின தினதெந்தின தினன
தென்னதி நாதினன தினதெந்தின தினன.

குறவர் குறத்திகளும் ஒன்றாகக் கூடி
உறவாகப் பேசிக்கொண் டோர்சாலை நாடி
சிங்காரப் பாப்பாடிச் சென்னியிற்பூச் சூடி
தங்கடங்கள் மாண்பருடன் றானும்விளை யாடி

புந்தி மகிழ்ச்சிகொண்டு பூரித்திரு தோளும்
குந்தி யிருந்தவர்கள் கூடியிந் நாளும்
போனகத்தை யுண்டுடனே போவோம்நாம் பேசி
கானக் கிழங்கெடுக்கக் கைகடனே வீசி
வீரசிம்மம் போன்றவிடை மீதிற்கூடை யிடுக்கி
பாரவனத் தூடேகிப் பட்சிகளை முடுக்கி
பச்சைமணி பவளமணி பளபளெனத் துலங்க
உச்சிதமாய் நெற்றிதனி லோர்திலத மிலங்க
காலாழி பீலிகளுங் கலகலென வொலிக்க
மேலான பட்டாடை மினுமினென்று சொலிக்க
சில்லாங்கோல் குத்துக்கம்பு செங்கரத்தி லெடுத்து
வல்லாண்மை தான்பேசி வனமதனை யடுத்து
குப்பலதாய்க் கிழங்குகளைக் குத்துக்கம்பாற் கிள்ளி
செப்புமுனே கூடையதிற் சேர்த்துமிக வள்ளி
இப்புறத்தே யிருக்குங்கிழங் கெடுத்திடுவோம் வாரும்
ஒப்பிடவே கூடிப்பேசி யொன்றுயனை வோரும்
வரிக்கிழங்கு சொரிக்கிழங்கு வள்ளிக்கிழங் கடுத்து
குரிகிற்ருளி யொடுகிழங்கைக் கூடையதி லெடுத்து
உள்ளாடி யவரவர்கள் ஒயிலாய்நடை நடந்து
தள்ளாடிச் சுமையதனைத் தலைமீதிற் சுமந்து
திரும்பியவர் மனைதனக்குச் சென்றிடுவோ மென்று
வரும்போது கானகத்து வழியிற்சேயு மன்று
அழுங்குரலா மதைக்கேட்டங் கனைவர்களுஞ் சென்று
செழுமணிபோற் ரேன்றும்பெண் சேயருகில் நின்று
இந்திராணி யோரதியோ இலக்குமியோ யுமையோ
எந்திராணி யாலுரைப்பே னிவளுஞ்சரஸ வதியோ
யாரோயிந்த வுருவமதா யவதரித்தா ரறியோம்
பாரோரில் யார்பெற்ற பாக்கியமோ தெரியோம்

இக்குழந்தை யைப்பெற்ருே ரிருப்பரோயிதை விட்டு
பக்குவமாந் தந்தைதாயைப் பார்க்கிற் புத்தி மட்டு
ஆனாலும் யானைபுலி யடருமிந்த வனத்திற்
ருனகப் பெண்குழந்தை தவிக்குதையோ யினத்திற்
பால்கொடுப்போ ருள்ளவரைப் பார்த்தழைப்பாய் மாதே
மால்கொடுக்கும் பெண்மகவை மறப்பதினி யேதே
சந்தேகங் கொண்டவர்கள் தனித்தனிநாற் புரமும்
சிந்தைநொந்து தந்தைதாயைத் தேடியேயப் புரமும்
காணுதாற் குறத்திகளுங் கானகத்தி லலைந்து
கோணுத மனத்துடனே கூடியங் குலைந்து
யோசனைகள்பலவெண்ணியொன்ருயூர்க்குச்செல்வோம்
ஈசன்செயல் நமதரச னிடத்தி லிதைச் , சொல்வோம்
என்றுசொல்லி யொவ்வொருவ ரேகக் கூடை யெடுத்து
அன்றவர்கள் நம்புமனை யாவர்களு மடுத்து

குறவர்கள் வனத்திற் குழந்தையைக் கண்டோமென்று
நம்பிராஜனுக்குக் கூறல்.

குறம்.

மன்னரெல்லோ ரும்புகழ வந்துதித்த கோனே
தன்மையுள வெள்ளிமலைச் சாரலிலே தானே
சோலைதனிற் சுனையருகே சுந்தரம்போ லங்கம்
வாலைமைந்த னருளாலே வந்ததொரு தங்கம்
உயர்ந்தபசும் பொன்னதனை யுருக்கிவிட்டாற் போலே
வியந்தொருபெண் மகவைக்கண்டுவிரைந்துவந்ததாலே
ராசனேநா மனைவர்களும் நாடிவனஞ் சென்று
ஈசனருட் குழந்தைதனை யெடுத்துவந்திங் கின்று
வளர்த்திடுவ தால்நமக்கு மகிமைமிக வுண்டு
உளத்துள் நினைந் தெழுந்தருளு முண்மையெனப்புண்டு

குறவர்களுந் தானுரைக்கக் கோமானுந் தெரிந்து
உறவாந்தன் மோகினிக்கு முளமகிழப் புரிந்து
பந்துக்களை வரவழைத்துப் பாலகியைக் கண்டே
வந்திவர்கள் சொல்வதினல் வருவீரென விண்டே
காங்குருமாற் றலையிலிட்டு கச்சையிடை கட்டி
பாங்குளபூ ஷணமணிந்து பாவையரைக் கிட்டி
கமகமென வாசமணி கனதனத்தை யுடைய
குமரிகளுங் குலவையிட்டுக் குஞ்சிரிப்பை யடைய
தப்பட்டை முரசதிரச் சல்லரியும் முழங்க
ஒப்புவமை யில்லாம லுயர்கொடிகள் துலங்க
ஆனந்த மாகவேதா னப்பொழுதே யெழுந்து
வானமட்டு மோங்கிவளர் மரங்கள்வனம் புகுந்து
அன்னங் குயிலினமும் அன்றிற்பேடுங் கொஞ்சும்
வன்னக்கிளிக் கூட்டமெங்கும் வளர்தருக்கள் பிஞ்சும்
சிங்கார வனங்கடனைத் தென்பாகக் கடந்து
தங்காமல் யாவர்களுஞ் சாலைவழி நடந்து
வரும்வேளை குயின்மொழிபோல் மதலையமும் போது
திரும்பாம லோர்நிலையாய்ச் செவியிற் கேட்க மாது
தனைவினவி ராஜனுமே சந்தோஷ மாக
மனைவியுடன் துரிதமதாய் வடபக்க மாக
வெள்ளிமலைச் சாரலிலே வேலனருள் சுரந்து
வள்ளிக் கிழங்கெடுத்த பள்ளமதி லிருந்து
குஞ்சிரிப்புத் தன்னுடனே குவ்வாக் குவ்வா வென்று
மிஞ்சிப்பசி யாலழுக வேந்தனங்கு சென்று
தூண்டாவிளக்கொளிபோற் றுலங்குஞ்சேயையெடுத்து
வேண்டிச்சந்தோஷமதாய் மெல்லியிடங் கொடுத்து
எல்லையிலா வானந்தம் எக்களிப்புக் கொண்டு
நல்லயிலை யேந்தும் வேலர் நாமமதை விண்டு

அங்குமிங்கு மாயோடி அஸ்திரத்தை யெரிந்தே
செங்கரத்தைக் கொட்டிப்பல சிந்துபாடித் திரிந்தே
இத்தலத்தில் நம்மைப்போ லிராஜரில்லை யென்றே
முத்தங்கொடுத் தேநங்கை மோகினிமுன் நின்றே
மங்கையரே யிவ்வனத்தில் மதலைதனை வியந்தே
பொங்கமுடன் முன்போட்டுப் போனதுவும் பயந்தே
சூதாகத் தோணுதென்று சொல்லிடவப் போது
ஈதாகத் தெரியாதோ வென்று நங்கை மாது.

சப்த கன்னியர்கள் வாக்குப்பலித்ததென்று ராஜனுக்குரைத்து
நங்கை மோகினி குழந்தையுடன் நகரஞ் சேர்தல்.

---

விருத்தம்.

மன்னவா கேளீர் நாமும் வனந்தனி லேகிச் சத்த
கன்னியர் தனைக்குறித்துக் கருதியே தவஞ்செய் காலை
முன்னதாயவர்க டோன்றி மொழிந்ததோர் வரத்தினாலே
சொன்னமான் வயிற்றி லிந்தத் தோகையு முதித்தாளென்
[னே.

குறம்.

எந்தன் துரை சாமியேநா னியம்புவதைக் கேளீர்
சிந்தைமகிழ்ந் திப்புவியைச் செங்கோல்புரி நாளில்
பாடியதி லேயேழு பாலர்களைப் பயின்று
நாடியொரு பெண்வேண்டி நானுமக்கே நவின்று
தானதரு மம்புரிந்து சத்தகன்னி மார்க்கு
வானவர்கள் கொண்டாட மாபூசை யவர்க்குச்
செய்துவர வழைக்கவவர் சிந்தைமிக மகிழ்ந்து
வையமதை யாளுகின்ற மன்னவுனைப் புகழ்ந்து
வந்தவர்கள் நின்கவலை மாற்ற வருள் சுரந்து
சந்தோஷ மாயெழுவர் தானேவாயுந் திறந்து

மானதுவும் வனமதிற்பெண் மகவதனை யீன்றே
தானதுவும் பிழைக்கவென்றே தாண்டித்தெஞ் ஞான்றே
சித்திர நங்கையுடன் சென்றுவனம் புகுந்து
புத்திரியை யெடுத்தூர்க்குப் போனதின்பின் னுவந்து
போற்றி வளர்த்திடுவாய் புத்திரியா லுமக்கு
நாற்றிசையுங் கீர்த்தியென நடுச்சொன்னாள் நமக்கு
தேவியர்கள் சொற்படியே சீரணியில் நல்ல
ஓவியம்போற் றுலங்குந்தேகம் ஒளியோனை வெல்ல
பிரமாவின் கற்பனையாற் பெண்பிறந்தா ளென்றால்
சிரமேந்து முத்தியிட்டுச் சேர்த்தணைத்து நின்றாள்
நாடிநங்கை பால்சுரந்து நல்லமுதங் கொடுத்தார்
தேடியனை வோர்களுந்தன் தேசமதை யடுத்தார்
குழவியுடன் நங்கைசித்ரக் கூடமதிற் புகுந்தான்
அழகுள்ள ராஜனவன் அரசுபுரிந் திருந்தான்

குழந்தைக்கு நாமகரணஞ் சூட்டல்.

அம்மானை.

மைக்கண் படிந்துறையும் மாதுநங்கை மோகினியும்
கைக்குழந்தை தன்னுடனே கன்னியர்கள் தான்சூழ
மஞ்சத்திற் கண்டுயிலும் வள்ளி யெழுந்தபின்பு
கொஞ்சுங் கிளியதுபோற் கொஞ்சிமகிழ் வேளையிலே
அந்நகரந் தன்னில்வா ழாவியர்க ளானவரும்
மந்திரிமார் சேனையுடன் மன்னன் வனம்புகுந்து
செல்வி தனைக்கொணர்ந்த செய்தி யெலாமறிந்து
நல்லகுரு நோக்கம் நமக்கும்நம் ராஜனுக்கும்
சந்தானம் பெண்மகவைத் தானடைந்தா னென்றுமிகச்
சந்தோஷ மேமிகுந்து தையலரு மாடவரும்
இன்னா ரினியாரென் றேயவர்கள் தோணுமற்
பின்னொருவர் தன்னைப் பிரியமாய்க் கைகோர்த்துச்

சுற்றி விளையாடிச் சுந்தரப் பூமுடியார்
நற்றவத்தா லுற்பவித்த நம்பிமனைக் கேகவென்று
நருமலரின் மாலைகளும் நற்கனியும் தேன்கிழங்கும்
பெருமை யதாயெடுத்தே பெண்களெல் லாந்திரண்டே
ராஜன் சமுகமதில் நாடிக்கா ணிக்கையதாய்
வாசமுடன் செலுத்தி வள்ளி தனையெடுத்து
கொஞ்சிமுத்தந் தந்து குலுங்கநகைத் துப்பேசி
வஞ்சியர்கள் நங்கையிடம் வாழ்மகவை யீந்திருந்தார்
இப்படியா யாங்கு யிருக்குமந்த நேரமதில்
ஒப்புவமை யில்லா தொளிர்முத்துப் பல்விழுந்து
குயில்போன்ற வார்த்தை குளறுங்கு ழந்தையைப்போல்
மயிற்சாயல் நீங்கி மதிமுகமுந் தான்திரைந்து
திதலை படர்ந்தகுயஞ் சீலைத் துணிபோலே
உதடோர் முழந்தொங்க வுற்ற தலைநடுங்க
வற்றி யுடல்குறைந்து மாகழலை போலாட
உற்ற முதுகுவளைந் தோர்தடியைத் தானூன்றி
தள்ளாடி யேநடக்குஞ் சார்வயது நூற்றேழு
விள்ளுங் கிழவியர்கள் வேடச்சி கள்பலபேர்
கூட்டமுடன் கூடிக் குழந்தை தனைச் சூழ்ந்து
நாட்ட முடன் பார்த்து நங்கையிட மெல்லோரும்
சொல்வா ரொருவசனந் தோகையுட லட்சணங்கள்
நல்லா யிருக்குதடி நாயகியே தேவாம்சம்
இருப்பதால் நம்மவருக் கேற்ற வெசமாட்டி
விருப்பாய் வளர்ப்பாயே வேலவனை மாலையிட்டு
எத்தேச கால மிருப்பாள் சுமங்கிலியாய்
நித்திய மங்களமாய் நீணிலத்தில் வாழ்கவென்று
ஆசீர்வா தந்தா ரனைவோரு மொன்றாக
மாசீர் வரிசைதந்து வள்ளியின் பள்ளமதில்

வந்ததி னுலிவட்கு வள்ளியென நாமமிட்டு
அந்தமா யக்கிழக் குழாங்க ளழைத்தார்கள்
செம்மணியில் நன்மணிபோற் றேசுறும் சேய்தனக்கு
நம்பியும் நங்கையுமிந் நாமம் பொருந்துமெனச்
செருக்கடைந்து மன்னவனுந் தேவியு மோர்மனதாய்
அருக்கனிகர் சேயை யழைத்தார்கள் வள்ளியென்று
நாம மதுதரித்து நாடியே வந்தவர்க்கு
க்ஷேம மதாய்விருந்து செய்து விடைகொடுத்தான்
விடைபெற்றே தன்மனைக்கு மேவினர்க ளோடுசென்றூர்
அடைவாக நம்பிமன்ன னங்கம்பூ ரித்தாங்கு
சிறுபிள்ளைத் தொட்டிலொன்றுசெய்தான் நவமணியால்
மறுவிலாச் சங்கிலியும் வார்த்திடத் தங்கமதால்
சேர்த்துமே கோர்த்துத் திருமாட வுத்திரத்திற்
பூர்த்தியாய்த் தொங்கவிட்டப் பொன்மணித் தொட்டிலி
பாலகியாம் வள்ளிதனைப் பண்பாய்ப்படுக்க வைத்து[லே
ஞால மதில்வளர நங்கைதா லாட்டலுற்றாள்.

——

நங்கைமோகினி குழந்தையைத் தாலாட்டுதல்.

உறங்குறங்கு கண்ணே உறங்கிவிழி பாலகியே
குறவர் குலக்கொடியே கோமா னருட் பிடியே
அன்னநடைக் கண்மணியே ஆவியர்சி காமணியே
பொன்னிழைத்ததொட்டிலிலேபூவையே நித்திரைசெய்
பொன்னுன மேனி பொருந்தவே மான் வயிற்றில்
இன்னிலத்தில் வந்துதித்த வேந்திழையேகண்வளராய்
பெண்ணமுத மில்லையெனப் பேணித் தவம்புரிய
தண்ணமுத மாகவந்த தங்கக் களஞ்சியமோ
மானே மரகதமே மாமயி லேகுயிலே
தேனே தெவிட்டாத தெள்ளமுதே நித்திரை செய்

சர்க்கரையே கற்கண்டே சாதிப் பலாச்சுளையே
கற்பகமே முற்றுங் கணுவில்லாச் செங்கரும்பே
முத்தோ பவளமோ மோதிரக் கைவிரல்கள்
சித்தசன் றங்கையெனத் தேசத் துதித்தவளோ
கண்ணிற்கு மைதீட்டிக் காலிற் பணிபூட்டி
வண்ண மலர்சூட்டி மங்கையே நித்திரைசெய்
பொன்னு லரைமூடி பொற்கயிற்றி னுற்சூடி
தன்னாலே தான்வளருந் தையலே நித்திரைசெய்
பட்டா லலங்கரித்துப் பாவாடை மேற்றரித்து
ஒட்டியா ணம்பூண்ட வொண்டொடியே நித்திரைசெய்
சத்தகன்னி மார்களன்று தானே வரங்கொடுக்க
வித்தகமா யென்மனையில் மேவுந் திரவியமோ.

---

வள்ளியம்மை வளர்தல்.

ஏந்திருகை யால்நங்கை யின்பமுடன் தாலாட்டக்
காந்தியுள்ளபெண்மயிலாள்கண்டுயின்று தான் விழித்து
சீலமுடன் முனமுகச் சென்றோடி யேயெடுத்து
பாலகியாம் வள்ளியற்குப் பச்சிலைநன் மஞ்சளுடன்
சம்பிரம மாகத் தயிலவெந் நீராட்டி
அம்மணியை ஆடையதா லங்கமெல் லாந்துவட்டி
திட்டமாய் நெற்றித் திருநீறு காப்பணிந்து
வட்டப்பொட் டுச்சாந்து மையிட்டுக் கண்களுக்கு
ஆதிசே டன்வா யழகுமணி ரத்தினத்தை
கோதித் துவாரமிட்டுக் கோர்த்தார மார்பணிந்து
கைக்குப் பலவளையல் காலாழி காலிலிட்டு
தைக்குங்கண் ணேறுபல சாந்திசெய் யக்கருதி
திருஷ்டி கழித்தாளே செல்விவள்ளித் தாயாரும்
அருட்டியாய்த் தோழியர்க ளாங்கருகு பார்த்திருக்கச்

சீராட்டி மன்னவனுந் தேவியு மோர்மனதாய்ப்
பாராட்டி யேவளர்க்கப் பாவையந்த வள்ளியரும்
சப்பாணி கொட்டித் தவழ்ந்தே விளையாடி
ஒப்பா ரிலாதபடி யோடி நடமாடி
வாகாய் நடைப்பழகி மங்கைசிறு பெண்களுடன்
சேகரம தாய்க்கூடிச் சென்றுகா னம்புகுந்து
மல்லிகை முல்லை மலரு மிருவாட்சி
சொல்லரிய புஷ்பவகை தோகையர்க டான்பரித்து
கொண்ட லுறுங்குழலைக் கோதி முடிக்கணிந்து
மண்டலத்து மாதர்களில் வள்ளியைப்போ லில்லையென
அழகுமயிற் சாயலைப்போ லன்ன நடைநடந்து
பழகுசிறு பெண்களுடன் பாவையருந் தான்கூடி
பத்தரை மாற்றுப் பசும்பொன்னுல் வீடுகட்டி
முத்தாலே சோறுகறி மொய்குழலாள் தான்சமைத்து
வளர்பிறையைப் போல வளர்ந்துசிறு தேருருட்டி
புளகாங் கிதங்கொண்டு பூச்செண்டு தாஞடி
ஆர்த்திடவே யம்மானை யாங்குசகி யோடாடி
பார்த்தோ ரதிசயிக்கப் பன்னுங் குழியாடி
நாளொரு மேனி பொழுதொரு வண்ணமதாய்
தோளும்பூ ரித்துத் துலங்கக் குயமிலங்கப்
போதா தெனத்திரளும் புத்தி தனையறிந்து
மாதாந்த மாகி வயதுபனி ரண்டடைந்து
பாங்கியர்கள் தான்சூழப் பஞ்சணை மெத்தையின்மேற்
காங்கேயன் தன்னருளாற் கன்னி யிருந்தனளே.

கோமான் உத்திரவின்படி குமாரர்கள் தினைவிதைக்குதல்.

செப்புநிகர்தனத்தாள் செல்விவள்ளி யம்மையரும்
இப்புவியி லேவாழ்ந் திருக்கின்ற நாளையிலே
கார்மேக மேழுங் கனத்தாலந் தான்பொழியப்
பார்மன்னன் தானறிந்து பன்பா யகமகிழ்ந்து

மக்களையு மேயழைத்து வாகாம் நிலம்பார்த்து
மிக்க தினைவிதைக்க வேண்டு மெனவுரைக்க
அப்படியே யாமென் றனைவோரு மொன்றாக
ஒப்பி மனமகிழ்ந்தே வோடிமலைச் சார்பதனிற்
பூஞ்சோலை சூழ்ந்த புனமதனைத் தான்பார்த்து
வாஞ்சையாய்ச் சப்த மடவரலைப் போற்றிசெய்து
வேலன் றனைத்தொழுது வேண்டிப்பூ சைபுரிந்து
சீலமதாய் நல்ல தினம்பார்த்து வேடரெல்லாம்
புஞ்சை தனையுழுதே பூரித்தவ் வேலவனைத்
தஞ்ச மெனப்போற்றித் தான்விதைத் தார்தினையை
அடைமழை யும்பொழிய ஆங்கழகாய் மஞ்சள்நிறம்
திடமாய்த் தினைப்பயிர்கள் சீராய் வளர்ந்தனவே.

மன்னன் குமாரர்கள் வனவேட்டைக்கேகுதல்.

சத்தகன்னி யர்வரத்தால் தானே வளர்ந்துலவும்
தித்திப்பை நல்குந் தினைப்புனத்தைத் தான்சூழ்ந்து
பன்றி கரடிபுலி பார்விலங்குச் சாதியெல்லாம்
ஒன்றின்பின் னொன்றாய் ஒருமிக்கத் தான்திரண்டு
வனத்தை யழிக்குதென்று மன்னனுக்கு முன்பாக
மனத்துள் வருத்தமதாய் வந்துசொன்னார் வேடுவர்கள்
அலங்காம லச்சபையி லாண்டகையுந் தான்கேட்டு
கலங்கா விலங்கினத்தைக் கண்டனஞ் செய்யவென்று
தூதரைத் தானனுப்பி சுந்தர மைந்தர்களை
நீதமுடனழைத்து நேரில் நிருபனுமே
காட்டில் மிருகமெல்லாங் காம்பீர மாய்க்கூடி
தேட்டமா யோங்குந் தினைப்பயிரை மேயுதென்று
நம்மவர்கள் வந்து நவின்றதினா லிப்போது
செம்மணிகாள் நீங்களுந்தான் சென்றுவனத்தூடே

வேட்டையு மாடி விருது துலங்கிடவே
கோட்டி மிருகமதைக் கொன்றுசமு கம்வருவீர்
என்றுநம்பி மன்ன னெடுத்துரைக்க வப்போது
நன்றென் றெழுந்தாரே ராஜன்கு மாரர்களும்
வேட்டைக ளிற்றேர்ந்த வீரரைத் தூதரிடம்
கூட்டிவரச் சொல்லிக் குறிப்பா யுரைத்தார்கள்
ஓட்டமதாய்த் தூதுவர்க ளோடியே வீரருக்கு
நாட்டரசன் மக்களுமே வேட்டைக் கழைத்தார்கள்
விருப்பாக நீங்கள் விரைந்துவர வேணடுமென
இருப்பா யிருந்தவர்க ளெல்லா மெழுந்தார்கள்
எரிக்கணைவி ரிக்கணைக ளீட்டியுடன் தோட்டிகளும்
பெரியா யுதங்கை பிடித்தார்க ளேவேட்டை
நாய்களை யுங்கூட்டி நம்பிமகார் பக்கலுக்கு
வாய்மதம் பேசியல்லோ வந்தாரதன் பிறகு
வீரியரும் வேந்தருடன் மேவியொன் றுய்ச்சேர்ந்து
பேரிகைமு ழங்கிடவே பேணிக்கொம் பூதிடவே.

மன்னன் குமாரர்கள் வனவேட்டையாடேல்.

சென்று வனம்புகுந்து சிங்கங் கரடிபுலி
பன்றிமுட் பன்றி பருத்ததோர் காட்டெருமை
மேயுமான் வேழம் விரைந்துவரக் கண்டவுடன்
ஆயுதமெ டுத்தா ரதிற்சிலபேர் விற்றெடுத்தார்
பாய்ந்துவரும் வேங்கை பதுங்கிநின்று மேவதைத்தார்
வாய்ந்தசில வேடுவர்தன் வல்லமையைப் பேசிடவே
சத்தமிட்டு மத்தகஜும் தான்துரத்தி யேவருக
அத்தங்க வண்கொண் டடித்தார்கள் வேடுவர்கள்
வீரிட்டே யானை விழுந்தங் கிறந்திடவே
சாரிவரு கின்றசிங்கந் தன்மீதி லேகுதித்து
குத்தி யுயிர்மாய்த்துக் கொக்கரித்து வெற்றிபெறப்
புத்தி மயங்காமற் புல்வாய் புலிகரடி

என்றோடிக் கொன்றே யெழுவர் ஜெயம்பெற்றே
தென்றலது வீசுகின்ற சிங்காரச் சோலைவழி
தினைப்புனத்தைத் தானடுத்துச் சீராய் வளர்ந்தோங்கும்
தினைப்பயிரைப் பார்த்துத் திரும்பினு ரெல்லோரும்
தங்கள் நகரடைந்து தார்வேந்தன் மக்களுந்தான்
சிங்கார மண்டபத்துட் சென்றவையின் முன்பாக

---

கானகத்தில் வள்ளியைக் காவல்காக்கச் சோன்னது.

தந்தைபொற் பாதார விந்தம தைப்பணிந்து
எந்தையே யெங்களுக்கிங் கேற்ற படியாக
இனத்தாரைக் கூட்டிக்கொண் டேகியே நாங்களுந்தான்
வனத்து விலங்குகளை மாய்த்திங்கு வந்ததினுல்
உரமாய்த் தினைப்பயிர்க ளோங்கி மிகத்தழைத்துத்
திரமாய்க் கதிர்கள் திரண்டமணி போலாகி
வளர்ந்தங் கிருப்பதனுல் வன்னமயி லன்னங்களும்
விளங்குஞ்செம்போத்தினமும்விண்கருட னுந்தைகளும்
தூக்கணத்தா னூர்க்குருவி சொற்குயிலுங் காடைகளும்
நாக்குரியப் பேசுமொரு நாகணவாய்க் கிள்ளைகளும்
சொல்லவொண்ணுப் பட்சிவகை சூழ்ந்து தினைப்பயிரை
வல்லமையாய்க் கொய்வதினுல் மாவனக் காவலுக்காள்
வேண்டு மெனவணங்கி வேந்த னிடமுரைக்க
ஆண்டரசன் முனுமதற் காலோ சனைபுரிந்து
மைந்தர்கா ளுங்கள் மனதுக் குரித்தான
தெந்தமனு ஷாளைவைப்போ மென்று னரசனுமே
கையில்வெண் ணெய்யிருக்கக்காரா வின் நெய்க்கழுத
லையா வுலகிலுண்டோ யாமதைப்போ லேன்மயங்க
எங்களுட தங்கையிருப்பதாற் காவலுக்கு
உங்களுட சிந்தைக் குவந்தா லனுப்புமென

நன்ரு யிருக்குதுங்கள் நாணய வார்த்தையது
என்ருன் கதும்பி மன்ன னேனடா வுங்களுக்கு
அந்தப்பெண் ணிங்கிருப்ப தாகா தென நினைத்தோ
இந்தமதி வந்துசொல்வ தெங்கள் தவப்பயனே
பயங்கர மாகியதோர் பார்வனத்திற் காவலுக்கு
நயங்கா ணு மென்ற னுப்பில் நங்குலத்தி லுள்ளவர்கள்
கண்டார் நகைப்பார் கடும்புலியைப் போற்றமையர்
உண்டா மெழுபேர்க ளுற்றதாய் தந்தைபெற்று
நன்னயம தாயிருக்க நாடியே யிவ்வனத்தில்
கன்னியிந்த வள்ளியருங் காவலுக்கு வந்ததென்ன
விந்தை யென நினைத்து மேதினியி லுங்களையும்
நிந்தைசெய் வாரதினுல் நீதியுள்ள மைந்தர்களே
ஞாயவழி யாக நடவுங்க ளென்றவரைத்
தூயமுடி சூட்டுந் துரைநம்பி ராஜனுமே
வாகா யுரைத்தசொல்லை மைந்தருந் தானறிந்து
ஆகாதா வென்றுசினந் தப்போ தவர்களுமே
பாவைதங்கை வள்ளியரைப் பாரவனக் காவலுக்குத்
தேவை யுடன னுப்பச் சித்தமில் லாவிடிலோ
எங்களுக் காவதென்ன வென்றுமே தானெழுந்து
சிங்காரச் சோலைதனைச் சேர்ந்தனர்கா ணம்மானை.

இறைவன் குமாரர்களுக் கியம்புதல்.

வனத்துறு மக்களையும் வாகாய் வரவழைத்தத்
தினத்திலே வேந்தன் செப்புவா னேர்வசனம்
புத்திரசி காமணிகாள் பூவைவள்ளி யம்மைதனை
சித்தசன் றோதுவுஞ் சீறியே வந்துலவும்
சிங்காரச் சோலை தினைப்புனத்திற் காவலதாய்
மங்களமாய் வைத்து வருவீரென் றேயுரைத்தான்
அந்தவுரை கேட்டெழுவ ரன்பு நிறைந்ததந்தை
சிந்தைக் குகந்தபடி செப்ப மனமகிழ்ந்தார்,

வள்ளியை மன்னன் சபைக்கழைத்தல்.

நத்திப் பணிவிடைசெய் நாரிகளி லோர்தாதி
முத்து மணியென்ற மொய்குழலைத் தானழைத்து
சித்திரச்சா யல்போன்ற செல்வி யெனதுமகள்
உத்தமியாள் வள்ளியைநீ யோடியே யிட்சணத்தில்
கூட்டிவரு வாயெனவே கூறினான் ராஜனுமே
ஓட்டமதாய் தாதியவ ளோடியே வள்ளியின்பால்
சீதன் றனைப்பழித்த தேநுதலா யுன்றனையும்
நீத னழைத்து நிமிடம் வரும்படியுன்
தந்தையுரைத் தாரெனவே தாதிசொலக் கேட்டவுடன்
விந்தைச் சிலம்பணிந்த மெல்லிவள்ளி யாளெழுந்து
கூடியே தாதியுடன் கொம்பே ரிடையாளும்
சேடியரின் றோளணைத்துத் தேவி யவணடந்து
ஆகாயக் கங்கு லகற்றிடவே மத்தியினில்
வாகா யுதித்து வளர்சந்தி ரன்போல
தேச மனுநிறைந்த சிங்கார மண்டபத்தில்
வாசவனைப் போலாக மன்னவனும் வீற்றிருக்க
அரச னவைதேடி யப்போதே வள்ளியம்மை
விரைவாய்ப் பதப்பணிந்து மேற்புற மாயொதுங்கி
தாங்கள் வரவழைத்த சங்கதியா தோவெனவே
பாங்குடைய வள்ளி பரிவாகத் தான்கேட்க
தேசத் தவர்போற்றுந் தேசிகனு மன்னவனும்
நேசமா யோர்ந்து நிகழ்த்துவா னோர்வசனம்.

வள்ளியைத் தினைப்புனங் காக்கச்சொல்லல்.

விருத்தம்.

பூங்குயி லிசையை வென்ற புனக்கிளி மயிலே கேளாய்
பாங்குள தினைப்புனத்தைப் பறவைவந் தழிக்குதென்ன
ஆங்குசென் றண்ணமார்க ளறிந்துவந் துரைத்தாரத்தைப்
பாங்கிய ருடனங் கேகிப் பயிர்தனைக் காப்பா யென்றான்.

அம்மானை.

மானேமா ணிக்கமயிலே வனக்குயிலே
தேனே திரவியமே தேவர்களுக் கோவியமே
அஞ்ஞானக் கங்கு லகற்றியின் பங்காட்டும்
மெஞ்ஞானச் சோதிவிளக்கே பரம்பொருளே
அம்மணியே என்தாயே யானழைத்த காரணங்கேள்
செம்மணியைப் போலத் திரண்டே தினைப்பயிர்கள்
வளர்ந்ததுவைக் கண்டு வனத்தில் நெருங்கிமிக
களங்கமில் லாப்பணத்தைக் கள்ளர்கைக் கொள்ளுதல்
கொண்டை வளர்த்தான் குருகுமுதற் கேகயமும் [போல்
கண்டோர் மயங்கிவிழுங் கண்டக் குயிலினமும்
காடை கவுதாரி காக்கைகா னுங்கோழி
மாடப்பு றுமயினு வானபட்சி சாதியெல்லாம்
தட்டிக்கே ளாவிடிலோ சண்டப் பிரசண்டன்
திட்டமே தம்பி திறமென் பதைப்போல
அங்கிறங்கிக் கொய்யுதென்றே அண்ணர்களுந்தெரிந்து
இங்கெனக்குச் சொன்னார்க ளேந்திழையே யுன்றனையும்
பட்சி தினைப்பயிரைப் பட்சிக்கா மல்விரட்டி
இச்சித்திருக்க இனியபரண் கட்டிவைப்பார்
ஆனதினல் வள்ளியரே அத்தினையைக் காப்பதற்கு
தேனமிர்தச் சொல்லாய்கேள் சென்றுமே பாங்கியுடன்
உன்னிதப் பரண்மீதி லொண்டொடியே நீயிருந்து
என்றன்சொல் தட்டா தினியத் தினைப்பயிர்கள்
பங்கப்ப டாதவண்ணம் பாதுகாப் பாயெனவே
அங்கங் குளிர்ந்துவள்ளி யம்மை யுரைப்பாளே.

மன்னனைப் பார்த்து வள்ளி சொல்லுதல்.

எந்தை யெனைவேண்டி யின்பத் தவம்புரிந்து
சுந்தரமாய்ப் பெற்றெடுத்த தோன்றல் நீர் சொன்னபடி

தான்நடக்கக் காத்திருக்குந் தன்மையறி யாதவண்ணம்
ஏன்கவலை கொள்ளுகிறீ ரிச்சணமே தோழியுடன்
நானே வனமேகி நல்லதொரு பட்சியினம்
தானே தினைப்பயிர்கள் தன்னையழி யாதவகை
சேவற் கொடிபிடித்த செவ்வேள் தனைப்போற்றிக்
காவ லதுபுரிந்து காத்திடுவே னென்று சொல்ல
மன்னன் மனங்கனிந்து மக்கள் தனையழைத்து
கன்னிவள்ளி சொல்லுங் கருத்தறிந்தீ ரோவெனவே.

வள்ளி தினைப்புனத்தைக் காத்தல்.

சிந்தை மகிழ்ந்தவர்கள் சென்று தினைப்புனத்தில்
விந்தைய தாகவுமே மேதினியோர் கொண்டாட
பவளத்தாற் கால்நாட்டிப் பச்சை வளைபூட்டி
தவள நிறப்பலகை தங்க வரிச்சிகளை
முன்னாலே தான்பரப்பி முத்தாற் குமிழடுக்கிப்
பொன்னாலே கூடாரம் போட்டார்கள் கானலுக்கு
யானையின் கொம்பா லழகாகக் கால்சேர்த்து
தானைகளைக் கைத்துணையாய்த் தானேந்துங் காவலர்கள்
வயிரப் பழுக்கோர்த்து வண்ணமணி யேணிவைத்து
ஒயிலாக வேநடக்கும் ஒண்டொடியாந் தங்கையரை
கூட்டியே வந்தவர்கள் கொம்பனைமார் தாதியுடன்
நாட்டியதோ ரேணியின்மேல் நாயகியைத் தானேற்றி
ரத்தினக்க வண்கொடுத்து நாடி யடுத்தவனம்
புத்தியதாய்க் காத்துவரும் பொற்கொடியார் போலாக
பச்சிபல வந்து பயிரையழிக் காதவண்ணம்
இச்சையாய்க் காவ லிருப்பாயென் றேமொழிந்து
விரும்பிப்பூ மாலையணி வேந்தரண்ண ரேழ்பேரும்
திரும்பி யரண்மனைக்குச் சென்று ரதன்பிறகு.

வள்ளியம்மை ஆயாலோட்டல்.

ரஞ்சித வார்த்தையுள்ள நங்கைவள்ளி யம்மையரும்
வஞ்சியர்கள் சூழ மகிழ்வாய்ப் பரண்மீதில்
வேலன் தனைப்போற்றி மெல்லியர்கொண் டாடிடவும்
நீல விழியதனை நேர்மை யுடன்புனத்தில்

செலுத்திப் பயிர்களுக்குத் தீமைய ணு காதபடி
கலுக்கென்று கைவளையற் காப்புத் தொனிமுழங்க
கையிற் கவணெடுத்துக் கன்னியிவள் சாடிடவும்
வைபவம தாய்வனத்தில் வந்தபட்சி யோடிடவும்

குறவர்கு லக்கோன் குமரிவள்ளி வந்திரங்கும்
பறவைகள் தன்னையுமே பண்பாய் விரட்டலுற்ருள்

வன்னக் குயிலினமே வான்குருவி ஆலோலம்
சின்னப்பூஞ் சிட்டுகளா செம்போத்தே ஆலோலம்
கொண்டை வளர்த்தான் கொக்குகளா ஆலோலம்
கண்டபே ரண்டங் கழுகுகளா ஆலோலம்

மாடப் புருக்காள் வனமயில்காள் ஆலோலம்
தேடறிய நாகணவாய் சிச்சிலிகாள் ஆலோலம்
பாகாம் புருவானம் பாடிகளா ஆலோலம்

காகா வெனக்கூவும் காக்கைகளா ஆலோலம்
தொன்றுதொட்டுக்கூடுகட்டுந் தூக்கணங்காளாலோலம்
நன்ருங் கவுதாரி நாகணங்காள் ஆலோலம்
கலைமான்முட் பன்றி கரடிகாள் ஆலோலம்

மலையா முசுமுயலே வல்லியங்காள் ஆலோலம்
ஆடுகாட் டாடுகுறும் பாடுகாள் ஆலோலம்
தேடும்வெள் ளாடுகளா சிங்கங்காள் ஆலோலம்
கத்தூரிப் பூனை கவரிமான் ஆலோலம்
எத்தாம் நரிகாட் டெருமைகாள் ஆலோலம்

மதங்கொண் டுலாவும் மதகரிகாள் ஆலோலம்
பதமாய்ப் பறந்தோடிப் பாங்காய்ப் பிழைத்திடுங்கள்
என்றுமே வள்ளி யிதமா யெடுத்துரைத்து
நின்று கவணெறிந்து நெஞ்சம் மிகமகிழ்ந்து
பாலோ பழரசமோ பாவை குறக்குயிலோ
ஆலோல மென்றசத்தம் ஆரணியந் தானடுங்க
விஞ்சையர்கள் தானும் வியப்படைய மாதுநல்லாள்
வஞ்சியர்கள் சூழ வனமதனைக் காத்திருந்தாள்.

நாரதர் வள்ளியைக் கண்டுபேசுதல்.

கலிவிருத்தம்.

விஞ்சை யோரும் வியப்படை வீணையான்
மஞ்சை யார்சடை மாதவ நாரதன்
பஞ்சைவான் தங்கம் பார்த்ததைப் போலவே
வஞ்சி வள்ளியைக் கண்டு மகிழ்ந்தனன்.

அம்மானை.

சிந்தைவைத் தந்த தினைப்புனத்தைக் காத்திருக்க
விந்தையாஞ் சந்தமொடு வீணைமீட் டிச்சுருதி
கீதசா ரப்படியே கீதந் தனைப்பயின்று
வேத னுருத்திரன்மால் விண்ணவர்கள் தான்மகிழும்
சங்கீதந் தேர்ந்த தவரிஷியாம் நாரதரும்
சிங்காரச் செஞ்சடையுந் தேன்றுழாய் மார்பணியும்
இடையிற் புலித்தோலும் ஏற்றகெண்டி யுங்கரமாய்
விடையோனமர்ந்திருக்கும் வேணதலம்போற்றிசெய்து
தென்பொதிகைக் கேகித் திரும்பித் திருத்தணிகைக்
கன்புடனே செல்வோமென் றுனந்த மாய்நடந்து
பூவலமெல் லாஞ்சுற்றிப் பூத்து மிகச்செழித்து
மாவளம்பொ ருந்தி மலைச்சுனை நீர்நிறையும்

அலங்கார வெள்ளிமலை யண்டி வருகையிலே
துலங்கு மணிபிடித்துச் சூழ்ந்த தினைப்புனத்தில்
குயில்கூவும் பாவனைபோற் கொப்பெனவே வந்திரங்கும்
ஒயிலுடைய பட்சிகளை யோட்டியா லோலமிடும்
ஓசையதை நாரதனங் குற்றசெவி யாற்கேட்டு
ஆசையுட னவ்வழிசென் றுங்கு பரண்மீதில்
குந்திக்கா வல்செய் குமரி தனைப்பார்த்து
விந்தைமதி யோரதியோ மேனகையோ ஊர்வசியோ
இன்னவளைப் போலேயா னிவ்வுலகிற் கண்டதில்லை
என்னவே வள்ளிக் கியம்புவா ரோர்வசனம்
மண்டல மிட்டிலங்கும் வான்மதியம் போன்றநுதல்
கொண்டு ஜெயம்படைத்த கோதையரே யிப்புனத்தில்
வந்துகா வல்செய் வகையேது நானறியேன்
எந்தவூர் தாய்தந்தைக் கேற்ற பெயரியம்பும்
உன்றன் குலமுமுனக் குற்றதிரு நாமமென்ன
என்றந்த நாரதரும் இன்பமாய்த் தான்கேட்கக்
கண்டு தவமுனியைக் கன்னியரு மேபணிந்து
கண்டுமொழி மின்னுள் கழறுவா ளோர்வசனம்
தவமே தவப்பொருளே சௌமியரே நீர்கேளும்
துவமாய் வளர்ந்தோங்கும் தூயவெள்ளி மாமலைச்சார்
மேபாடி பட்டணத்தை மேவியர சாள்வேடன்
கோபாலன் தன்மருகன் கூர்வேலன் றுள்பணியும்
ராஜாதி ராஜமக ராஜனம்பி ராஜனெந்தன்
ஆசானு பாகுதந்தை யன்னை நங்கை மோகினியாள்
என்றனையீன் றவள்கா ணென்பெயரோ வள்ளியென்பார்
இன்றித் தினைப்புனத்தி லேதான் வளர்பயிரை
பட்சி யிறங்கிப் பருகாம லெந்நாளும்
இச்சையுடன் காவ லிருப்பாயென் றிங்குரைத்துத்

தந்தையும் மூத்தோருந் தான்காவல் வைத்ததினுல்
இந்தப்பூங் காவனத்தி லேயிருக்கி றேன்காவல்
என்றுரைத்துப் பின்னும் இயம்புவாள் வள்ளியரும்
நன்றியுள்ள மாமுனியே நாட்டிடுவீ ருங்களுட
பேரதுவும் ஊரதுவும் பேதகமி லாதெடுத்துச்
சார முடனெனக்குச் சாற்றுவீ ரென்றிடவே
வேதமுனி தானும் விளம்புவா ரப்பொழுது
நாதனிடங் கீதமதாய் நால்வேதம் பாடுகின்ற
நாரதனு மென்றே நவிலுவா ரிப்புவியில்
நாரணன்சி வஸ்தலங்கள் நான்சுற்றி யாத்திரையாய்த்
தென்பொதிகைக் கேகித் திரும்பித் திருத்தணிகை
நன்மையருள் வேலவனை நான்காண வேணுமென்று
செல்லும் வழியதனிற் செல்வியே யுன்றனது
நல்ல தவப்பயனுல் நானறிந்தே னிப்போது
வந்துன்னைக் கண்டேன் வரமுயர்ந்த தாளருளுங்
கந்தனைக் கண்ட துபோற் காரிகையே தோற்றுவதால்
சொல்லிடுவே னிக்கணத்திற் றோகையரே வுன்றனக்கு
நல்லமதி யென்றே நவின்றிடுவார் நாரதரும்.

வள்ளிக்கும் நாரதற்கும் தர்க்கம்.

விருத்தம்.

காரிருட் கரிய கூந்தற் கன்னியே கேட்பா யாக
வாரிதி துயின்ற மாயன் மருகனு முருகன் றன்னைக்
கோரியே வதுவை செய்யக் குறித்திடி லுன்னை யிந்தப்
பாரினி லுள்ள மாந்தர் பணிவரேன் றுரைத்திட் டாரே.

அம்மானை.

சீர்மிகுந்த வள்ளியெனுஞ் சேயிழையே யுன்றனக்குப்
பேர்மிகுந்த தோர்கணவன் பேரரசே மான்மருகன்

காங்கேயன் றன்னைக் கருதி மணம்புரிந்தால்
பாங்குடைய வானவரும் பாரிலுள்ள மானிடரும்
உன்பாதந் தஞ்சமென வுன்ற னடிபணிவார்
இன்ப ரசமொழியே ஏகாந்தப் பேரொளியே
என்றந்த மெய்யர் இயம்பவந் நேரமதில்
நன்றியுள்ள பெண்ணும் நவிலுவா ளோர்வசனம்
சம்புவடி வம்போற் சடைமுடியு மேதரித்து
ஐம்புலனை யுள்ளே அடக்கித் தவம்புரிந்து
சோதியுணர் நாரதரே சூதாக வென்னெதிரே
ஆதிபரா சத்தியெனும் அம்மைதன் புத்திரனும்
மாட்சியா சானை மணம்புரிகு வாயெனவே
தாட்சி யுரைத்தீர் தவமுனியென் றேபொறுத்தேன்
திருத்தணி வேலிறைவன் தெய்வமல்லோ யென்றனக்கு
பொருத்தமிலாப் பேச்சைப் புகன்றீரென் நாரதரே
போம்போமப் பாலென்று புத்தியுள்ள வள்ளிமின்னுள்
வேம்பைப்போல் வார்த்தை விளம்பினுள் கோபமதாய்
நாற்றிசையுங் கீர்த்திபெற்ற நாரத மாமுனிவர்
சாற்றிடுவா ரோர்வசனம் தையலருக் கந்நேரம்
பெண்ணுட் சிகாமணியே பேரரசன் புத்திரியே
கண்ணுட் கருத்தமணிக் காரிகையே நீர்கேளும்
அண்டபகி ரண்டமுத லண்டருமே தானறியா
மண்டலமெல் லாஞ்சுற்றி மாதரசே வந்தேனே
எத்தலங்க டோறுமுனக் கேற்றமண வாளனில்லை
யுத்திக்கு வேலா யுதன்போல் வனப்புடையோர்
இத்தலத்தில் வேறொருவ ரில்லை யெனத்தெரிந்தேன்
எத்தனையோ கால மிருந்துதவஞ் செய்தாலும்
வத்தனையாங் கத்தனைப்போல் வாய்ப்ப தருமையம்மா
இத்ததியி லீசனென்னை யிட்டுவந்து விட்டதினுல்

மூதோர்செய் புண்ணியத்தால் மொய்குழலே யுன்றன்
ஏதோநான்வந்தே யிசைத்தேன்கா ணிவ்வசனம்[மூனே
தன்னையுணர்ந் தப்படிக்குத் தானே யிசைந்திருந்தால்
உன்னைப்போற் பெண்க ளுலகத்தில் யாருமில்லை
நன்றிதுதாய் தந்தையர்க்கு நாமுரைத்த தாயுரைப்பீர்
என்றித் தவத்த ரிசைவீணை யின்தொனிபோல்
ஓதிடவந் நேரமதி லோகோயீ தென்னவிந்தை
நீதியுள்ள மோனர் நிலைதவறிப் பேசுகிறர்
காரண மேதோ கருத்தில் வருத்தமதாய்
நாரதரைப் பார்த்து நவிலுவா ளோர்வசனம்
வாருங்காண் மாதவரே வார்த்தையொன்று நீர்கேளும்
பாருங்கா ணைம்பூதப் பாம்புகளைத் தான்செயித்து
அரியதவஞ் செய்தும் அறிவுசற் றில்லாமற்
பெரியவர் நானென்று பேசுவது ஞாயமல்ல
எத்தனையோ நானு மெடுத்துரைத்த தத்தனையுஞ்
சித்தத்தி லெண்ணுச் செவிடன்கா திற்சங்கு
வாத்தியச் சத்தம்போல் வாச்சுது மாமுனியே
நேத்தி வெகுநேத்தி நின்வசனம் யாதெனிலோ
வெந்தது போதுமிந்த முந்தியிலே போடுமென்று
அந்தமில்லாச் சொல்லை யறையவந்தீ ரென்னெதிரே
இனிமே லெவரிடத்தும் இப்படியே நீருரைத்தால்
கனிவாகப் பற்காட்டிக் காளையரை யேமாற்றும்
வேசைபாற் காசுபெறும் வீணனிவ னென்பார்கள்
பூசை தனிற்சிறந்த புண்ணியவா னென்பதுவும்
மாறி மறுபெயரும் வாரா வகையாகத்
தேறியே நல்வழியிற் சென்றிடுங் காணெனவே
மானிலத் தோர்புகழும் மங்கைவள்ளி யாளுரைக்கக்
கானிற் றிரிமாட கத்தோ னுரைப்பானே

கோனுமற் கேளுங் குமரனுட தன்பெருமை
தோனும லென்மனமுந் துன்பமுறப் பேசலுற்ருய்
ஆனாலுங் குற்றமில்லை யம்மே யவர்சமர்த்தோ
கோனுஞ்செந் தூர்வாழ் குமரன் கழல்மறவா
அன்பர்க் கனுகூலன் அம்பிகை தன்பாலன்
துன்ப வினை தீர்க்கும் சோதி மணித்தீபம்
அண்டரெல் லாரும் அடிபணியும் பொற்ருளன்
மண்டாடுந் திண்டோளன் மாசூர பத்மனையும்
வேலுக் கிறையாய் விருந்து பருந்துகளுக்
கேலுதல்செய் வீர னெழிற்கமலப் போதனையும்
மூலமந்தி ரத்தை மொழிவா யெனப் புகலச்
சாலவுரை யாததினற் ருனுரைத்துக் காவலதில்
அடைத்தேயவ் வண்டமதை யண்டர் முனிவர்களும்
புடைசூழச் செங்கோல் புரிந்த மகாதீரன்
இன்னமுங்கேள் யானுரைப்பே னேற்ற மருந்துகளில்
நன்னயச்சுக் கில்லாத நல்லவிழ்த மொன்றுமில்லை
வேலவனை யன்றிப்பின் வேறுதே வில்லையென
ஞாலமதின் மேலோர் நவிலுவா ரானதினல்
வேடனுயர் சீர்மை விளக்கவிப் பூச்சுமக்கும்
சேடனுந்தன் நாவதனுற் செப்பமுடி யாதெனிலோ
வானகத்திற் கானகத்தில் வாழுந் தவமுனிவன்
தானகத்தி னுற்றெரிந்து சாற்றிடுவ தெந்தவிதம்
அப்படிக் கொற்றவரை அம்மைவள்ளி நீமணந்தால்
செப்பவொணு திப்புவியிற் சீர்த்திபெற்று வாழ்ந்திருப்
என்றித் தவமுனிவ னீதுரைக்க வக்கணத்தில் [பாய்
வென்றியுள்ள மாது விளம்புவா ளோர்வசனம்
தோடி பயிரவியைச் சொற்சுதிநற் கீதமதாய்
நாடி யிசைபாடும் நாரதரே உன்றனக்கு

எத்தனை யோவிதத்தி லென்ன லியன்றமட்டும்
இத்ததியிற் புத்தி யெடுத்துரைத்துங் கேளாமல்
வெக்கமுங் கெட்டு வெளிப்பட்ட மூளியற்கு
முக்காடே துக்கோ மொழிவ ரதைப்போல
நாணமென்ப தில்லாது நாயகியே கந்தனையும்
தோணப்பதியெனவே சொன்னீ ரிதைநோக்கில்
நரிக்குச்செங் கோலரசு நாட்டார் கொடுத்திடிலோ
மறிக் கிடைக் கோராடு வம்பாகக் கேட்ட தொப்பாய்
இருக்குதுகா ணெங்க ளியற்கையுந் தோற்றமல்
முறுக்குகிற யென்றன்முனே முறுக்குச்சிப் பாயெனவே
அறியாத வூரி லறைவரிலுப் பம்பூவை
வெறியாத சக்கரையாய் விள்ளுவார் போலாக
தாவிக்கும் மாளமிட்டுச் சண்முகன் றன்னையுமே
ஓவியமா யென்செவியி லோதவுநீர் வந்தீரே
தவமுனி யாமெனவேதான்பொறுத்தே னின்னமுமென்
கவனமறி யாது கதறுகிறீர் வீணேநீர்
சேத்திலே நட்டகம்பஞ் செய்தி யறியீர்போல்
ஆத்திரக் காரர்க் கறிவுமட் டானதினல்
போங்காணு மப்பாலிப் போதண்ணன் மார்களுமே
திங்கனிகி ழங்கு தினைமாசெந் தேனெடுத்து
வரும்பொழுது தானுச்சு வந்தார்க ளாமாகில்
அரும்புநிகர் வேற்கணையா லங்கந் துளைத்திடுவார்
அப்போதென் றன்பேரி லாயாசங் கொள்ளாமல்
இப்போதே நீர்நடவு மென்றுளே வள்ளியரும்
அவ்வார்த்தை யுங்கேட் டருந்தவ மாமுனிவன்
கொவ்வைக் கனியிதழாய்க் கூறக்கே ளென்றுரைப்பார்
கோதையரே யென்மீதிற் கோபமது வேண்டாங்காண்
பாதைதனிற் போகிறவன் பாடியே யோடுதல்போல்

நானுன்றன் பக்கலிலே நாதன் திருத்தணிகை
வானுலகோன் றன்மருகன் வாழுஞ் சரவணனை
திருமணஞ்செய் வாயெனவே தேவி யுனக்குரைத்தால்
கரும்புண்ணக் கூலியது கட்டழகா தாருமென்றீர்
ஆரணங்கே வேத னமைப்பதுவும் மாருது
காரணங்கே ளட்டையது கார்புனலை விட்டதுவும்
விண்ணுடி வாரா விரும்புவோர் முன்பாகக்
கண்ணுடி தோன்றிற் களங்கமில் லாநுதலும்
தானே விழிதனக்குத் தான்தெரியு மென்பதைப்போல்
மீனேர் விழியணங்கே வேலவனு முன்னெதிரே
உடையோனும் வந்திடிலோ ஒண்டொடியே யந்நேரம்
விடையோன்றன் பத்தன் விளம்பியது மெய்யெனவே
அப்போதல்லோதெரியும் அன்புடையோனென்வசனம்
இப்போது நானும் இயம்புவதி லென்னபலன்
என்றந்த மோன ரெழுந்தாருட் காரெனவே
தன்மையுள மாது சாற்றிடுவா ளோர்வசனம்
கந்தனும் நீருங் கனிவாகக் கூடிவந்து
எந்தனுக்கு முன்பாக விந்திர சாலவித்தை
கோகர்ணம் மாகர்ணம் கூடுவிட்டுத் தான்பாயும்
மோகனமுச் சாடனங்கள் மூலமந்தி ரஞ்செபித்த
வித்தைக ளெத்தனையோ அத்தனை நீ ராடிடினும்
அத்தனைக்குந் தானே அரிவைமயங் காளெண்ணும்
பனங்காட்டுச் சம்பும் பனையோசைக் கஞ்சாதென்
றினங்காட்டிப் பேசி லிணங்குமோ மாமுனியே
ஆண்பிள்ளை நாமெனவே ஆண்மை மிகவடைந்து
வீண்வாது செய்யாதே வேகமா யும்முடைய
காரியத்தைப் பாருமென்று கன்னி யுரைத்திடவே
கோரியதை யேமுடிக்குங் கொண்டுணி நாரதரும்

சுயவரங் கந்தனையுஞ் சூட்டும் படிக்காக
நயமோ டுபாயமதாய் நாமிவளுக் கேயுரைத்த
அத்தனையும் நீரோடு மாற்றிற் கரைத்தபுளி
யொத்ததைப்போலாகில்நா மூற்றசெய்கை யேதெனவே
ஏங்கிநெடு மூச்செறிந்தங் கெண்ணிப் பலவிதமாய்
தூங்கிவிழித் தோர்நினைவில் தோன்றியதுபோன்மதி
வள்ளியரைப் போல மடலொன்றைத் தானெழுத [த்து
கள்ள மனத்திற் கருதினர் மாமுனியும்
படமாய் வரைந்து பரமன் புதல்வனிடம்
திடமாய்க் கொடுத்துமிவள் சேதி தனையுரைத்தும்
கோரிக்கை யின்படியே கொண்டு நடத்திடிலோ
பாரிலென் நாமம் பரிமளிக்கு மென்றேதான்.

நாரதர் வள்ளியைப்போல் படமெழுதல்.

பாலிலுந்தித் திப்பாய்ப் பகருந் துவர்வாயாள்
சேல்விழியாள் வள்ளி திருவடியைப் போலாகச்
சித்திரர்கள் புத்தியதால் தேர்ந்தெழுதவொண்ணாத
சித்திர லேகையொன்றைச் சீராய் வரையலுற்றார்
முன்பகையா லெல்லை முடுக்கிவெல்ல வேகருதி
தன்படையைக் கூட்டிவருந் தன்மையிரு ளல்லாமல்
தேசுயர்ந்த திங்களையின் றேசெயிக்க வேண்டுமென
மாசுடனே வந்தெதிர்க்கும் வண்ண முகிலினமோ
அலைமோதும் வாரிதியி லன்று துயில் சீதரன்றன்
நிலையைப் பழித்து நெருக்கமாய்த் தான்வளர்ந்து
நெடியநீ ராழியலை நேர்மை யுடன்கொழித்த
பொடியதோர் தெள்ளறலோ பூங்கா வனமதனில்
புதுப்போ தலர்ந்து பொழியுமது வையுண்ணும்
கதுப்படா வண்டினத்தின் கார்மேனி யோவெனவும்

அமரபக் கத்திருளோ அல்லதுகொன் றைக்காயின்
தமமோ வெனப்புலவர் தானுரைக்க வேகளப
கஸ்தூரி தானணிந்து கல்லார் மனமதுபோல்
விஸ்தாரப் பேச்சதினல் வீணர்நெஞ் சைத்திருத்தி
கலவிவிலே வாங்கியிடுங் காரிகையார் தன்கருத்தோ
அலருஞ் சினேமலர்க ளாலமைந்த மாலேபுனே ந்
திதுவென்று தானும் இணேயுரைக்கக் கூடாமல்
பொதுவாயமைந்திலங்கும்பொற்கொடியாள்கூந்தலதை
நற்றவஞ்சேர் மாமுனிவன் நாடி மனந்தேர்ந்து
அற்புத மாகவரைந் தானே மகிழ்ச்சியுடன்
மூன்ரும் பிறையைவென்றமொய்குழலாள்நெற்றியினேத்
தான்மூன் மனதிலுன்னிச் சாதுரியமா யெழுதி
அன்றரன்செய் யோகமதை யாங்கழிக்கப் பாங்குடனே
சென்றுமலர்விடுத்த சித்தசன் செங்கரத்தில்
பற்றிச்செந் தாமரையாற் பாரெலாந்தான்செயிக்கும்
பொற்கரும்பு விற்போற் புருவ மிரண்டெழுதி
காலன் றனக்குக் கடுங்கொலேயைத் தான்பயிற்றும்
வேலதுபோல் நீண்டு வெளுத்துநடு மத்தியதில்
மாலாங்கருவிழியும் வண்ண வரிசிதறி
மேலாய்க் கடைசிவந்து மெல்லிய காதளவு
நேராக வேநீண்டு நீத்தோர் மயங்கிவிழப்
போராடுங் கண்கள் பொருந்த விரண்டெழுதி
வண்டுநாண் கொண்டுமலர் வாளிவிடும் வேளழகைக்
கண்டுகொள்ள வைத்ததொரு கண்ணுடி யாமெனவும்
கண்வாளேத் தீட்டக் கதுப்புச்சா ணேநிகராய்த்
தண்கபோ லத்தையங்கு தானெழுதினுரதன்பின்

எள்ளுப்பூச் சண்பகமும் ஏற்கா தினையிலெனை
தெள்ளுகுமி ழம்பூவைச் சிறிப்போ ராற்றுரத்தி
கண்டோருள் ளத்தைக் கவர்ந்தே தனக்குவமை
யுண்டோ வெனப்புலவ ரோதவழி யில்லாத
மூக்கதனைப்போலாய் முனியுமதிற் றுனெழுதி
ஊக்கமதாய் வள்ளையிலை யோங்கி வளர்ந்ததுபோல்
நீட்சி பொருந்தியது நேர்நோக்கினர் மனதை
மாட்சிமைசே ருசலென வாட்டிடுங் காதெழுதி
மதுரந் ததும்புமல்லி மாமலரெ னப்புலவர்
பொதுவாய்சொன் னலும் புதுப்பவளத் துண்டதொக்
என்றுவமை தானும் இயம்பமுடி யாதினிமை [கும்
நன்றமுதை யுந்தானே நல்கு மிதழெழுதி
பவளக்கிண் ணத்திற் பதித்ததொரு முத்தினத்தின்
தவளம் பழித்திலகு தந்தபந்தி ரெண்டெழுதி
ஆடரவந் தீண்டா வமுதகிர ணன்றனையும்
ஈடென் றுரைக்கிலதற் கேற்காத் திருமுகத்தாள்
சித்தச னுக் கேற்றதொரு சீர்முரசெக் காளமெனும்
சத்தமிரண் டிற்சிறிது தான்கவர்ந்து மேவளர்ந்த
கமுகு தனைப்பொருவுங் கந்தரமுந் தானெழுதி
அமுத கிரிகளிரண் டங்குவந்து தித்தாப்போல்
ஆனைமத்த கத்தையொத்த அம்மை தனமதின்மேல்
தேனை வடிக்குந் திருமாலை போட்டதொப்பாய்
சேர்ந்தே ரசம்பெருகச் சீராய் வளர்கரும்பைத்
தேர்ந்தோர் வளைக்குந் திரண்டபுயந் தானெழுதி
தாமரையின் மாமலரைத் தானேபங் கப்படுத்தும்
காமன்கைப் பூவெனவே கைத்தலமி ரண்டெழுதி
உவமையின்ன தென்றே வுரைக்கமுடியாமலயன்
தவம்புரிந்து மேபடைத்த தாம்விரலைக் கண்டெழுதி

சேத்துமால் கோத்திரஞ்சார் செண்பகப் பூப்பூத்த
பாத்தியொப்பா யெங்கும் படருரோ மம்வரைந்து
உந்திச் சுழியுமதி லோங்குதரத் தின்மடிப்பும்
மந்திரமோ தந்திரமோ வான்மின்ன லோயிடையும்
உண்டில்லை யோவென் ஞெருவாறு சந்தேகங்
கண்டுகொள்ள வேமுடியாக் காரிருளில் மின்மினியும்
வாகாய்ப் பறந்ததுபோல் மாதிடையுந் தானெழுதி
மோகாந்த காரர் முழுதுந் தியங்கிவிழ
பொங்கு மதத்தைப் பொழியுமா தங்கத்தின்
செங்கரத்தை யொப்பத் திகழ்துடைகள் தானெழுதி
அன்னமீ தேறும் அயனமைத்த பெண்களிலே
மன்னவர்க டன்னை மருட்டுமுழந் தாளெழுதி
அங்கசன் தோளணியும் அம்பென்ன வேகவிஞ்ஞர்
பொங்க முடனுரைக்கும் பூவாளிக் கூடடங்கும்
ஆவம் புறங்கொடுக்க அற்புதம தாயமைந்து
தாவல்செய் கின்றவிரால் தன்னை நிகர்க்குமென்ன
ஓவியம் போலிளைஞ் ருள்ளங் கவரவதில்
மேவி மிரட்டுமந்த மெல்லிகணைக் காலெழுதி
செந்தா மரைமலரோ செவ்வானத் தின்நிறமோ
சுந்தரஞ்சேர் செம்பஞ்சைச் சூட்டிவைத்த தாமெனவோ
நல்ல மலரெல்லாம் நாண வடியெழுதி [துச்
சொல்லமுடி யாவனப்பாய்த் தோன்றுபடத் தைப்பார்த்
சந்தோஷங் கொண்டு தவமுனியெவ் வெவ்விடத்தில்
சொந்த மெனப்பணிதி சூட்ட மனதி லெண்ணி
அந்தந் தவயவத்தி லாபரணந் தானெழுதி
சிந்தைகளித் தப்படத்தைச் செங்கரத்தி ஞலெடுத்து.

நாரதர் திருத்தணிகைக் கேகல்.

நடந்தார் திருத்தணிகை நாடியந்தப் பாதைவழி
தொடர்ந்தார்போய்ச் சேரவென்று தூய மனத்துடனே

ஆனந்தங் கொண்டேதா னாரணியத் துட்புகுந்து
தானந்தங் காணத் தவமுனிவ னேகவங்கு
கான மயிலாடக் கார்நிறக்கு யிற்பாட
வானம்பா டிக்குருவி வானிலிருந் தோடிவர
காடைகவு தாரியண்டங் காக்கைநீர்க் காக்கைகளும்
பேடையன்னத் தோடுகந்து பேசி விளையாட
நாரை பெருநாரை நாகணவாய்ப் புள்ளுகரு
நாரைவெண் ணாரைதூக்க ணங்குருவி யூர்க்குருவி
சக்கரவா கம்பருந்து சாதகஞ்சம் பங்கோழி
கொக்குவக் காவுங் குருகுசெம் போத்தினமும்
தங்குங் குளத்துநீர் தானருந்தி நீந்தியும்பின்
னெங்குந் திரிந்தங் கிருந்துவிளை யாடுமதை
வண்டுறீங் காரமிட்டு மாமுனிக்கு ரைத்திடவே
கண்டந்த நாரதனுங் கண்குளிர வேபார்த்து
மல்லிகை முல்லை மலரிரு வாச்சிபிச்சி
சொல்லரிய புட்பவகை சூழும் வனந்தாண்டி
சிங்கம் புலிகரடி செந்நாய்காட் டாடெருமை
தங்கி வளர்மலையின் சார்பொதுங்கி யேயடர்ந்த
அத்தி யகத்தியசோ காலரசு பூவரசு
இத்தியெலு மிச்சைநெல்லி யீந்துநா ரத்தைபுளி
புன்னை மகிழ்மருதம் பூமருங்கை வேல்வேங்கை
தென்னை பனைபாலை தேக்குவன்னி வெட்பாலை
சந்தனங் குங்குமஞ்சி வந்திசெண்ப கஞ்செருந்தி
பந்திபந்தி யாயிருக்கும் பாதிரிப லாமரத்தில்
வந்துவந்து தாவும் வளங்க டனைப்பார்த்து
சந்தோஷ மாகச் சருகு பலாதியுண்டு
தங்காம லெங்குந தனியாய் வனங்கடந்து
செங்கழுநீர் புட்பந் தினமூன்று புட்பிக்கும்

சரவணப் பொய்கை தணிகைத் தலஞ்சேர்ந்து
சரவணனைக் கண்டுடனே சாஷ்டாங்க மாய்ப்பணிய
ஏதுகாண் நாரதரே யெங்கிருந் திங்குவந்தீர்
சூதுகா ணெண்ணுமற் சொல்லுவீ ரென்றுரைக்கத்
தண்டு கமண்டலங்கைத் தாங்குமோர் நாரதரும்
விண்டுரைப்பேன் கேளுஞ்செவ்வேளே யெனவுரைப்பார்

சுவாமியைக் கண்டு நாரதர் சொல்லுதல்.

சேவற்கொடிபடைத்தோய் செய்தியொன்று நீர்கேளும்
தேவலோ கம்புகுந்து சென்றுலவிப் பூவுலகில்
கண்டி கதிர்காமங் காசியருணகிரி
திண்டி வனம்பழனி செந்தூர் சுவாமிமலை
மண்டலமெல் லாஞ்சுற்றி மாதீர்த்தந் தானுடி
கொண்டாடிப்போற்றுங்குருமுனியைப் போய்ப்பார்த்து
தென்பொதிகை விட்டிறங்கித் தேவா வுமைக்காண
இன்பாய் வரும்வழியி லேவெள்ளிக் கோசார்பு
சூரியனைப் போலொளியுந் தோன்ற மதிமருண்டு
நேரிலொரு தாரிசென்று நிற்கவே யங்கொருபெண்
தினைப்புனத் தோரமொரு சிங்கா சனம்போலே
வனப்பாய்ப் பரண்கட்டி வைத்துக்கா வற்காக்கும்
வள்ளியைக் கண்டு வசனித்தே னுன்பெருமை
எள்ளள வேனும் இணங்கா தெடுத்தெறிந்தாள்
எப்படியா னாலும் இணக்கி மணம்புரியச்
செப்படி வித்தைசெய்யச் செப்பியடி வைத்துவந்தேன்
பணம்படைத் தேரமைந்த பாவைவள்ளி யம்மனை நீர்
மணந்தவளு டன்கூடி வாழ்ந்திருக்கக் கண்குளிரக்
கந்தா நான் பார்க்கக் கருதிவரந் தான்கொடுத்தால்
இந்தா வரைந்தமட லீங்கெடுத் துக்கொடுப்பேன்

என்றவுடன் நாரதனை யேயெடும்பார்ப் போமெனவே
அன்றந்தக் குன்றெறிந்தோ னவலுடன் முன்கேட்க
சாதனைக்கோள் சொல்லுந் தவமுனி நாரதரும்
காதலியைப் போலெழுதி கைதனிலே கொண்டுவந்த
சித்திரமாமடலைச் செவ்வேளின் கைக்கொடுத்து
பத்திய தாய்ப்பணிந்து பக்க மதிலிருக்கத்
திருத்தணிகை மேவுஞ் சிவகுமர னைகந்தன்
விருப்போடு கையால் விரைவாகத் தான்வாங்கி
வண்டுலவும் பூங்கூந்தல் வள்ளி படத்தழகைக்
கண்டு மதிமயங்கிக் காங்கேய னப்பொழுது
கருத்திலா லோசனையாய்க் கன்னியைம ணம்புரியப்
பொருத்தம்வைத் துப்பார்த்துப் புந்தி மிகமகிழ்ந்து
இப்படிக் கொற்றவளை யிவ்வுலகிற் கண்டதில்லை
செப்புச் சிலைபோன்ற செல்வி யிருக்குமிடம்
எங்கே யெனவறியோம் இப்போது மாமுனியே
அங்கேயான் செல்ல அடையாளஞ் சொல்லுமென்று
வாஞ்சையாய்க் கேட்கும் வடிவேலன் முனறிய
மாஞ்சிரா கம்பாடும் மாதவனு மீதுரைப்பான்
உடையாய்முந் நீரை யுடுத்தும்பூ மாதினுக்குச்
சடைபோ லநேகமலை தான்சூழு மங்கெனவே
குஞ்சர மாமலையுங் குற்றால மென்மலையும்
செஞ்சடைக் கோசிகருஞ் செய்வேள்வி மாமலையும்
அங்குண் டிராகவனும் மவ்வேள்வி யையழித்த
மங்கையாந் தாடகையை மாய்த்ததுவு மத்தலங்காண்
அத்தலந் தன்னி லருந்தவ மாமுனிவர்
எத்தனையோ கோடி யிருப்பா யிருப்பார்கள்
தென்பொதிகை மாமலைக்குச் செல்லும் வழிதனிலே
நன்னய வெள்ளிமலை நாடியே தோற்றுதுகாண்

அப்பருவ தத்துக் கருகோர் தினைப்புனத்தில்
செப்பரிய சுந்தரஞ்சேர் செல்விதனைக் கண்டுவந்தேன்
அங்குநீர் சென்று லறியலா மென்ற சொல்லை
மங்கைகேட் டந்நேரம் வந்துரைப்பாள் தெய்வானை

தெய்வானை நாரதரை யேசல்.

என்னகாண் மாதவரே இன்னொருக்கா லென்னிடத்தில்
நன்னயமாய்ச் சொல்லிடுவீர் ஞாய முமக்கிதுவோ
எங்கே குடிகெடுக்க வெண்ணிநீ ரிப்பொழுது
தங்கை குறத்தியைப்போற் றுனே மடலொன்று
எழுதியே கொண்டுணிபோ லிங்கென்றன் சாமியிடம்
பழுதிலைபோ வென்றே படத்தையெடுத் துக்கொடுத்து
மனமும்வே றுகமுக மாத்துநீ செய்யவந்தாய்
தினமுமிது வேதொழிலாய்ச் செய்வ துமக்கழகோ
ஏங்கா ணுஞ் சேர்த்துவிட லீதோ பிழைப்பதுவோ
போங்கா ணு மூர்தேடிப் போம்போ மெனவுரைத்து.

சுப்பிரமணியருக்குத் தெய்வானை சொல்லுதல்.

கோல விழிக்கொழுநா கூறுவே னோர்வசனம்
நீல விழிக்குறத்தி நின்னழகுக் கேற்றவளோ
சொள்ளை முகத்தழகுஞ் சூம்புங்கன் னத்தழகும்
கள்ளிவிழி யோபுளிச்ச கண் ணும்பா சிப்பல்லும்
பரட்டைத் தலையழகுஞ் சிரட்டைக் குயத்தழகும்
பிரட்டே உருக்கொண்டு பேசுமொரு நாரதரின்
பட்டத்தை யடிக்கடிக்குப் பார்த்துக்கீழ் வைத்துமனத்
திட்டத்தையும் விட்டுத் தியங்கி மயங்குகிறீர்
என்னிலுந் தானழகோ வேதுமக்குத் தோணலையோ
கன்னி வனக்குறத்தி காதலது மீறியதோ

சவ்வாதத் தர்பன்னீர் தான்கலந்த நீரிருக்கச்
செவ்வையென் றெண்ணுது சேற்றிலே மூழ்குதல்போல்
புத்தி மயங்கிப் பூவை குறத்தியினை
சித்தத் திருத்தல் தெய்வக்கூத் தாமிதுவும்
என்று பலவிதமாய் ஏண்டமட்டும் யோசனைகள்
நன்றி யுடனுரைத்தும் நாடிக்கே ளாததனை
தெய்வானை கண்டு திருக்கையீ ராறுடைய
ஐயாகம் பத்திலிரண் டானையைக் கட்டவென்றே
யோசனை கொண்டீ ருகந்துமே யப்புளிப்பின்
ஆசையைக் கண்டறிய அக்குறத்தி யைமணந்து
வாரும்போ மென்று மலர்த்தாளைத் தான்பணிந்து
சேரும் விடைகொடுத்தாள் தேவேந் திரன்மகளும்.

---

தெய்வானையிடம் விடைபெற்று சுவாமி வள்ளியைக் காணல்.

விடையருள வேவேலன் வேண்டும் பொருளதுவும்
தடையன்றிக்கைவசத்திற் றுனுமகப் பட்டதைப்போல்
சந்தோஷ மிஞ்சியந்தச் சண்முகனு மப்பொழுது
அந்தமுனி யைப்பார்த் தறைகுவார் வள்ளியிடம்
எப்படிச்சொ ரூபம் எடுத்துநாம் சென்றிடுவோம்
செப்பிடுவீ ரென்றுங்கு செவ்வேளுந் தான்கேட்க
யோசனையுஞ் செய்தே யுரைப்பார் சுரேசரிடம்
பாசக் குறக்குலத்துப் பாவையிடஞ் செல்குவதால்
வேடர் வடிவெடுக்க வேண்டுமென் றேயுரைக்கப்
பாடகர் போற்றும் படியாக மாகுறவர்
போலாக வேடம் புனைந்தசே வற்கொடியோன்
கோலா கலச்சிகையைக் கொண்டை முடிபோட்டு
சல்லடங்க ளிட்டுத் தனிக்கருங் கச்சைகட்டி
கல்கல் லெனக்காலிற் கண்டா மணிதுலங்க

68232
0-1:87M6L5.M
N32

காலில் மிதியடியுங் கையில்வில் லம்புடனே
பாலினைப்போற் சங்கு பலமணியுந் தானணிந்து
வீரவா ளைச்சொருகி வேலர்வந் தார்வெளியே
நாரதனுங் கண்டு நமஸ்கரித்தப் பால்நடந்தார்
வீராதி வீரன் வினைதீர்க்கும் மெய்யன்பன்
சூராதி சூரனையுந் துண்டித்த வேற்கரத்தோன்
மாலாய்த் தினைகாக்கும் வள்ளியின் மேற்கருத்தாய்
மேலாம் வனம்நோக்கி வேறொன்று மேநினையா
தோடிவரு மானினத்தி லோர்பங் கதிகமென
நாடியே வந்துகண்டார் நங்கைதினை காப்பதுவை
கண்டுபிர மித்துக் களிப்படைந்திக் கன்னியைப்போல்
மண்டலத்திற் கண்டதில்லை மான்மகன்று னெவ்விதத்
கற்பனைக ளொன்றுங் கருதமுடி யாதவண்ணம் [தும்
அற்புதமாய்த்தானும் அமைத்தானிப்பெண்ணையென்று
மெள்ளமெள்ள வேநடந்து மெல்லிபர ணையடுத்து
உள்ளமதிற் கள்ளமதா யோதுவா ரோர்வசனம்.

சுவாமி வள்ளியைக்கண்டு சொல்லுதல்.

தேனே பசுங்கிளியே தேவர்களுக் கோரமுதே
மானே மரகதமே மாமயி லேகுயிலே
கண்ணேயென் கண்மணியே கற்கண்டே சர்க்கரையே
பெண்கள் சிகாமணியே பேரரசே மாதரசே
இரசம் வடிக்கு மினியமது ரக்கனியே
வரிசையுறுமைத் துனியே வார்த்தையொன்று நீகேளாய்
உன்மீது எண்ணமதாய் ஓடிவந்தே னிவ்விடத்தில்
என்மீது நீமனம்வைத் திப்போ தயைபுரிந்து
உத்தார மொன்றிங் குரைத்திடிலுன் வாயினின்று
முத்ததுவுஞ் சிந்திடுமோ மொய்குழலே அப்படியும்

சிந்திடுமே யாமாகில் சீக்கிரமாய் நானேடி
குந்தி யெடுக்கேனே கோர்வைக்கா முத்ததனை
ஏரிட்டுப் பார்த்தே யெதிர்வசனங் கூறுயோ
போரிட்டு மன்மதவேள் போர்புரிகின் றனேடி
ஏதேது நெஞ்ச மிரும்போ கருங்கல்லோ
வாதேது மின்றி வழுத்தடி யுன்பெயரை
வஞ்சக மல்லவடி வையம் புகழ்கனியே
நெஞ்ச முருகுதடி நீயுமென் னுளாக
வம்படி செய்திடிலோ வந்திடுமோ தம்பிடியும்
தும்படி நேர்ந்துவிடுஞ் சொன்னே னிதுவறிந்து
கூடிட வேநினைந்தாற் கொம்பனையே அன்பரையும்
நாடியுள்ளத்துள் வைத்த நன்மையைப்போ லுன்னைவை
கூறடிப தில்தான் கொடுத்தா லெனக்குக்கை [ப்பேன்
மாறடி யானும் மதியேனச் சித்தசனை
ஆனதினு லென்றனையும் ஆதரிப்ப துன்கடமை
கானக் குறத்தி கருத்தைநிறை வேற்றெனவே
பார்பெற் றிலங்கவரும் பாவைவள்ளி யம்மையரும்
சீர்பெற் றிலங்கிவளர் செவ்வேள் தனக்குரைப்பாள்
வாருங்காண் வேடுவரே வையமிசை முந்நாளில்
பாருங்காண் கானகத்திற் பாவைதம யந்தியினைக்
கண்டுபெண் டுக்கழைத்த காலனிகர் வேடுவனும்
கண்டோர்க ளஞ்சக் கடுஞ்சாம்ப லாயெரிந்தான்
அவமாய்ச்சு ரேசன் அகலிகைதன் னுசையினல்
தவகவுத மன்சாபஞ் சாற்றக்கைக் கொண்டானே
மான்றலா யாணழகர் மங்கையினுற் கெட்டார்கள்
தோன்றுமலென்னெதிரே சொல்லவந்தா யிவ்வார்த்தை
சித்தசனைப் போலே சிறந்த வனப்புடையாய்
எத்தா யெவர்களுனை யீன்றநோன் பெத்தனையோ?

ஆப்பிடைக் கள்வன்போ லகப்பட்டு நையாதீர்
மாப்பிளைக் கோலமதாய் வந்திருப்ப தாலுமது
தனிமனையா ளைக்கூடித் தானிருந்து வாழாமல்
அனியாய மாயிங்கேன் ஆவிவிடப் போறீர்காண்
ஓடியுன் வீட்டுக்குள் ஒண்டொடி யாளுடனே
கூடிவிளை யாடக் குணமாகு மேசொன்னேன்
பதுமினி யானென்றே பாராம லுள்ளுடைந்து
மதுவுண்டோர் போலே மயங்கியிங் கேயிருந்தால்
தமயன்மா ரேழ்பேருந் தான்வரும் போதாச்சு
சமய மவர்வந்தாற் றப்பாது கொன்றிடுவார்
போங்கா ணு மப்பாலே புத்தியுட னேயோடிப்
பாங்காய்ப் பிழைக்கப் பகர்ந்தேனென் றேயிவர்கள்
இருவரு முச்சிதமா யின்ப மிலாவார்த்தை
பெருமையுடன் வம்பாகப் பேசியிருக் குஞ்சமயம்.

வேலர் வேங்கை மரமாதல்.

வலைதடிவேல் சில்லாங்கோல் வாளாயுத மேந்திச்
சிலைபிடித்துக் கொண்டை சிறக்க நிஜாரணிந்து
மிருகங்க ளஞ்சி மிரண்டோடக் கொம்பூதி
அருகேபம் பையதிர ஆயிழைத னக்குணவு
கொண்டுவர வேயண்ட கோளமட்டுங் காற்றுகளும்
மண்டும் படிவனத்தே வாகாய் வருகிறதோர்
வேடர்கு லாதிபனே வேலவருந் தானறிந்து
ஓடியே யப்பாலே உம்ப ரதிசயிக்க
உச்சித மாய்க்கிளைக ளோங்கிச் செழித்தோடிப்
பச்சென் றிலைகிளையிற் பாங்காய்ப் பரிமளிக்கத்
தாங்கியபூ காய்களுடன் ருனேகண் டோர்வியக்க
வேங்கைமர மாகவடி வேலவரு மங்குநிற்க

வந்துகண் டார்கள் வனத்திலே வேங்கைமரம்
அந்தமுட னேயின் றமைந்ததென்ன வாச்சரியம்
என்றுமே வேடுவர்க ளெக்களிப்பா கச்சூழ்ந்து
நின்றுவா ளாலே நிமிடமுரிப் போமெனவே
சதிராக வேயோடித் தான்வெட்டப் போகையிலே
மதியூகி வேடமன்னன் மைந்தர்களைக் கையமர்த்தி.

---

வள்ளி தந்தைக்கு வழுத்துதல்.

நீதியுள்ள மன்னன் நிதானமாய் வள்ளியிடம்
சேதியறி வோமென்னச் சென்றே பரணருகில்
சிங்கார வள்ளியரே செப்புவே னோர்வசனம்
எங்கள் குலவிளக்கே ஏந்திழையே யிவ்விடத்தில்
அந்தமுட னிங்கே அலர்ந்து செழித்துவளர் [ரே
சுந்தரம்போல் வேங்கைமரந் தோன்றுதுபாருன்னெதி
ஒன்றுமில் லாவிடத்தில் உச்சிதமாய் வேங்மைரம்
இன்று முளைத்தவியல் பென்னவிவ் விந்தையதைச்
சொல்லுமம்மா வென்றே துரைநம்பி ராஜனுந்தான்
மெல்லினமாய்க் கேட்க விளம்பிடுவாள் வள்ளியரும்
இந்தமரம் வந்தவிதம் ஏதுந் தெரியாது
குந்தியிப் பாங்கியுடன் கூடிப்பரண் மீதிருந்து
பறவை யிரங்கிப் பயிரையழிக் காதவண்ணம்
திறமாய்த் தினைக்காவற் செய்திருப்ப தன்றியென்ன
காரணமோ யீதெல்லாங் காவலனே யானறியேன்
தூரதே சத்திருந்து சொல்வீம்புக் காயிதுவும்
வந்து முளைத்ததென்றூர் வாகாகப் பாங்கியர்கள்
கந்தமலர் மாலையணி கர்த்தனே யென்றுரைத்தாள்
இவ்வசனங்கேட்டவுட னே துரைப்பான் நம்பிமன்னன்
பவ்வியம தாயிந்தப் பாதைதனிற் செல்வோர்கள்

தங்களுக்கும் உன்றனக்கும் தானே நிழலாகும்
மங்களமாய் நீயும் மகிழ்ந்துவிளை யாடுதற்கு
நல்லமர மீதெனவே நங்கைவள்ளி யற்குரைத்து
வல்லமை வாய்ந்தபுய மன்னன் நகரடைந்தான்.

வள்ளியிடம் வேலர் வார்த்தை யாடல்.

வேடர்கள் போனபின்பு வேங்கைமர மாகிநின்ற
வேட மதுமாறி வேலவனு மப்பொழுதே
கண்ட மடவார்கள் கலங்கிமா ரன்கணையால்
தொண்டுசெய் யும்படியே சுந்தரம்போல் வேடனென்ன
தோன்றியே வள்ளியெனுந் தோகையாள் முன்னேடி
நான்ரு னுனைத்தேடி நாடிடக்கண் டேமோடி
செய்திட்ப் போமோடி சித்தமிள காயோடி
வையகத்தி லுன்னைப்போல் மாதர்கிட் டாரெனவோ
ஏதோ நான் வந்திங் கிசைத்தேனென் வார்த்தையதை
சூதோயெண் ணுதே சுகிர்தகுண வஞ்சியரே
கடைக்கண்ணு லென்னைக் கருதியே நீபார்த்தோர்
விடைகொடுத் தென்றனுடன் மேன்மைபெறச் சேர்ந்தி
சாதி தனக்கிளப்பந் தான்வந்து நேர்ந்திடுமோ [டிலுன்
ஓதிடுவாய் பெண்ணேயென் றுச்சிதக் கந்தனுமே
நின்றுரைத்த வாசகத்தை நீலவிழி யாளறிந்து
மன்றல் புரியென்ற மான்மருக னுக்குரைப்பாள்
மதிக்கநிக ரில்லாதுன் மாமதியைத் தானெவர்க்கும்
நிதிக்குவிலை யிட்டதின்பின் நீரிவிடம் வந்தீரோ
சொல்லுங்கா ணுன்றனுக்குத் தோன்றப் பலவிதமாய்
நல்ல மதியுரைத்தும் நாடியதைக் கேளாமல்
மன்ற லெனைப்புரிய வன்மனத்தி லேநினைத்து
நின்றுமே என்றனெதிர் நிஷ்டூர வார்த்தைதனை

வாதாகவே நினைத்து வாதுபுரிய வந்தீர்
சூதான வார்த்தைகளைச் சொல்லி மணம்புரிய
உம்மால் முடியாது ஓகோயீ தென்னவஞ்ச
கம்மிஞ்சிப் பேசுகின்றீர் காரிகையார் தன்மனதைக்
கண்டறிய வல்லவர்கள் காசினியி லில்லையென
அண்டருந்தான் சொல்வா ரதனையுண ராதபடி
அஞ்சாம லேவந் தடவிதனி லேபுகுந்து
கொஞ்சிய வார்த்தையதாய்க் கூறுகிறீ ரப்பாலே
ஓடியுன் றன்வீட்டி லொண்டொடியாள் தன்னுடனே
கூடிவிளை யாடல் குணமாமென் றேநினையும்
நில்லாதே போம்போம் நினைவதனில் வஞ்சகமாய்க்
கல்லார்க ளைப்போற் கலங்கிட வேண்டாங்காண்
செல்லா துமதுவித்தை செல்லுமில் லாளிடத்தே
வல்லாண்மை யென்னிடத்திற் செல்லா தெனவழுத்த
கடம்பனிவ் வார்த்தை கருத்திலா லோசனைசெய்
துடனுகம் வேறெடுக்க வுள்ளமதிற் கள்ளமதாய்
அந்தவனம் விட்டே அடுத்தவனத் திற்கேகி
கந்த மலர்ப்பாதன் காங்கேய னப்பொழுது.

வளையற் செட்டி வேடம்பூண்டு வள்ளியைக் காணல்.

இடையில்வெள் ளாடை யிருக்கிவல வாட்டுமிட்டுச்
சடையாது கம்பிளியைத் தானுமதன் மேற்போட்டுப்
பச்சைவளை யற்கோர்வை பாங்காகத் தோளேற்றி [ல்
இச்சையுறக்கண்டோ ரெழில்கவரைச் செட்டியைப்போ
திருமணிகாப் பேறுதலிற் செவ்வைபாய்த் தானிலங்க
உருவமெடுத் தந்நேரம் ஒண்டொடியாள் வீற்றிருக்கும்
வனமதனைத் தேடி வளையல் விலைகூறிக்
கனதேசஞ் சுற்றிக் களைத்துவரு வாரதுபோல்

வள்ளியம்மை தானிருக்கும் மார்க்கம் வனத்தூடே
கள்ள மனதினராய்க் காங்கேயன் முன்வருக
கண்டாளே வள்ளியருங் கைவளையல் மேலாசை
கொண்டுமே தாதியராற் கூப்பிட்டா ளந்நேரம்
வந்தார் வளையலுடன் மாதுவள்ளி பக்கலுக்கு
சுந்தரஞ்சேர் மங்கையருஞ் சொல்லுவா ளின்பமுடன்
வாருங்காண் செட்டி வனமாய் வனங்கடந்து
நீரும் வளையலுடன் நீணிலங்க ளத்தனையும்
சுற்றி வருபவர்போற் றேற்றுதுகா ணெந்தனுக்கு
நெற்றியில் வேர்வைசிந்த நீருஞ் சுமைசுமந்து
மிக்க களைப்புடனே மேவிநீ ரிந்தவனப்
பக்கமே வந்ததென்ன பாதைவே றில்லையோதான்
எங்கிருந் திங்குவந்தீர் எங்குநீர் செல்லுகிறீர்
உங்கள் குலமுமும தூர்ப்பெயருஞ் சொல்லுமென்று
நெருங்கி யவள்கேட்க நேர்ந்தது நம் மெண்ணமென்று
முருகனு மேமகிழ்ந்து மொய்குழலா ளுக்குரைப்பார்

வள்ளிக்கு வளையல் போடுதல்.

சேடியர்கள் சூழத் தினைப்புனங்காக் குங்குயிலே
வாடி வரிசையுள்ள மைத்துனியே நீர்கேளும்
தந்தைசொக் கஞ்செட்டி தாயார்மீ னுட்சியம்மை
வந்ததமை யன்வார ணஞ்செட்டி யென்மாமன்
புத்தியச்சு தன்செட்டி பொன்னம்மா ளென்மாமி
சித்தசன் செட்டிமச்சான் செட்டியப்பன் நானும்
சீர்பெற் றுயர்கவரைச் செட்டியெனச் செப்புவர்காண்
வார்குழலே தேசம் மதுரா புரிக்கோட்டை
கண்டிசெந் தூர்சென்று காரிகையே நான்திரும்பி
அண்டர்க ளும்புகழ யானடுத்தே னுந்தனண்டை

இந்தவளைய லெவர்கை யணிந்தாலும்
மந்திரமுச் சாடனம்போல்வல்பிணியைத்தான்போக்கும்
தெய்வானை மாதினுட செங்கை வளையலிது
ஐயோ யிதன்விலையை யார்மதிக்கப் போறூர்கள்
செந்தில் வளர்முருகன் செய்த வளையலிது
அந்த முடையபணம் ஆரணங்கே நீர்கொடுத்தால்
கையிலிடு வேனென்றே கார்த்திகே யன்சிரித்து
கையைப் பிடித்துக் கனகவளை மாட்டலுற்றூர்
போது வளையணிந்து புந்தி மிகமகிழ்ந்து
ஓதிடுவா ளந்நேரம் ஓர்வாய் திறந்தமுதம்
சிந்துதலொப் பாமெனச்சொற் றித்திக்கும் வார்த்தையி
இந்தாரும் மாமாநீ ரின்பமதாய்க் கேட்டதொரு [னுல்
பணமதனை யேவாங்கிப் பாதைவழி கூடுமென்றே
குணமாக வள்ளியருங் கூறிடக்கேட் டந்நேரம்
ஏதடி யுன்னிடத்தி லிப்பணமோ கேட்டேன்யான்
சூதடிசெய் யாதெனக்குச் சொன்னபணந் தாருமென்றூர்
அந்தவச னத்தை யறிந்தாளே வள்ளியரும்
இந்தக் கவரைய னும் ஏதோவோர் சூதாகச்
சொல்லுகிறு னதலினுற் றூரத் துரத்தெனவே
மெல்லச்சே டிக்கு விழிச்சாடை செய்தாளே
பாவையரு கேயிருந்த பாங்கியர்க ளீதறிந்து
கோவைப் பழமெனவே கோல விழிசிவந்து
வீரியத் தோடெழும்ப வேடர் வருமொலியைக்
காரியமாய்க் கேட்டுக் கதிர்வேலன் தான்மறைய.

ஆண்டிவேடம் பூண்டு வருதல்.

எழுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

சடைதிரண் டிலங்கத் தவளநீ றணிந்து
தளர்ந்திடு மேனிபோன் நிறமாய்
இடையினிற் புலித்தோ லணிந்துநற் கையி
லிசையோக தண்டமு மேந்தி

நடைதளர்ந் தூன்று கோலுட னுங்கு
நடுநடுங் கியதலை யுடனே
விடைதனி லமர்வோன் சுதனுருக் கொண்டு
வேடர்முன் றேன்றிவந் தனரே.

அம்மானை.

செஞ்சடைது லங்கத் திருநீறு மேயிலங்க
வஞ்ச முடையோர் மனத்திருளைத் தானகற்றும்
சோதிச் சுடர்போற் றுலங்கக் கமண்டலமும்
ஆதிகா லத்தையுணர் ஆண்டிதனைப் போலாகத்
தோலும் நரம்புகளுந் தொங்குங் கிழவர்தனைப்
போலும் பசும்பொன் புறங்காட்டுந் தேகமென
தேடிருத்தி ராக்கந் திரைத்ததோண் மீதணிந்து
வாடிடு வோர்துயரை மாற்றும்பஞ் சாட்சரமும்
இடையிற் புலித்தோல்கை யேந்தும் ஜெபமணியும்
குடைகொண்டு பாத குறடுங்கா லிற்பூண்டு
தெள்ளிவனங் கந்தனுமே தேடி வருகையிலே
வள்ளியை நாடிநம்பி மன்னன் வரவெதிரே
கண்டானே ஆண்டியைக் காவலனு மோடிவந்து
கொண்டாடி யேதான் குலதெய்வ மாமெனவே
பணிந்திடும் வேந்தனுக்குப் பஞ்சாட் சரமெடுத்தே
அணிந்திடக்கொடுத்தா ரனைவோருந் தானணிந்தார்
ஆரையா சங்கமரே ஐம்புலனை வென்றவரே
ஊரையா பேரேதிங் கோடி வருவானேன்
வேர்த்து விருவிருத்து வெண்கானல் வீசுவதைப்
பார்த்துத்தள் ளாடிப் பதட்டம தாய்நடந்து
எங்குநீர் செல்லுகிறீ ரிக்கான கந்தனிலே
தங்கள் கருத்தைச் சாற்று மெனராஜன்
மங்களம தாய்க்கேட்க வஞ்சகசன் யாசியரும்
தங்க முடிபுனைந்த தார்வேந்த னுக்குரைப்பார்.

மன்னன் வள்ளியிடம் ஆண்டியை விட்டுப்போதல்.

மன்னுமென் தேசம் வடகயி லாசமது
நன்னயஞ்சேர் சீர்காழி நாகே சுரமருணை
சீர்பூத்த காசி ஜெகநாதந் தென்காசி
கார்மேகன் றன்மருகன் கந்தன் வளர்ந்தோங்கும்
க்ஷேத்திரங்கள் சுற்றி சிவதெரிச னைபுரிந்து
ஆத்திரங் கொண்டரசே யானுங் குமரிதனில்
ஆடிவரு வோமென் றடவிதனி லேபுகுந்து
வாடி மனம்வெதும்பி வந்தடைந்தே னுங்களண்டை
சூது நினை யாதெனையுந் தோன்றலே சிந்தைவைத்துப்
பாதுகாப் பாயுன்றன் பார மெனமொழிய
ஆனுற்கே ளாண்டவரே யானுரைப்ப தோர்வசனம்
தானுகக் கோனூன்றித் தள்ளாடி யிவ்வயதில்
தீர்த்தமா டக்குமரி செல்லுதலும் மாலாகா
வார்த்தையு மென்முன் வழுத்தினீ ராஞலும்
இப்பெரிய கானத் திருக்குஞ்சிங் கங்கரடி
செப்புமிரு கங்களுக்குத் தப்பியே நீர்பிழைத்தே
எங்களிடம் வந்தடைய என்னதவஞ் செய்தோமோ
சங்கரனே இவ்வுருவந் தான்தோன்றி வந்ததுபோல்
இருப்பதா லென்பாவ மின்றோடு போச்சுதுகாண்
விருப்பமாய் முன்னோர்கள் மேலோரைக் கண்ணலே
கண்டாற்போம் பாவங் கடைத்தேற லாமெனவே
விண்டார்க ளென்றந்த வேந்தன் பணிந்தேத்தி
ஐயா பெரியவரே அறிவுள்ள சங்கமரே
மெய்யா யெனதுமகள் மெல்லிவள்ளி யம்மையதோ
காவலுள வாரணியங் கத்தரே தோணுதுபார்
ஆவலுட னங்குவந்தா லாதரிப்பா ளென்மகளும்

வாருங்காண் மாதவரே வள்ளியற்கு மேதுணையாய்
நீரிருப்பீ ரென்றே நிகழ்த்தினன் தார்வேந்தன்
அப்படியே செய்வோமென் றுனந்த மாய்நடந்து
ஒப்பில்லா மற்சிறந்தங் கோடிவள்ளி யம்மைமுனம்
வந்தா ரனைவோரும் மாதவனைத் தான்கூட்டிச்
சொந்தமுள வள்ளியற்குச்சொல்லுவான் மன்னவனும்
தூண்டா மணிவிளக்கின் தூவொளியே இப்பெரிய
ஆண்டாரை நீயுமிங்கே யாதோர் குறைவுமின்றி
பாதுகாப் பாயெனவே பார்வேந்தன் றுனுரைக்க
நீதிசேர் வள்ளியரும் நின்ற பெரியவரைக்
கண்டு பணிந்தெழுந்து கத்தரே வாருமென்று [டவே
தொண்டுசெய வெண்ணித் துணைக்கழைத்துச் சென்றி
அப்போது நம்பிமன்னன் அன்பாக வேதுரைப்பான்
செப்புதற்கு மேலாஞ் சிவயோகி யிங்கிருங்காண்
கதிர்கொய்துபோம்பொழுது கான்விட்டுமையழைத்துப்
பதிசேரு வோமெனவே பட்டணம் போய்ச்சேர்ந்தார்.

தினைமாவை யுண்டு சுவாமி தியங்கி விழுதல்.

அப்பாலே வள்ளியரும் ஐயனுக்கு முன்பாக
செப்படி வித்தையது செய்திடுதல் போலாக
வலைகள் நிலம்பரப்பி வன்னக் கிளிபிடிப்பாள்
தலைநரைத்து மேயிருக்குஞ் சன்யாசி முன்விடுவாள்
தாடியை யிழுத்துத் தடிபரித் தோடிடுவாள்
ஆடிக் கிழவரும் அங்குவிழத் தூக்கிடுவாள்
மேலிருக்குந் தோட்காவி வேஷ்டிதொங்கி யேநழுவிக்
காலிடைக்குக் கீழ்விழவே கையாற் பிடித்திழுப்பாள்
தாத்தா புலிவருது தான்பிடிப்போம் வாங்களென்றால்
ஆத்தாடி யென்றே அலறிப் பதுங்கிடுவார்
கல்லென்று மேசிரித்துக் கன்னத்தி லேயிடிப்பாள்

மெல்லியுங் கையால் விழியிரண்டை மூடிடுவாள்
இப்படியே வள்ளி யிருந்துவிளை யாடிடவே
அப்போதவ் வாண்டி யருகழைத்துப் பேத்தியரைப்
பசியா யிருக்குதடி பாலமுதம் வேண்டுமென
உசிதத் தினைக்கதிரை ஓர்நொடியி லேயறுத்துக்
குத்தி யுமிபோக்கிக் கொப்பெனவே மாவாக்கி
தித்திக்குந் தேனைத் திரளவிட்டுத் தான்பிசைந்து
உத்தமியா ளப்போதங் கோர்தேக் கிளைபரித்துத்
தைத்ததொன்னை யின்மாவைத் தானெடுத்து வைத்து
இந்தப் பலகாரம் இன்புள்ள தாதலினல் [முன்னே
சந்தோஷ மாய்நீருஞ் சாப்பிடுமென் றேகொடுத்தாள்
வாசமுள்ள மாவுதன்னை மாதவருந் தான்வாங்கி
நேசமா யுண்ண நினைவுதடு மாறியதால்
உண்ண விழுங்க வுணர்ச்சியில் லாதவர்போல்
கண்ணீர் ததும்பிடவுங் கால்சுழன்று கீழ்விழவே
மங்கையருங் கண்டு மனது மிகப்பதறி
செங்கரத்தாற் சுக்கைச் செவியில்வைத் தூதிடவே
மயக்கந் தெளிந்தவர்போல் மாதவரு மேவிழித்து
நயப்பாக வென்றனக்கு நாடியே யிப்பொழுது
மாவென்று நஞ்சதனை மாதரசே நீகொடுக்கத்
தாவென்றுசொல்லியதைத் தான்பொசித்த தாலெனக்கு.

---

சுவாமி வள்ளியைச் சுனைகாட்ட வாவென்றழைத்தல்.

வஞ்சகஞ் செய்யாதே மாதரசே யிப்பொழுது
தஞ்சம்நீ காரடியோ தாகவிடா யாகுதடி
நல்லதொரு தீர்த்தமதை நாடிநா முண்டுவரச்
செல்லுவோம் பேத்தியரே சீக்கிரம் வாடியென்றே

சங்கமனு மேயழைக்கத் தையலரு மேதுரைப்பாள்
அங்கேபார் குன்றும் அழகாகத் தோற்றுதுபார்
அந்தமலைக் கப்புறத்தி லாறுமலை சூழ்ந்திருக்கும்
விந்தையுட னங்குசென்றால் மேலாஞ் சுனைப்புனலும்
பத்தி யுலவுதல்போற் பால்போன்று மேயிருக்கும்
மெத்தப் புனலருந்தி வேகமுடன் வாருமென்றே
வள்ளியரு மேயுரைக்க மாதவரு மேநயந்து
கள்ள மனதாய்க் கழறுவா ரோர்வசனம்
சத்திய வாய்மை தவறாத நம்பிமன்னன்
உத்தமியா ளென்றேயிங் குன்பா லடைக்கலமாய்
விட்டுவிட்டுப் போக விடத்தை யமுதமெனக்
கட்டழகி யேயூட்டிக் கால்கை மிகப்பதறி
தாக மிகவெடுத்துத் தண்ணீ ரதுகேட்டால்
ஏகவிருள் சூழ்ந்திங் கிருக்குமிடங் காட்டிடிலோ
யீதென் றறிந்துநா னேகுவே னவ்வழியே
மாதரசே நான்முன்பின் வந்து பழக்கமில்லை
ஆகையினா லென்பேரி லன்புவைத் திட்சணமே
தோகை நடந்து சுனைதனைக் காட்டியபின்
மங்களமாய் வந்து வனங்கா வெனவுரைக்க
மங்கை யதற்கிணங்கி வஞ்சியரைக் காவல்வைத்து.

---

சுவாமியும் வள்ளியும் சுனைக்கு வருதல்.

ஆண்டவரே வாருமையா அங்கேசென் றேசுனையில்
வேண்டும் புனலருந்தி வேடிக்கை நாம்பார்த்து
வருவோ மெனவுரைத்து மாதவரைக் கிழிரக்கி
இருவரு மப்பாதை யேகாந்த மாய்நடந்தே
வரும்போதங் கோர்சுனையை வள்ளியரு மேகாட்ட
இரும்போடி யுன்நெஞ்சம் இச்சுனையைக் காட்டுகிறாய்

பாசி படர்ந்து பலபச் சிலையுமேயுதிர்ந்து
மாசி யடர்ந்திங்கு மண்டியாய்த் தோற்றுவதால்
ஆண்டியரைக் கொல்ல நினைந் தச்சுனையி லேவிரைவாய்
வேண்டி யருந்தென்றாய் மெல்லியரே வேறுசுனை
காட்டென்று வேலன் கபடம தாயுரைக்க
நாட்ட முடனந்த நங்கை மனஞ்சலித்து
அப்பால் நடந்திடவே ஆரணங்கே யுன்றனம்போல்
இப்பாற் தெரியுதுபா ரிந்தப் பருப்பதத்தின்
பெருமை யெனக்கெடுத்துப் பேசென் றெனக்கேட்க
அருமை யுளவள்ளி யங்குரைப்பா ளொப்புவமை
காசி மகாராஜன் கண்மணியாய் வந்துதித்த
கோசிகனும் வேள்விபுரி குன்றமிது வென்றதன்பின்
அம்மலைக்கு மேற்கே அருகாகத் தோற்றுதுபார்
இம்மலைகுற் றாலமலை யென்பார்கள் முன்னோர்கள்
என்று பலவசன மிங்கிதம தாய்ப்பேசி
நன்றியுள்ள மாதவரும் நங்கையரு மேநடந்து
கண்டாள் சுனையதனைக் காரிகையு மப்பொழுது
விண்டாள் சுனையிதுதான் வேணமட்டு மிச்சலத்தை
அள்ளிக் குடிப்பீரென் றங்குரைத்தாள் வள்ளியரும்
விள்ளும் வசனமதை மெய்யாகக் கேட்டவர்போல்
மெள்ள விரங்கியதில் வேண ஜலமதனைக்
கள்ள மனதினராய்க் காங்கேயன் தான்குடித்துத்
தாகக் களையாற் தடுமாறி யேவிழுகும்
பாகமதா யச்சுனையிற் பாசாங்காய்த் தான்விழுந்து
தத்திக் குதித்து தவ்வியோர் சார்போதுங்கி
தித்திக்கும் வாசகத்தாற் சிந்தைக்கங் கொப்பனையாய்
மாதரசே யுன்றன் மலர்க்கரத்தி னாலெனையும்
ஆதரவா யெடுத்தே அக்கரையிற் சேருமென

மாதவனப் போதுரைக்க வஞ்சமிலா நெஞ்சுருகி
நீதமுள்ள வள்ளியரும் நீள்படியிற் ருனிரங்கி
இந்தாருந் தாத்தா நீ ரென்கரத்தையே பிடித்து
வந்தருளு மென்றவுடன் மங்கைசெங் கைபிடித்தே
பையவே தொத்திப் படிகடந்தக் கிழவன்
தையலரின் மையலினுற் ருன்கரை யேறினரே.

---

வடிவேலர் சொல்மீறி வள்ளி செல்லுதல்.

பாதிமதி யென்னப் பகருந் திருநுதலாய்
ஓதிடு வேன்குறவ ரொண்டொடியே யோர்வசனம்
தன்னுளென் றென்னைத் தயைபுரிந் திவ்வேளை
யுன்னுளாய்க் கொள்ள வுகந்தே நினைந்திடுவாய்
என்னை மணம்புரியி லேற்றமிக வுண்டாகும்
என்ன வதற்குவிடை யேதுரைப்பாள் வள்ளியரும்
அச்சமிலா திங்கேநன் ருச்சுது நன் ருச்சுதுகாண்
பிச்சைக்கு வந்தவனும் பெண்டுக் கழைத்ததுபோல்
என்னை யழைத்தேவந் திச்சுனையைக் காட்டெனவே
உன்னை மணம்புரியென் ருேதுகிறீர் சங்கமரே
மந்திரத்தி னுலேயோர் மாங்காய் விழுந்திடுமோ
தந்திரத்தி னுலிவளைத் தான்மயக்க வேண்டுமென்ருே
இத்தனைப் பாசாங்குகளை யின்றெமக்குக் காட்டியது
புத்தி மயங்கிப் போனீர்போற் காணுதுகாண்
நீதியில்லா மாதவரே நின்றுவிடு மிங்கெனவே
ஓதி நடந்தாளங் குற்ற வனத்நோக்கி
வள்ளியரு மேநடக்க மாயோன் மருகோனும்
உள்ளங் கரைந்தேதன் னுள்ளமதி லண்ணனையும்.

வள்ளியை மதயானை விரட்டுதல்.

நினைத்தாரப் போதுவிக்கி னேச்சுரனுந் தானறிந்து
கனைத்தமத யானையெனக் கன்னியந்த வள்ளியரை
விரட்டவென் றேகருதி வேகமாய்த் தானெழுந்து
கரட்டு மலையோரங் கார்நிறமாய் வானுயரம்
சண்முகன்றன் சோபமதைத் தானே தவிர்க்கவென
வண்டிசைகள் பாடும் மலர்ச்சோலை யையடுத்து
தொந்திவயிற் றைந்துகரச் சோதி தனைமறைத்து
தந்திதனக் கெண்மடங்காய்த் தானுதித்தாரவ்வனத்தில்
மதங்கொண்டு சத்தமிட்டு மாதுவள்ளி யாள்தனக்கு
எதிராகப் பாய்ந்தங் கியல்பாயவ் வாரணமும்
தும்பிக்கை தூக்கித் துரத்திட வேபயந்து
நம்பிமன்னன் புத்திரியும் நாமென்ன செய்வோமென்
றங்குமிங்கும் பார்த்திடவே ஆதரவொன் றில்லாமல்
மங்கையரு மோடிவந்து மாதவ யோகியின்றன்.

———

வள்ளிசொல்லின்பேரில் மதயானையை விலக்குதல்.

பின்புவந்து கட்டிப் பிடித்துக்கொண் டேதுரைப்பாள்
அன்புவைத் திப்போது யானை தனைவிலக்கில்
ஆண்டியேயுன்மனம்போ லாசைப்பெண் டாவனென்று
வேண்டிப் பணிந்திடவே வேலவரு மீதுரைப்பார்
ஏதடி முன்னாலே யிட்டாயே நஞ்சதனைச்
சூதடி செய்தே சுனைதனிற் தள்ளிவிட்டாய்
மாலடி கொண்டேன் வனத்திலெனை விட்டேகி
சேலடி கண்களெனுஞ் சேயிழையே யானைதனைக்
கூட்டியே வந்தெனையுங் கொஞ்சு கிருயப்பாலே
ஒட்டி விடவுளத்தி லுன்னி யிபமழைத்தாய்

போடிநீ யென்னுடைய புத்தி கலங்குதுந்தன்
சேடியரை யிங்கழைத்துச் சீக்கிரம் யானைதனை
துரத்தச்சொல் லென்றே சொலக்கேட்டு நங்கைமினுள்
வரத்திலுய ருற்றசெல்வி மாதவரைத் தான்பணிந்து
ஆண்டவனே யின்றே அடியாளின் மேற்கிருபை
பூண்டேயவ் வாரணத்தைப் போகவே செய்திடலோ
தப்பாம லுன்பாரி தானுவே னென்றுமனம்
ஒப்பி யுரைத்திட்வே ஓகோயீ தென்னவித்தை
ஆத்திரந் தீருமட்டும் ஆகட்டு மென்றுரைத்து
நேத்தியதாய்த் தீர்ந்தபின்பு நில்லென்று மேயுரைத்தால்
செய்வதொன் றில்லாதாற் செந்திவடி வேலவன்மேல்
வைபவமா யாணையிட்டு மார்தரசே நீகொடுத்தால்
யானை தனைவிலக்கி யாதரிப்பே னென்றுரைக்கத்
தேனைச் சொரிந்ததுபோற் செப்பிடுவாள் வள்ளியரும்
சங்கமரே அப்படிநீர் சந்தேகங் கொள்ளாதீர்
எங்கள் குறச்சாதிக் கேற்கா திதுநீதி
நாணுமற் சொன்னதிங்கு நம்முருகன் மேலாணை
கோணுமற் பூவிற் குடிகொண் டுறுமணம்போல்
உன்றனையும் விட்டிப்போ தோர்நிமிடம் யான்பிரியேன்
என்றனையும் நீகாப்பா யென்றுளே வள்ளியரும்
அந்த மொழிகேட்டங் கானந்த மாய்நமது
சொந்தப்பெண் ணுமென்றே சொல்வார் கணபதிக்கே
அத்தி முகத்தோனே அன்புடனே யென்றனக்காய்
இத்தூரம் வந்ததினு லென்கோரிக் கையதுபோல்
கந்த மலர்க்குழலாள் கைவசமா னுளதினுல்
வந்த வழிதிரும்பி வாகாகச் செல்லுமெனக்
காங்கேயன் சொல்லக் கணபதியு மேதெரிந்து
பாங்குடனே சென்றுர் பதியதனைத் தேடியேதான்.

---

கன்னியைச் சுவாமி சேர்ந்து காட்சி கொடுத்தல்.

ஐங்கர னேகியபின் ஞண்டி யுரு மாறியங்கு
சங்கரனர் பாலன் தனிவேடன் தன்னுருவாய்ச்
செங்கையில் வில்லேந்தி தேவிமுன் தோன்றிடவே
மங்கையருந் தானும் மலர்ச்சோலை யிற்புகுந்து
மதன கமத்தில் வழுத்தும் விநோதமதாய்
இதமாகக் கூடி யிசைந்திருந்த பின்வேலர்
கன்னிகுற வள்ளியற்குக் காட்சி கொடுக்கவென்றே
தன்னுருவ மேவிளங்கத் தான்பிரகா சித்தனரே
ஆறு முகந்துலங்க ஆறிரண்டு கண்ணிலங்க
கூறுபடு சூரனுருக் கொண்ட மயின்மீது
சேவற் கொடிபிடித்துச் செங்கரத்தில் வேலேந்தி
ஆவலுற மார்பி லலங்கார நூலணிந்து
தண்டை சிலம்பதனைத் தாங்குந் திருவடிகள்
எண்டிசையு மேயொலிக்க வெம்பிரான் கண்காட்சி
கண்டாளே வள்ளியருங் கந்தன் திருச்சேவை
கொண்டாள் குமரிகளி கூர்ந்தாள் மிகத்தொழுதாள்
போற்றிப் பணிந்தந்தப் பூவையரும் முன்னிருந்து
சாற்றுவா ளப்போது தையலரு மேகனிந்து
ஆண்டவரே யுன்ற னடியாளுங் காணவென்றே
பூண்டேன் நெடுநாள் புரிந்தேன் மிகத்தபசு
அப்படிக் கொற்ற அடியா ளெனதுமுனே
செப்படி வித்தையெனச் செய்தே நடித்ததனல்
ஆரோவென் றெண்ணி யறியாமற் செய்தகுற்றம்
மேரோன்றன் புத்திரனே மேன்மை யெனக்கருதி
ஐயனே யென்னை அகமகிழ்ந்து சந்ததமும்
மெய்யனே காத்துமிக வேண்டும் படிக்கிருபை
அருளே தருணமிதே அற்புதச டாட்சரமெய்ப்
பொருளே யெனதுகலி போக்கும் வடிவேலெனவே

நின்றே அடிபணிந்து நேரிழையாள் தான்வேண்ட
இன்றேவரங்கொடுத்தே னின்பமுடன் வாழ்ந்திருப்பாய்
அஞ்சா திருமெனவே அஞ்சுதலை யோன்மகனும்
பஞ்சாட் சரங்கொடுத்துப் பாவையரே வுன்றனுளங்
கலங்காதே கன்னி கருதாமற் சொன்னதெலாம்
அலங்காரத் தோத்திரம்போ லாச்சுதடி யென்றனக்கு
மாதரசே நீயும் வனத்தில்முன் போலாகப்
பேதமில் லாதிருந்தாற் பின்னாலே நான்வருவேன்
செல்லடி முன்னெனச் செந்திவடி வேலவனும்
சொல்லிடவே அப்போது தோகை சரணமிட்டு
திருவழகி யப்புனத்திற் சென்றே கவணெடுத்து
வருகின்ற பட்சிகளை மாது விரட்டி நிற்க
அப்போது தாதியர்க ளாரணங்கைத் தான்பார்த்து
ஒப்புவமை யாக வுரைப்பார்க ளந்நேரம்.

---

தலைவியைத் தாதிகள் சந்தேகம் வினவுதல்.

ஏதம்மா வள்ளியரே யென்றுமில் லாநடத்தை
சூதம்மா செய்தவர்போற் தோணுதே யெங்களுக்கு
எங்கேநீ சென்றாயோ இத்தனை நாழிமட்டும்
செங்கை வளையலது தேவியரே தான்தளர்ந்து
கொவ்வைக் கனியெனவே கூர்விழியு மேசிவந்து
கொவ்வைக் கனியதரங் கொக்கென்ன வேவெளுத்து
சாரும் பலநிறமாய்த் தையலரே காட்டுதலை
பாருங்கா ணுன்றனத்திற் பற்குறிந கக்குறியும்
காணுதற்கென் சொல்வாய்நீ கன்னிகை யேசுனையில்
தோண நடந்தசெய்கை சொல்லு மெனக்கேட்க
பாங்கியரே இப்போ பகருவேன் கேளடிநீ
சோங்குள நற்சுனையிற் சொற்பெரிய மாதவற்கு

தாகமது தீருதற்குத் தண்ணீர்கொ டுத்துநிற்க
வேகமதா யானை விரட்டவே நான்பயந்து
ஓட்டமதா யிங்கேயா னோடி வரும்வழியில்
நீட்டமுள்ள முட்செடிகள் நின்று கிழித்ததடி
அஞ்சிப் பயந்தலைந்திங் காரணங்கே வந்தனடி
வஞ்சகம தாயுரைத்த வார்த்தையா மென்றவர்கள்
சந்தேகங் கொண்டங்கு தர்க்க மதுபுரிந்து
அந்தமுட னேயிருக்க அச்சமயந் தானறிந்து
வேலவனுங் கானகத்து வேட னுருவமைந்து
சீலமுடன் வந்து சேடியர்முன் னீதுரைப்பார்.

---

வடிவேலன் சகிகளுடன் வார்த்தையாடல்.

வனசமலர்க் கைத்தலங்கள் வாய்ந்த மடமயில்காள்
கனகமா னென்றென் கணைபட்டே யூடுருவி [டோ
இவ்விடத்தில் வந்ததனை யேந்திழைகாள் கண்டதுண்
தவ்வியமா னைப்பார்த்தாற் சாற்றுவீ ரென்றுரைக்க
ஆர்கா ணும் வேடுவரே ஆயிழைக டன்னிடத்தே
பார்வனத்தில் மானென்றைப் பாணமெய் தேனென்றீர்
அந்தமா னிங்குவர வண்ணலே கண்டதில்லை
கந்தமல ரிவ்வனத்திற் காணலாம் போருமென்றார்
வஞ்சியரே யென்னிடத்தில் வஞ்சகம தாகவுமே
பஞ்சவர்ன மானதுவைப் பார்க்கவிலை யென்றிடிலோ
இங்குவந்த மானதுவு மெவ்விடத்திற் சென்றுவிடும்
மங்கையரே சொன்னலோ வாய்முத்தஞ் சிந்திடுமோ
என்றவுரை கேட்டவுட னேதுரைப்பார் தோழியர்கள்
நன்றல்ல கள்ளனைப்போல் நாடிவந்து மோடிசெய்வ
தடுக்காதுன் வார்த்தை யடுக்கும்வீண் சண்டையது
துடுக்காய்நீ சொல்லாதே தூரப்போ மென்றிடுக

எள்ளளவ தாகிலுமே எண்ணியே பாராமல்
கள்ளனென் றென்னைக் கழறுகிறீர் மாதரசே
நானெய்த மானதுவும் நாடியிங்கு வாராமல்
தேனென் றுரையாடுஞ் சேடிகா ளெங்குசெல்லும்
சொல்லீ ரெனவுரைக்கத் தோகையரு மீதறிந்து
வல்லீருள் ளங்கையில் வைகுந்தங் காட்டுகிறீர்
ஞாயமில்லா வார்த்தை நவின்றீரே யிப்பொழுது
சாயகங்கொண் டெய்தமான் றுன்சிக்கா தென்றிடவே
ஏதடி பாங்கியரே ஏதுமறி யோமெனவே
சூதடி செய்திரோ சொல்லந்த மானதுவை
என்ற னிடம்விடுவீ ரில்லையென் றுலதினுல்
துன்பந்தான் தோழியரே தொந்தரவு நேருமென்றார்
வாருங்காண் நீரெய்த மான்றனக்குக் கால்கையும்
கோரும்பொன் னுடைமணி கோதுங் குழலுமுண்டோ
காதுதனி லோலை கழுத்தினிற் பூணுமுண்டோ
சூது நினையாது சொல்வீ ரெனக்கேட்க
மங்கைய ரேசகியே வாரீரோர் காரியந்தான்
இங்கிதம தாய்ப்பேச விச்சமயந் தானுகும்
என்னுடைய மானுக் கிரண்டடை யாளமுண்டு
உன்னிதமாய் நீங்களறிந் துட்கொள்ளு மென்றிடவே
எங்களுக் கிச்சேதி யிப்போ தெரியவரும்
இங்கிருங்காண் வேடவரே யிட்சணத்தி லேயறிந்து
வந்துரைப்போ மென்றுசொல்லி வள்ளியிடம் வந்தணு
சிந்தை மகிழ்ந்தவர்கள் செப்புவா ரோர்வசனம். [கிச்

தன்னைவினவுந் தாதியர்க்குத் தலைவி யுரைத்தல்.

எழுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

திருவேலாந் திரண்டோ ருருவெனச் செனித்த
 சேயிழை வள்ளியே கேளாய்
ஒருதனு வேந்தி மாந்தளி ரதினு
 லோடிடும் மானெய்தே னுங்கள்
அருகில்வந் ததுதா னெங்கெனக் கேட்டிங்
 கழகிய வேடுவ னொருவன்
தருணம்வந் துரைத்த காரண மேது
 சாற்றெனக் கேட்டன ரன்றே.

அம்மானை.

சாந்தகுண மாதே தனுவேந்தி யோர்வேடன்
மாந்தளி ராற்ருனே மானொன்றை யெய்துவிட்டேன்
அந்தமா னோடி யரிவையரே யுங்களண்டை
வந்தமா னெங்கே வழுத்துமென் றேகேட்டே
நெடுநேர மாகநின் று நேரில்வா தாடுகிருன்
அடுக்குமோ யிச்சேதி யத்தனையும் நானறிந்தேன்
பாலும் பழமுமெனப் பாங்கா யிருந்தம்மா
மாலுடனே நீயும் மறைத்துரைந்த தேதந்தக்
காரணத்தை விண்டு கழறிடுவாய் நாங்களந்த
சாரமறி யும்படியே சாற்றுமெனக் கேட்க
வாருங்கள் பாங்கியரே மாதரசே யென்றனக்கு
நேரும் விபரமதை நீங்களுங்கே ளென்றுரைப்பாள்
தாதிய ரே நடந்த சங்கதியைக் கேளுமென்றே
ஓதிடுவே னுங்களுக்கிங் குற்றதொரு சேதிதன்னை
சொல்லாமற் போவேனோ தோகையரே யந்நாளில்
வல்லபஞ்சேர் வேடனென்ன வந்தே வழக்காட

அந்தச் சமயமதி லண்ணர்வரத் தானறிந்து
அந்தமுள்ள வேங்கைமர மாகியே நின்றதுவும்
பின்பாக வேவளையல் பேணியே விற்றதுவும்
அன்பாய்க் கிழவ ஞண்டியைப்போல் வந்ததுவும்
வன்னத் தினைமாவை வாங்கியுண் டேதாகம்
இன்னலற நீர்ச்சுனைகாட்டென்றேய்த்துமேயழைத்துக்
கூட்டிச்சென் றங்கென்னைக் கூடி மணம்புரியக்
கேட்டதற் கிணங்காக் கிலேசமுட னேடிவர
அக்கான கந்தனிலே யானையொன்று மேவிரட்ட
அக்கணமே யோடி யவற்குப்பெண் டானவுடன்
ஆனை விலகிடவும் அங்கசன்போற் கூடிடவும்
தேனையுமிழ் சோலைதனிற் சீர்மயிலின் மீதேறிச்
சேவைதந் தாண்ட ஜெயசூர சம்மாரன்
பாவையரே இங்குவந்தார் பாருமென்றேயுரைத்தாள்.

எண்சீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

நன்றியுள்ள மடமயிலே நீரு மிங்கே
நாட்டியசொல் லழகதா யிருக்கு தம்மா
வென்றியுள்ள வேலவனைக் கானகத்தில்
மேவியே மன்றலது புரிந்தே னென்றாய்
உன்றனையுங் குற்றமதாய்ச் சொல்வா ருண்டோ
உன்பெருமை யெவராலு முரைக்கப் போமோ
குன்றுநிகர் தனத்தாளே குமரன் றன்னைக்
கூட்டிவரு வோமென்றே கும்பிட் டாரே.

அம்மானை.

இப்படியென் றோர்வார்த்தை எங்களுக்கு முன்னாலே
அப்போதே நீயுரைத்தா லாரணங்கே யுன்றனையும்
குற்றமது சொல்வோமோ கோதையரே நாங்களுமுன்
நற்றவஞ் செய்ததினால் நாடியிப்போ துன்றனையும்

கந்தனுமே வந்து கலியாண மேபுரியத்
தந்தைதாய் மூதோர்கள் தான்செய்த பாக்கியமே
ஆகையினுல் வேடனையும் யாமழைக்கு ரேமெனவே
தோகையர்க ளிஷ்டம்போற் சொன்னுளே வள்ளியரும்
அந்தவுரை கேட்டவர்க ளானந்த மேமிகுந்து
கந்த னிடம்வந்து கால்பணிந் தேதுரைப்பார்
வாருஞ்செவ் வேளா வடிவேற் கரத்தழகா
சீருடனே கூட்டிவரச் செப்பினு ளுத்தமியென்
றிங்கிதமாய்ப் பாங்கியர்க ளேயிசைத்த வாறுணர்ந்து
மங்கையிடஞ் செல்ல மனமகிழ்ந் தப்புனத்தில்
காங்கேய னப்பொழுது கன்னியர்கள் தன்னுடனே
மாங்குயி லாள்பரணை வந்தடைந்த ஞாடைகண்டு
பூஞ்சோலை யைத்தேடிப் பூவையர்கள் போனபின்பு
மாஞ்சோலைக் குட்புகுந்து வள்ளியரும் வேலனுமே
கூடிக் குலாவி கோதை யுடனிருந்தே
நாடித் திருத்தணிகை நாமேகி யேவருவோம்
காவல் தினைப்புனத்தைக் காத்திருநீ தோழியுடன்
ஆவலடி யார்க ளழைத்தார்க ளாகையினுல்
வேண்டும் வரமவர்க்கு மெல்லிகொடுத் தேநாளை
மீண்டும் வருவோங்காண் மீனேர் விழியாளே
அஞ்சா திருமெனவே ஆரணங்கு வள்ளியரும்
கஞ்சா வெறிபோலக் காணுதுகா ணுன்றனக்கு
இப்படி நீருரைத்தால் எப்படி நானிருப்பேன்
ஒப்பி மனந்தரியா தோகோயீ தென்னவிந்தை
உன்றனது சிந்தைக் குகந்தபடி யேமுடித்து
என்றன் றனைமயங்க விங்குவிட்டுச் சென்றிடிலோ
என்னவிதம் நானிங் கிருப்பேனென் றேகேட்க
கன்னியரே நீருங் கலங்கிட வேண்டாங்காண்

எச்சமயத் துன்ற னிருதயத்தி லேநினைத்தால்
அச்சமயம் வந்திடுவே னங்கனையே யென்றுரைத்து
வேலன் விடைபெற்று விந்தை மயிலேறிச்
சீலன் திருத்தணிகை சென்றதின் பிற்பாடு.

---

வேடர்கள் தினைக்கதிரைக் கோய்து செல்லல்.

தினைவிளைந்த தென்றதொரு செய்திகா னக்குறவர்
அனைவரு மேயறிந்தா ரக்கணமே ஓடிவந்தார்
கானக மேபுகுந்தக் காட்சிகண்ணுற் பார்க்கவுமே
ஆனக மேமுழங்க ஆங்குசத்த கன்னியர்க்குப்
பூசை யதுபுரிந்து புட்பம் பலசாத்தி
ஆசையதாய் வாள்கொண் டறுத்தார்க ளக்கதிரை
சுமையாகத் தூக்கிச் சுமந்துகள மேபுகுந்து
இமைக்குமுனம் போட்டே எருதுக ளாற்றுவைத்து
சினையளவ தாகுந் தினைகளதைத் தான்வாரி
அனைவோருந் தன்னூ ரடைந்தார்க ளப்போது
நம்பிமன்னன் புத்திரர்கள் நாடியேழ் பேர்களுமே
கும்பாயக் கானகத்திற் கூடியே வந்தார்கள்
தங்கையைக் கண்டவுடன் சாற்றுவா ரோர்வசனம்
இங்கே யிருந்ததினை யெல்லாங் கணப்பொழுதிற்
கொய்தே குடிஜனங்கள் கூடி நகரடைந்தார்
தையலரே நீயுந் தனித்திருக்க லாகாது
வாதைவருந் தங்கையரே மாநகருக் கேகுமெனப்
நீதிசே ரண்ணர்களே நேரிழையும் பின்வருவேன்
இன்னவிதஞ் சொல்லி யிதமா யனுப்பிவிட்டு
அன்னமெனவாய்திறந்தே ஆங்குரைப்பாள்பாங்கியிடம்

வள்ளியைப் பாங்கியர் தேற்றப் பட்சிகளுக்குரைத்துப்
பட்டணஞ் சேர்தல்.

விருத்தம்.

தாதியிற் சிலாக்ய மான சண்பக வல்லியே கேள்
நீதியா யண்ணர் வந்து நின்றது நின்றுற் போல
ஓதிடும் படியே நாமும் உச்சித நகரஞ் சேர்ந்தால்
ஆதிமால் மருக னங்கண் அடைவதேவ் வாறென்றுளே.

அம்மானை.

சேடியரே செண்பகமே சித்திரமே கற்பகமே
ஓடியண்ண மார்வந் துகந்தென்னை மாநகர்க்குக்
கூப்பிடுகின் ருர்களடி கோதையரே யிப்பொழுது
மாப்பிள்ளை யான மயிலேறும் வேல்முருகன்
பார்க்கவிங்கே வந்திப் பரணையு மேயடுத்து
வேர்க்க மனதுநொந்து மெய்சோர்ந்து மேயவரும்
தன்பதியைத் தேடியங்கு தானே யவர்போனுல்
என்பதியைக் காணும லிங்கே பிரிந்துதனித்
தெப்படி நானும் இருப்பேன்காண் மாதரசே
அப்படி யாகாம லாறுமுக னைக்கண்டு
சொன்னுலே நன்ருகுஞ் சுந்தரமே அண்ணருந்தான்
இன்னமுமிக் கோடிவரி லேதென் றெடுத்துரைப்பேன்
இதற்கோருத் தாரம் இயம்புமென் றேகேட்க
மதிசேரும்பாங்கியர்கள்வார்த்தையொன்றே துரைப்பார்
தேருமம்மா வள்ளியரே செங்கை வடிவேலர்
சேருமுன் றன்தவத்தாற் சேயிழையே யிங்குவந்து
பார்த்தே யவரறிந்து பாதை வழிகூடி
ஊர்வந்துசேர்த்திடுவாரொண்டொடியே நாங்களுந்தான்
கூட்டியே வந்திடுவோங் கோதையரே உன்றனிடம்
தேட்டமுட னுகவுமே தேவியரே வாருமென்னச்

சிந்தை மிகத்தெளிந்து சேடியரும் வள்ளியரும்
அந்தோ ரனநடைகண் டஞ்சியே யோடுதென்ன
விந்தைச் சிலம்பொலிக்க மெல்லியரு மேநடந்து
அந்த முடன்வரும்போ தங்க ணெடுத்துரைப்பாள்.

### விருத்தம்.

மனமது செவ்வேண் மலரப்பதஞ் சேர
வள்ளியாள் கானகந் தன்னில்
இனம்பிரிந் தோடும் மானதைப் போல
ஏங்கியே தளர்நடை நடந்து
புனமதைத் திரும்பி நின்றுபார்த் தாலும்
புண்ணியர் வரவிலை வந்தால்
வனம்விட்டே நகர்க்குச் சென்றதா யங்கு
வரச்சொலுங் கிள்ளைகா ளென்றாள்.

---

### அம்மானை.

அன்னமே தாராவே ஆந்தைசெம் போத்தினமே
வன்னக் குயிலினமே மாமயிலே சிட்டினமே
தன்னவ ராகியதோர் சண்முகமு மிங்குவந்தால்
என்னுடைய பட்டணத்திற் கின்றே வரச்சொலுவீர்
மானே மரையினமே வல்லபுலி யானைகளே
கோனே மிருகத்தின் கோளரிகா ளிவ்வனத்தில்
மாதுமையா ளீன்ற வடிவேலர் வந்தாலே
போதவே சொல்லிப் பொருந்தாவுள் ளத்தினளாய்
நகர்க்குச்சென் றாள்நீரும் நாடியங் கேகுமென்று
அகமகிழ வேயவருக் கன்பா யுரைப்பீரே
குங்குமமே சந்தனமே கொய்யா வரசினமே
புங்கு புளிமரமே புண்ணியனு ரிங்குவந்தால்

வேண்டி யெனதூர்க்கு வேகம தாய்வரவே
தாண்டுகோ லாகவுமே சொல்லி யனுப்புமென்ருள்
மல்லிகையே பிச்சிகளே வாசமுள்ள சண்பகமே
முல்லைகளே நீங்கள் முருகருமே யிங்குவந்தால்
நன்னயமா யென்னூர்க்கு நாடிவரச் சொல்வீரே
என்றுமே வள்ளியரும் இங்கிதம தாய்நடந்து
செந்நெற் பயிர்விளைந்தே செய்யில் வளர்தோங்கும்
தந்நகரஞ் சென்றிடவே தந்தையரும் வந்துகண்டு
சந்தோஷ மேமிஞ்சித் தையலாள் தன்னுடனே
அந்தமுட னேபோய் அரண்மனை சேர்ந்தவுடன்
தாயாரும் வந்து தழுவிமடி மீதுவைத்து
வாயார வேவாழ்த்தி மாதரசே கானகத்தில்
பச்சிகளும் வந்தே பயிரையழிக் காதபடி
இச்சையுடன் காவ லிருந்ததா லுன்தேகம்
வற்றிற்ரே வென்னவுமே மாதுநங்கை மோகினியாள்
உற்றுற்றுக் கேட்கவதற் கொன்றுமுரை யாதபடி
தலைகவிழ்ந்து மேயிருக்கச் சந்தேக மேதோயித்
தலைவியிவள் நம்முடனே தான்பேசா தேயிருக்கும்
காரணந்தோன் ருமற் கருத்திலா லோசனையாய்
நாரியரைக் காவலுடன் நாடக சாலைவைத்தே
மங்கள மாகவுமே மாதா மனமகிழ்ந்தே
இங்கித மாக விருந்தா ளரண்மனையில்
இப்படியாய் நங்கை இருக்கின்ற நேரமதில்
செப்பு நிகர்தனத்தாள் செல்விவள்ளி யம்மையரும்
காங்கெயனைக் கண்டு கருத்துரைத்து வாராமற்
தாங்கி யெனைவளர்க்குந் தாதியர்க டன்னுடனே
வந்துவிட்டோ மென்ன மனதிற் கிலேசமதாய்ச்
செந்தணலிற் பட்டதொரு செந்தளிர்போ லாமெனவே

கன்றியே தேகங் களையாக வீழ்ந்திடவே
நன்றியுள்ள தாதியர்கள் நாடியங் கோடிவந்து
மனதுபரி தாபமதாய் மார்போ டெடுத்தணைத்தே
கனஞ்சேரும் வள்ளிமின்னாள் கைவளைக ளேகழன்றும்
மதியைப்போலேயொளிரும்வண்ணமுகம்வேறுபட்டும்
நிதியணியுங் கொங்கை நெகக்குறிகள் பட்டதுவும்
நீல விழிசிறுத்து நின்றுகடை நீரொழுகும்
கோலமதைக் கண்டாங்கு கூறுவார் தாதியர்கள்
சித்திரத்தி னுஞ்சிறந்த செல்வியிந்த வள்ளியரும்
பத்திரம தாய்ப்பயிரை பாதுகாக் குஞ்சமயம்
வனத்திலெந்த தேவதையோ வந்தணுகி யேயிருக்கும்
இனத்திலிவ்வாற்நடந்த தெங்குமே கண்டதில்லை
என்றே யனைவோரும் ஏந்திழையைத் தான்சூழ
நின்றேயொரு வாறு நிகழ்த்தவதி லோர்சேடி
திருந்திசத்த கன்னியராந் தேவதைக்குப் பூசையிட்டு
வருந்தியழைத் தேயவ் வகைவிபரந் தானறிவோம்
அப்படியே செய்வோமென் றுனைந்த மாயவர்கள்
செப்பரிய பூஜா திரவியங்கள் தன்னுடனே
வனமதனி லெல்லவரும் வந்தேபூ சைபுரிந்து
மனதோர்மை யாக வருந்தி யழைத்திடவே
அங்கோர்பெண் மீதி லருள்வந் திரங்கிடத்தான்
இங்கே யெனையழைத்த தென்னவென்று தான்கேட்க
அம்மையரே கேட்பீ ரரிவையென் பெண்ணரசி
செம்மையிலா தேயவடன் தேகம் மெலிவானேன்
தெரிந்திட வேண்டியிங்கு தேவியரே யுங்களையும்
வருந்தியழைத் தோமெனவே மங்கையருந் தான்பணிய
அன்புடனே கேட்டிடுவீ ராறுமுகனுமன்று
தென்புடனேவலியச் சேர்ந்திவளைத் தொட்டதினல்

இந்தவிதம் நேர்ந்த வியல்பாகத் தானுரைத்து
மந்திரஞ்சேர் கந்தனுக்கு மாபூசை யும்புரிந்தால்
இத்துயரந் தீர்ந்தே யிளங்கொடியாள் வள்ளியரும்
நித்தமங்க ளாகரமாய் நீணிலத்தில் வாழ்ந்திருப்பாள்
என்று வரங்கொடுத்தங் கேகினதின் பிற்பாடு
நன்றியுள வேடரெலாம் நன்னகரஞ் சேர்ந்திருந்தார்

---

வேலவர் வள்ளியைத் தேடி மேபாடி மேவுதல்.

அந்தச் சமயமதில் அன்பர் வினைதீர்க்கும்
தந்திரக் கந்தன் தணிகையில் வேடரெனத்
திருவுருவங் கொண்டு தினைப்புனத்திற் கேவருக
திருவழகி வள்ளியெனுந் தேவியரைக் காணுமல்
சிந்தை கலங்கித் திடுக்கிட்டு மெய்மறந்து
அந்த வனங்களெல்லாம் ஆராய்ந்து மேபார்த்து
வள்ளியரைக் காணுமல் வாரார் வனந்தேடி.
மெள்ளவே கானகத்தில் மேவிவரும் பட்சியிடம்
வண்டார் குழலியரை வள்ளியெனும பெண்ணரசைக்
கண்டீரோ கிள்ளைகளா காடைகவு தாரிகளா
மயிலேவண் ணக்குயிலே மாடப்பு ருக்கொக்கே
ஒயிலுடைய அன்னங்களே ஊர்க்குருவி டேகைகளே
உள்ளானே தாராவே உச்சிதச்செம் போத்தினமே
விள்ளீரோ நாரை விளங்குமை னுவினமே
அண்டரண்டப்பட்சிகளே ஆந்தைகளே வள்ளியெனும்
ஒண்டொடியைக் கண்டாலுரைப்பீர்களென் றுரைத்தும்
கரியமலை மீதுலவுங் கார்முகில்கா ளுங்களுட
உரியநிறம் போற்கூந்த லுள்ளபெண்ணைக் கண்டீரோ
மதம்பொழியும் யானைகளே வல்லபுலி சிங்கங்காள்
இதமான மான்மரைகா ளேந்திழையைக் கண்டீரோ

சொல்வீர்க ளென்ருங்கு சொல்லியே தான்பிதற்றி
நல்வளஞ்சேர் பட்டணத்தை நாடி வழிகூடி
ஒய்யார மாய்நடந்தவ் வூரடுத்தே வேலவனும்
மெய்வாடி யேவருகும் வேளை தனி லெதிரே
பூங்கா வனந்தேடிப் புட்பம் பலபரிக்கப்
பாங்கியடுத் தேவருகப் பார்த்தே மனமகிழ்ந்து
வாருமெனச் சாடை வடிவேலர் செய்திடவே
பாருமென வந்து பணிந்துசகி யே துரைப்பாள்
வாருமையா வேலவரே வள்ளியா ளுன்றனையே
கோரி மனம்வருந்திக் குந்தியிருக் குஞ்சமயம்
வந்தீரே யென்ருங்கு மாதவளு மேயுரைக்க
அந்த வுரைகேட்டு ஆறுமுக னே துரைப்பார்
செண்பக வல்லியெ னுஞ் சேடியே இக்கணத்தில்
ஒண்டொடியாள் வள்ளிக் குரைத்துநீ வாவென்றே
சொல்ல வதைக்கேட்ட தோகையவ ளே துரைப்பாள்
நல்லது வேடுவரே நாடி யிரவினிலே
பதினைந்து நாழிகைமேற் பாதை வழிகூடி
ததியறிந்து வந்தாங்கு சாடை யதுபுரிந்தால்
அக்கணமே நானும் அரிவையைக் கூட்டிவந்துன்
பக்க மதில்விடுவேன் பாருமதை நீருமென்மேற்
கருணையிருக் கட்டுமென்றே கந்தனையும்போற்றிசெய்து
தருணம்போய் வாருமெனச் சாற்றினுள் தோழியரும்
அந்தப் படிசெய்வோம் ஆரணங்கே போமெனவே
சந்தோஷங் கொண்டந்தச் சண்முகனு மேதுசெய்தார்.

---

வில்லியர்க்குச் சோதிடஞ் சொல்லி மெல்லி வள்ளியைக்
கூட்டிவருதல்.

வேதங்கள் கற்றுணர்ந்த வேதியரைப் போலாக
சாதகங்க ளேயுரைக்குஞ் சாஸ்திரி யாமெனவே

பஞ்சாங்கங் கைப்பிடித்துப் பாங்குடைய வேடுவர்முன்
அஞ்சாமல் வந்து நின்றே ஆங்குரைப்பா ரோர்வசனம்
ஆர்கா ணும் வேடுவரே அன்புடனே நீர்கேளும்
சீர்மிகுந்த வள்ளியெ னுஞ் சேயிழையுண் டோயிலையோ
அந்தப்பெண் தன்னை யடுத்தர்த்த ராத்திரியில்
கந்தனெ னும் வேட னுமே கன்னம்வைத் தேயெடுக்க
நினைத்திருக்கின் ருனதினுல் நீங்களு மின்றிரவில்
அனைவோரு மேவிழிப்பா யாரணங்கைக் காப்பீரென்
றுரைத்தேயக்கானகத்தி லுச்சிதமாய்ச் சென்றனர்காண்
விரைந்தவரும்போனதின்பின்வேடரெல்லாமன்றிரவில்
கன்னியரைக் காவலதாய்க் காத்தங்கு மேயிருக்க
நன்னயமாய் வேலவரும் நாடியங் கேதுசெய்தார்.

எழுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

வேடர்க டனக்குச் சோதிட முரைத்து
வேலனுங் கன்னிகை தனையும்
கேடகக் கையாய்க் காவல்காத் திடவே
கிருபையும் புரிந்தவர் பின்பு
தோடகக் கையிற் பூதியு மெடுத்துத்
தூவியே மயங்கிடச் செய்து
பாடக முதலா பரணமு மணிந்த
பாவையை யழைத்துச்சென் றனரே.

அம்மானை.

வேலவ னு மப்போது வேட ருருவமைந்து
சீலமுள நேரிழையாள் செண்பக வள்ளியெ னும்
தாதியவள் சொன்னபடி சண்முகனு மேயிசைந்து
பாதி யிரவினிலே பாங்கா யனைவோரும்
தூங்கும் படிபூதி தூவிச் சுவரோரம்
காங்கேயன் கைகொட்டிக் கன்னியரைத் தானழைக்க

நித்திரையில் லாமல் நிமைமூடாத் தாதிகரச்
சத்தமதைக் கேட்கத் தனிவள்ளி யாளிருக்கும்
பஞ்சணையைத் தானசைத்துப்பாவையே தன்னகருக்
கஞ்சாம லுன்னை யழைத்துமே போகவென்றே
கந்தனும் வந்திங்கு காத்திருக்கின் ருரதினுல்
இந்தக் கணமெழுந்தே என்னுடனே வாவெனவே
சண்பக வல்லியருஞ் சாடைய தாயுரைக்க
அண்டர்கோன் றன்மருகன் ஆறுமுகன் வந்திருக்கும்
யோசனையும் நல்லவா லோசனை தானெனவே
நேசம தாகவுமே நின்றே மனமகிழ்ந்து
உற்ருரும் பெற்ரு ருறங்குவதைத் தானறிந்து
அற்புதமாய் நாயும் அயர்ந்தாங்கு தூங்குவதும்
ஊரும் ஒடுங்கி ஓய்ந்திருப்ப தாய்மதித்துச்
சாரும் வனந்தனிலே தான்கடிய பேயுறங்கும்
நடுச்சாமத் தேபாங்கி நங்கைகரத் தைப்பிடித்து
அடுத்துநடை காலின் அரவந்தோற் ருதபடி
மெல்லவே தாழ்திறந்து மெல்லிவெளி யேநடந்து
சல்லாப வேலவனைத் தான்பணிந் தேதுரைப்பாள்
செந்தா மரைப்பாதஞ் செவ்வண்ண மாய்நோக
எந்தனை நீநினைத்தே இத்தூர மேநடந்து
பாதி யிரவினிலே பக்கத் துணையுமின்றித்
தாதி யுரைத்தபடி தான்வந்தீ ரோவெனவே
சுந்தரம தாய்ப்பணிந்து தோகை யவளிருக்க
அந்தச் சமயமதி லாரணங்கு தாதியவள்
வள்ளியரைக் கைபிடித்து மாவேலன் கைகொடுத்து
புள்ளி மயிலேறும் புண்ணியனே பொற்கொடியை
நாடியிந் நாள்வரையில் நாங்களுங் காத்திருந்தோம்
தேடியுன் றன் கைவசத்திற் சேர்த்தோ மினிநீரும்
பாங்காக வேபோற்றிப் பாதுகாத் தேகருமத்
தீங்கென் பதைவிலக்கித் தெய்வமே யெங்களையும்

ஆதரித் தேயருள்வா யையா சரணமென்று
மாதுதனைப் பார்த்து வழுத்துவாள் தாதியரும்
வடிவேற் கரத்தோனே மாப்பிள்ளை யாயடைந்தாய்
பிடிநடையே வுன்பெருமை பேசமுடி யாதினிமேல்
ஐயனையும் நீவிட் டரைக்கணமும் நீங்காமல்
சையோக மாயிருப்பாய் தையலரே யெங்களையும்
மறந்து விடாதென்றே மாது விடைகொடுத்து
சிறந்தில்ல மேபுகுந்து சிக்கெனவே தாழ்பூட்டி
ஒருவரு மேயறியா தொண்டொடியாள் தாதியவள்
விருப்பம தாயிருக்க வேலவரும் வள்ளியரும்
திருவஞ்சி நாட்டைவிட்டுத் தேவி கரம்பிடித்து
இருவருந்தா னென்று யிசைந்தே வழிநடந்து
அலைமோது வாரிதிசூ ழம்புவியி லேசிறந்த
மலையாறெல் லாங்கடந்து மன்மத பாணமெனும்
அல்லிமலர் முல்லை யசோகுமா புன்னையுடன்
மல்லிகை பிச்சி மலரிரு வாட்சிமுதல்
நெருங்கி யடர்ந்துதரு நின்றுமே பூச்சொரிய
மருங்குபூங் காவனத்தில் வந்து முருகனுமே
சந்தோஷ மிஞ்சிச் சரசமாய் வள்ளியுடன்
கந்தனுஞ் சேர்ந்து கலந்திருக்கும் வேளைதனில்
அகமகிழ்ந்து புள்ளினங்கள் ஆ ஊ வென் றேயாங்கு
மிகக்கதறி யேகூவ விண்மணியு தித்திடவே
அந்தரமாய் மங்கை அரண்மனையில் நங்கையவள்
சுந்தரஞ்சேர் காராவைச் சூதாயோர் கள்ளனுமே
பிடித்தேகக் கண்டகனுப் பேசப் பிரண்டெழுந்த
துடியிடையா ளப்போ துயின்றதோர் வள்ளியரைக்
காணுமல் நாலுதிக்குங் காரிகையைத் தான்பார்த்து
தோணும லேயோடிச் சொன்னுளே மன்னனிடம்
மன்ன னதுகேட்டு மாதுயரந் தானுகி
கன்னியின் காலடியைக் கண்டுதன் சேனையுடன்

தந்திரமா யாரணியந் தன்னை யனைவர்களும்
வந்து வளைந்தார்கள் மங்கையுடன் வேலனையும்
வள்ளியரைக் கன்னமது வைத்தே சிறையெடுத்த
கள்ளனுமே சிக்கினன்காண் கத்தா திருமெனவே
சூழ்ந்து சிலைவளைத்துச் சொல்லொணுப் பாணமதை
ஆழ்ந்தறிய மாட்டாமல் ஆறுமுகன் தன்மீதில்
கார்மேக மேழுங் கனத்தமழை பெய்ததுபோல்
கூர்மிகுந்த பாணமதைக் கோடான கோடியதாய்
சொரிந்தார்க ளப்போது சூரரஞ்சி யேநடுங்கப்
பொரியன லாய்ப்பறக்கப் போர்புரியுங் காலமதில்
மேவலரெல் லாமொடுங்க வேலவனு மக்கணத்தில்
சேவல் தனை நினைக்கச் சீக்கிரமாய் வந்ததுவும்
அண்டரண்ட முங்குலுங்க அண்டர் பயந்தொதுங்க
மண்டலத் தோர்தியங்க மாவேந்த ரெல்லோரும்
அஞ்சி நடுங்கிடவே ஆக்ரமித்துக் கொக்கரிக்கப்
பஞ்சதுவுங் காற்றிற் பரத்தலொப் பாமெனவே
அச்சத்தங் கேட்டே அனைவ ருயிர்விடுக்க
கச்சணிந்த கொங்கைமின்னுள் கண்டு பரதபித்தாள்.

வள்ளி புலம்பும்போது மாதவ நாரதர் வருதல்.

என்செய்வே னண்ணர்களே எந்தனு லுங்களுயிர்
இன்றிங் கிழந்தே எங்குநீர் சென்றீரோ
தந்தையரே இப்பொழுது சற்றுமுன்பின் பாராமல்
விந்தை பலசரங்கள் விட்டுமுயிர் பட்டீரோ
மடிந்ததோர் சேதிதனை மாதா வறிந்திடிலோ
மடிவாளே உங்களுடன் மண்ணில் விழுவாளே
தங்கையெனுஞ் சொல்லைத் தான்மறந் தண்ணர்களே
எங்கொளித் தீரெனவே ஏந்திளையா ளுங்களுடன்
பிறந்துமே சத்ராதிப் பேர்படைப்பே னேவெனவே
இறக்காம லின்னம் இருக்கிறே னென்றவுடன்

நாரதருந் தேடியங்கு நாடியே கந்தரிடம்
சாரமுட னேடிவந்து தாள்பணிந் தேதுரைப்பார்
அன்றுவள்ளி யைக்கண் டடுத்திடும் நாள்முதலாய்
இன்று வரைநடந்த தென்னவுரைப் பீரெனவே
காங்கேய னன்று கழறினு ராதிமுதல்
ஈங்கின்று தான்நடந்த தெல்லா முரைத்திடவே
நன்னு யிருந்ததுகாண் நாட்டி லிதையுணர்ந்தால்
அன்னுளோர் வேதிய னும் ஆரணியத் துட்போகக்
கூண்டிலடை பட்ட கொடும்புலி யன்னவனை
வேண்டியழைத் தென்னை வெளியேற்றி னுற்றருமம்
கிட்டுமையா வென்னக் கிருபையாய் வேதிய னும்
சட்டெனக்கூண் டுக்கதவைத் தாள்திறக்க வப்புலியும்
வெளியேறி வந்து விருந்தாயுண் பேனெனவே
வழியிற்செல் சம்பு வழக்குரைத்து மாயமதாய்
முன்போற் புலியதனை மூடியே வேதியனை
அன்பாயூ ருக்கனுப்பு மக்கதைபோ லாகாமல்
இப்பொழுதேவேடர்களை யிங்கெழுப்பவேண்டுமென்றே
செப்பிட வக்கணமே சிந்தைமகிழ்ந் தேவேலர்
நாரதர் சொல்லறிந்து நங்கைவள்ளிக் காயிரங்கி
வீரமுடன் கானகத்து வேடர் களையெழுப்ப
பஞ்சாட் சரமோதிப் பாவை கரங்கொடுத்தே
அஞ்சாமற் பெண்ணே அவர்களிட மேகியிப்போ
திருநீற்றை யள்ளித் திருமேனி யிற்றெளித்தால்
ஒருமித்தவ் வேடர் உயிர்பெற் றெழுந்திடுவார்
என்றுதிரு நீற்றை யெடுத்தளிக்க வேவாங்கி
அன்றுமனம் பூரித் தவர்களிடம் வந்துநின்று
திருநீ றதைத்தூவி சிந்தைமகிழ்ந் தேயழைக்க
அருமையுள தந்தையரும் அண்ணர் முதலோரும்
உயிர்பெற் றெழுந்துவர ஒண்டொடியாள் தான்கூட்டி
ஒயிலாக வேநடந்து ஓடியே யெல்லவரும்

வருமுன்னஞ் சண்முகனும் வண்ணமயில் வாகனராய்த்
திருமருகன் கானகத்திற் சேவை கொடுத்திடவே
எல்லவருங் காட்சியைக்கண் டேக பரவசமாய்ச்
சில்லர்கண்ணீர்ததும்பிச் சேவடியைப்போற்றிசெய்தார்
ஆனந்தங் கொண்டவரும் ஆறுமுக னேப்பணிந்து
மோன முதற்பொருளே மூத்தியருள் கற்பகமே
சோதிப் பரஞ்சுடரே சுப்ரமண்ய தேசிகரே
ஆதியே வுன்ற னடிமைக ளானவரை
ஏனேசோ தித்தி ரிவிடத்தில் வள்ளியரைத்
தானே வழைத்திங்கு தான்தனிய தாய்வருகக்
காரண மொன்றிலையே காங்கேயா யென்றனையும் [ரைத்
பூரணமாய்க் கேட்டால்நாம் பொற்கொடியாள் வள்ளிய
தரமாட்டோ மென்று நீர் தான்கருதி மாயமதாய்த்
திரமாக வீச்சாலஞ் செய்தே சிறையெடுத்தீர்
ஆனாலுங் குற்றமில்லை ஆறுமுகா இப்பொழுது
மானுளும் நீரும் வழிநடந் தெங்களுடன்
மேபாடி பட்டணத்தை மேவியே வந்திருந்து
மாபாடி யோரறிய வங்கிஷத் தோர்தெரிய
மற்றோ ருறவின்ரும் பெற்றோரும் நிச்சயமாய்க்
கற்றோருந் தாம்பூலங் கைமாற்றி யேவாங்கி
என்றன் மருமகனென் றெல்லோருஞ் சொல்லிடவே
உன்றன் மனைவியரோ டேரேகு வீரெனவே
அப்படியே செய்வோமென் றைய னுஞ் சம்மதித்து
செப்பு நிகர்தனத்தாள் செல்விவள்ளி யம்மையுடன்
நாரதரும் மற்றவரும் நாடி மனமகிழ்ந்து
பார வனங்கடந்து பட்டணமே சேர்ந்தார்கள்
அப்போது நம்பிமன்னன் ஆறுமுகன் றனையும்
ஒப்பிலா ரத்தினமா யுச்சிதசிம் மாசனத்தில்
அலங்கார மாக அமைத்ததின்பின் நாரதரை
இலங்குமணி யாசனத்தி லேவீற் றிருமெனவே

சாதி சனஞ்சகல சான்ருேரு மேதெரியப்
பேதமிலை யேயிவர்க்குப் பெண்கொடுக்கி ருேமெனவே
வேடரெல் லாங்கூடி வேலனுக்கு வள்ளியரை
நாடறியச் சொன்னுர்கள் நாயகியை நிச்சயஞ்செய்
தோமெனவே அச்சபையிற் சூழ்ந்து மகிழ்ந்திருந்தார்
ஆமெனவே வேலவனும் அங்குரைத்த சொற்கிணங்கி
ஆனந்தங் கொண்டேதா னுறுதலத் திற்சிறந்த
தானமெனக் கானவருஞ் சண்முகனும் வள்ளியரும்
திருப்பரங் குன்றமதிற் சேர்ந்தா ரனைவோரும்
விருப்பாய்ப் பரங்கிரியில் விற்பன்ன மாய்விளங்க.

### தேன்பரங்கிரியைச் சிங்காரித்தல்.

தங்கத்தாற் கால்நாட்டிச் சார்பவள மேபரப்பி
இங்கிதஞ்சேர் முத்தை யிணைமாலை யாய்த்தூக்கிப்
பச்சை பதித்ததொரு பாங்கான தோரணங்கள்
இச்சையாய் நாற்றிசைக ளெங்கு மொளிவீச
கமுகமரத் தோடொன்ருய்க் கன்னல் கதலிமரம்
குமுதம்பூச் சேரக் குலுங்க முகப்பினிலே
வச்சிரத்தி னுலே மணவரையு மேயமைத்து
உச்சித லஸ்த ருயர்குளோப் புந்தூக்கிச்
சேவற் கொடிநான்கு திக்கும் பறந்திலங்க
காவணங்க ளெத்திசையுங் கண்டோ ரதிசயிக்க
உம்ப ருலகமதற் கொன்பதுபங் காகுமென
அம்பலங்க ளெங்கும் அலங்கரித்தே யாவருமே
கல்யாணச் சேதியதைக் கண்டுகொள்ள வேடுவர்கள்
சொல்லி முரசைநகர் சுற்றி முழக்கிடவே
பலவித வாத்தியங்கள் பாங்கா யதிர்த்துவர
சிலரதனைக் கேட்டவுடன் சிந்தைமிக வேமகிழ்ந்தார்
முப்பத்து முக்கோடி தேவர் முனிவர்களும்
செப்பிடுவாய் நாற்பத்தெண் ணுயிரஞ்சேர் மாரிஷிகள்

கின்னரருங் காந்தருவர் கிம்புருடர் விஞ்சையரும்
சொன்னதோர் பூதகணஞ் சூழ்ந்து நெருங்கிவர
சம்பு சதாசிவனுந் தான்வெள் விடையேறி
அம்பிகையாள்தன்னுடனே அக்கிரியைச் சேர்ந்தனரே
வேதாவும் வேதமுடி மெல்லி சரஸ்வதியும்
ஓதிமத்தின் மீதி லுகந்தெழுந்து வேதண்டம்
வந்த டைந்த பிற்பாடு மாயன் ககபதிமேல்
சுந்தரச்சீ தேவியுடன் தோன்றியே வந்தனரே
அந்தச் சமயமதில் யானை முகத்தோனும்
மந்தகதி மூஷிகத்தில் வந்தார் பரங்கிரிக்கு
அஷ்ட திசை பாலகரும் அம்மைசத்த கன்னியரும்
இஷ்டம தாய்ப்பெரியோ ரெங்கெங் கினுமிருந்து
வந்திடவே பாவலரும் வந்து நிறைந்தனரே
அந்தச் சபையில் அரியோன்றன் குக்கியென
செப்பும் படியமைந்த சித்ரமுக மண்டபத்தில்
ஒப்புவமை யில்லாத ஒண்டொடியா ளூர்வசியும்
மேனகைதி லோர்த்தமையும் மிக்க நடனமிட
ஆனக மான துக ளானந்த மாய்முழங்க
பொன்னவிர் தேமல் பொருந்தும் பயோதரத்தார்
இன்னிசையைக் கேட்டுருகி யேழிசையாழ்பின்னிடுமாம்
இத்தனைவை போக மிலங்குந் திருச்சபைக்கு
அத்த னருள்குமரன் ஆறு முகப்பெருமான்
கந்தபன்னீர் நீராடி காண்டம் பணியணிந்து
அந்தர தேவருமே ஆசீர் வதித்திடவே
சந்தோஷ மாகவந்து தானே மணவரையில்
சுந்தரம் போலிருக்கத் தோகையர்வா காய்க்கூடித்
தேன்றுளிக்கும் பூமாலை சேர்கொண்டைக் காரியரும்
மானீன்ற வள்ளியற்கு மஞ்சன நீராட்டி
வாசப் புகையூட்டி வார்குழலைத் தான்வாரி
நேசமுடன் ரோஜாவால் நேராய்மா லைமுடித்துக்

காலனுங்கண் டஞ்சிடவே கண்ணிரண்டுக் கஞ்சனமும்
சீல மதிநுதலிற் செய்பதில கம்வரைந்து
இந்த்ரவர்னப் பட்டை யிடையதனிற் றூனுடுத்தி
சந்தோஷம் மிஞ்சியந்தத் தையலற்குக் கச்சணிந்து
எந்தெந் தவயவத்தி லேற்கு மெழிற்பணிகண்
டந்தந் தவயவத்தி லாயிழைக்க லங்கரித்து
திருஷ்டி கழித்தார்கள் தெய்வநங்கை யர்சூழ
திருப்போன்ற மங்கையர்கள் சித்திரந டம்புரிய
வெண்சா மரைவீச மெல்லியர்கள் பூச்சொரிய
தண்டா மரைமகளுந் தான்வந் துபசரிக்க
அன்ன மெனநடந்தாள் ஆயிழைமார் தன்னுடனே
இன்பம தாக இலங்குதிரு மண்டபத்தில்
கந்தவேள் பக்கமதிற் காரிகையாள் தானிருக்க
அந்தச் சமயமதி லாறுமுகன் றூன்பார்க்க
வேடக் குமரியற்கு வேறுருவம் வந்ததுகாண்
சேடன்மீ திற்றுயிலுஞ் செங்கண்மால் தன்மகள்போல்
தெய்வவுரு வந்தான் தெரியவவ் வேடர்களும்
வைபவமாய்ப் பார்த்து மகிழ்ந்திருக்கும் வேளைதனில்.

வள்ளியை முருகன் மணமுடித்தல்.

விருத்தம்.

வேதவே தியர்கள் தானுமே சூழ்ந்து
விதிப்படி யோமமுஞ் செய்ய
மாத்வ ராசி கூறியே புட்ப
வகைபல விரைக்கவுங் கந்த
நாதனுங் தேவ துந்துமி முழங்க
நங்கையாம் வள்ளிகங் தரத்திற்
சீதள முகராய் மங்கில்ய மதனைச்
சேர்த்துமே முடித்தன ரன்றே.

அம்மானை.

வேதங்க ளோதி விதிப்படி யெக்கியங்கள்
மாதவர்க ளோமம் வளர்த்தார்கள் வள்ளியரை
சண்முகன்றன் கையினிலே தான்பிடித் தேகொடுத்தே
பெண்மோகினியாள் பிரியமுடன் நீர்வார்க்க
நம்பிமகா ராஜனுந்தான் நாடி மனமகிழ்ந்து
அம்மைவள்ளி மாதை யடைக்கலமா யுன்றனக்குத்
தாரைவார்த் தேனெனவே தான்வார்த்த பிற்பாடு
பூரணமாய் வள்ளிதனைப் பெண்டாகக் கொண்டதனுல்
என்னாளுங் காதலுட னேயிருப்பாய் புண்ணியனே
இன்றேற் கிருபையும்வைத் தெங்களையுங் காப்பாயே
என்று நம்பி மன்னவனும் ஏற்றித் துதித்திடவே
அன்றவைமி லுள்ளோ ரனைவோரும் போற்றிசெய
சங்கீத மேளந் தவில்தேவ துந்துமியும்
அங்கொலிக ளார்ப்ப அரம்பைமுத லோராட
அன்னைதந்தை யர்முதலோ ராசீர்வா தம்புரிய
இன்பமதாய்க் கந்தருவ ரேற்றி மலர்தூவ
மங்களம தாகவள்ளி மாதரசி தன்கழுத்தில்
மங்கிலியஞ் சூட்டி மகிழ்ந்தார் முருகனுமே
ஈசனுஞ் சத்தி யிருவரு மச்சதைகள்
நேச முடனிரைக்க நேரிழைமார் சோபனங்கள்
பாட மயிலேறிப் பாவைபல் லாக்கில்வர
ஆடலுட னூர்வலம்வந் தாலயஞ் சேர்ந்ததின்பின்
சேவலுடை யோன்காம தேனுவைத் தானினைக்க
ஆவலுடன் வந்தங் கருகுநிற்க வேதுரைப்பார்
தேவர்கள் மாமுனிவர் சித்தர் குழாங்களுக்கும்
பாவலர்க்கும் நாவலர்க்கும் பாரவன வேடருக்கும்
பூதகணங் காந்தருவர் பொற்கருடர் யாவருக்கும்
நீதமுள நன்விருந்து நீயூட்டு வாயெனவே

அக்கண மாமென் றகமகிழ வெல்லோர்க்கும்
பக்குவஞ்சேர் நல்லமுதம் பால்நெய் பருப்புடனே
சாலக்கா யுங்கறியும் தக்கதயிர்ப் பச்சடியும்
மேலகத்தா ருண்டுவளர் விண்ணமுதந் தன்னுடனே
கன்னற்பா யாசங் கனிதேன் தினைமாவும்
பன்மைப் பலகாரம் பல்விதம தானதெல்லாம்
ஒவ்வொருவர் தன்மனதி லுற்று நினைத்தபடி
அவ்வவருக் கேபடைக்க அன்பாக வெல்லோரும்
போசனங்க ளுண்டுமிகப் பூரித் திருதோளும்
வாசமலர்த் தாரணிவோர் மண்டபத்திற் றூன்கூடி
சந்தனதாம் பூலஞ் சவாதத்தர் பன்னீரும்
கந்தமலர் மாலைகளுங் கண்ணியமாய்த் தான்வழங்கி
இந்துமுக மின்னார்கள் எல்லவர்க்குக் குங்குமமும்
கந்தகஸ் தூரி களபமலர் தந்திடவே
எல்லவர்க ளும்மகிழ்வுற் றேகுமரன் றூள்பணிந்து
நல்லவரம் பெற்றிலங்கு நாங்களுய் தோமெனவே
சீலமுள்ள தேவர் சிவசித்தர் முத்தருமே
ஆலமுண்டோ னோடங் கனைவோருந் தன்னகரம்
சென்றதின் பின்னே சிறந்ததொரு வேடுவரும்
நன்றிவரம் வாங்கி நகரடைந்த பிற்பாடு
புள்ளி மயிலேறும் புண்ணிய ராம்வடிவேல்
வள்ளி யுடன்கூடி வாழ்ந்திருக்குங் காலமதில்
சிந்தை மகிழ்ந்திருவர் தெய்வானை தானிருக்கும்
சுந்தரஞ் சேர்வளங்கள் சூழ்ந்த திருத்தணிகைக்
கன்புடனே வருக ஆனந்த மாகவுமே
அன்னைதெய் வானையரும் ஆறுமுகன் றூன்வருகும்
சங்கதியைக் கேட்டவுடன் சப்ரமஞ்சம் விட்டிறங்கி
மங்களமாய் வந்தே மலரடியிற் றூன்பணிய
சந்தோஷங் கொண்டவருந் தையலரைத் தான்வாழ்த்த
அந்தச் சமயமதி லாரணங்கு வள்ளியரும்

தெய்வானை மாதின் திருவடியி லேபணிய
உய்வாயெந் நாளும் உவந்திருப்போ மென்றுரைத்து
கூட்டியே சென்றனளே கோதையந்த வள்ளியரைப்
பாட்டையிலே முன்பின் பழகினவர் போலாக
தங்கமய மண்டபத்திற் றுன்வயிரக் கட்டிலின்மேல்
இங்கிருப்பீ ரென்றே யிருவரரு கேயிருக்கச்
சையோக மாய்ப்பேசித் தானேதெய் வானையுமே
ஐயனே மாதை யடைந்தவகை யேதெனவே
வேலவனைக் கேட்க மிகவிருப்ப மாய்மகிழ்ந்து
கோலவழ கிற்சிறந்த கோதையே யென்றுரைப்பார்
உலகளந்த மாயவற்கும் ஓர்விபுதை யென்பவட்கும்
நலமாக வேயுதித்து நாடி யெனைக்குறித்து
சரவணப் பொய்கையதிற் றுனே தவம்புரிய
வரங்கொடுப்போ மென்றேகி மாதிவளை யேகேட்க
மணந்துன்னைச் சேரும் வரந்தர வேண்டுமென்றாள்
அணங்கேநா முன்னை யடுத்ததோர் ஜென்மமதில்
மன்றல்செய் வோமெனவே மாதிவளுக் கேயுரைத்து
வென்றி யுடன்றிரும்பி மேவினோ னெந்நகரம்
அப்பாலிக் கன்னி யழகுவெள்ளி மாமலைச்சார்
பொப்பாரு மில்லா துயர்தவஞ் செய்திருக்க
அந்த வனந்தனிலே ஆயன் சிவமுனிபோல்
பந்த முட னுதித்துப் பாரிற் றவம்புரிய
அக்கணமே லக்குமியும் அக்கான கந்தனிலே
சிக்கெனவே துள்ளிச் சிறந்தமா னுகிவரக்
கண்டே சிவமுனியுங் காதல்கொண் டேசேர
வண்ணமுள்ள மான்றனக்கு மாகருவுண் டாகிடவே
தவமதனை விட்டிவளுந் தான்புகுந்தாள் மான்வயிற்றில்
கவனமுடன் மா னுமந்தக் கானகத்து வேடுவர்கள்

வள்ளிக் கிழங்கதனை வந்தெடுத்துச் சென்றதொரு
பள்ளமதி லேயிந்தப் பாவையரை யீன்றதுவும்
தன்னின மல்லவென்று தானோடிப் போய்விடவே
மன்னனம்பி ராஜனவன் மாதுடனே வந்தெடுத்து
வனப்பாக வேவளர்த்து மங்கைப் பருவமதில்
புனத்திற் றினையதனைப் பொற்கொடியாள் காத்திருக்க
மாயமதாய்ச் சென்று மயக்கியிவ ளைக்கவர்ந்தே
நேயமதாய் வருக நேரிழையாள் தந்தையரும்
வந்தா ரவர்களையுன் மத்தமெனக் குள்ளாக்கி
சந்தோஷ மாகவிந்தத் தையலரைத் தான்மணந்து
இங்குவந்தே னென்றே யியல்பா யுரைத்தசொல்லை
மங்கையருங் கேட்டு மனமகிழ்ந்து தங்கையெனத்
தெரிந்தேதெய் வானையருஞ் செவ்வேடனைச்சேர்ந்து
பிரியமுடன் குன்றமூவிப் பேணியிருந் தாரெனவே
நன்னயமாய்ச் சூதமுனி நாடிசவுன காதியர்க்குச்
சொன்ன புராணந் துலங்கு முறைப்படியே
சகல கலையுணர்ந்த சர்ச்சனர்கள் முன்பாக
புகழ்ச்சியுள்ள வாரணமும் போகக்கண் டாமையது
பாங்குட னதன்வாலைப் பற்றி நடந்ததொப்பாம்
பூங்கமழும் வேலரடி போற்றி முடிவணங்கி
இன்னுளிற் பால னியன்றமட்டி லம்மானை
சொன்னே னிதுகளிலே சொற்பொருளெ ழுத்தணியின்
தப்பிதங்க ளாராய்ந்து தந்தேயச் சேந்திரத்தில்
செப்ப முடனமைத்தித் தேசத்தோ ரும்புகழச்
செய்தருளும் புண்ணியவான் தென்மதுரைமாநகர்வாழ்
துய்யகவுரிகுலத் தோன்றலாய் வந்துபுவி
மெச்சு மணிநாவன் மேன்மைத் தமிழ்ப்புலவர்
பட்சம் மறவாத பாக்கியசி லர்க்கியவான்

தெம்புசெறி மாலைத் தினமுமய ராதகத்தான்
தம்புசா மிக்குரிசில் தன்றவத்தா லுற்பவித்த
கோதுரையா தென்மாதா கூடப்பிறந்த சொந்த
மாதுலன்குப்புச்சாமி மாமலர்ப்பா தம்பணிவேன்
சதுரகிரி மேவிவளர் சாமிமகா லிங்கரொடு
மதுரப் பலாவடியான் வாழிசுந்த ரர்வாழி
இந்தக் கதையதனை யின்பாய்ப் படிப்பவர்க்குச்
செந்தூர்க்கந் தன்னருளாற் செல்வந் தழைத்தோங்கும்
சீலமுட னிக்கதையைச் செப்பிடக்கேட் டோர்வாழி
ஞாலமதிற் பாவலரெந் நாளும் மிகவாழி
கோத்திரத்தி லேபால கோத்திரத்தெல் லோருஞ்சம்
பாத்திய முஞ்சகல பாக்கியமும் பெற்றோங்க
நூலுணரும் விற்பனர்கள் நோக்கங் கருணையினால்
பாலுசாமிக்கவிஞன் பாண்டியன் நாடதனில்
தெள்ளியவெண் செந்துறையால் செப்பும் மதுரமொழி
வள்ளியைக் கந்தன் மணந்தவம் மானையெனச்
சந்ததமுங் கொண்டாடச் சாற்றும் புலவனுமிச்
செந்தமிழும் வாழ்ந்திருக்கச் செப்பினன் வாழியதே.

விருத்தம்.

மங்கையோர் பாகன் வாழி வாரணமுகத்தோன் வாழி
சேங்கைவேற் குமரன் வாழி தேவிமா ரிருவர் வாழி
பங்கயன் மாலும் வாழி பாற்கவன் மதியும் வாழி
எங்கினும் [illegible]ாதி னிணையடி வாழி தானே.

முருகன் திருமணம் புரிந்த

வள்ளியம்மானை

முற்றுப்பெற்றது.